தொல் தடம்

இதழ் 1 | செப்டம்பர் - டிசம்பர் | 2025

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்
இணைந்து வெளியிடும்
தொல்லியல் - கலைப்பண்பாட்டியல் ஆய்விதழ்

தொல் தடம்

தொல்லியல் - கலைப்பண்பாட்டியல் ஆய்விதழ்

தொல் தடம்

தொல்லியல் - கலைப்பண்பாட்டியல் ஆய்விதழ்
இதழ் 1 | செப்டம்பர் - டிசம்பர் | 2025

இதழாசிரியர்கள்

முனைவர் இரா. சிவானந்தம்
முனைவர் சுந்தர் கணேசன்
திரு. காந்தி பாலசுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

முனைவர் சொ. சாந்தலிங்கம்
முனைவர் ர. பூங்குன்றன்
முனைவர் நா. மார்க்சிய காந்தி
முனைவர் ஆ. பத்மாவதி
முனைவர் இராசகோபால் சுப்பையா
பேரா. பக்தவத்சல பாரதி
பேரா. வீ. செல்வகுமார்
முனைவர் ஜெ. சுடர்விழி
முனைவர் கோகுல் கிருஷ்ணன்

ஆலோசகர் குழு

திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.
திரு. ஆர். பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. (ப.நி.)
பேரா. கா. ராஜன்

ஒருங்கிணைப்புக் குழு

முனைவர் வி. ப. யதீஸ்குமார் , திருமிகு கி. பாக்கியலட்சுமி
முனைவர் சே. தனபால், விக்னேஷ் சீனிவாசன்
ம. மணிகண்ட சுப்பு, சு. அருண் பிரசாத்

மின்னிதழ் வடிவமைப்பு

ம. மணிகண்ட சுப்பு, கு. அருண்
ரஞ்சித் ரூஸோ, பிரபஞ்ஜா ஆனந்தகுமார்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தமிழ் வளர்ச்சி வளாகம், தமிழ் சாலை
எழும்பூர், சென்னை – 600 008.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம்
சிந்துவெளி ஆய்வு மையம்

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
3வது குறுக்குச் சாலை, தரமணி
சென்னை - 600 113.

The articles in this magazine are the opinions of the authors and do not necessarily reflect the opinions of the publisher. Publisher is not responsible for the accuracy of the articles. The publishers are not liable for any damages that may result from the use of these articles.

வாழ்த்துச் செய்தி

திரு. தங்கம் தென்னரசு

மாண்புமிகு நிதி, சுற்றுச்சூழல் & காலநிலை மாற்றம் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர்

தமிழ்நாட்டில் நடைபெறும் தொல்லியல் ஆய்வுகள் தமிழ்ப் பண்பாட்டின்மீதும் தமிழ் மக்களின் வரலாற்றின்மீதும் புதிய ஒளிகளைப் பாய்ச்சி வருகின்றன. சமீபத்தில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட 'இரும்பின் தொன்மை' உலகின் கவனத்தை ஈர்த்தது.

தமிழ்நாட்டில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அறிந்து அவ்விடங்களில் தொடர்ந்து அகழாய்வுகள் மேற்கொள்வதற்கான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை மேற்கொண்டு வருகிறது.

இந்த அகழாய்வுகள் உண்மையான வரலாற்றை உலகிற்கு அறிவிக்கும். இந்தியத் துணைக்கண்ட வரலாறு தென்கோடி நிலப்பகுதியில் இருந்து எழுதப்பட வேண்டும். இங்கு அதற்கான அனைத்து அகழாய்வுத் தரவுகள் கிடைக்கப்பெறுகின்றன.

இதனை வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியலாளர்கள் உள்ளிட்டோர் தொடர்ந்து எழுதி உண்மையான வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். இவற்றை தமிழ்நாடு மக்களிடையே கொண்டு செல்வதும் முக்கியமான பணியாகிறது. அத்தகைய பணியை மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகமும் இணைந்து தொல்தடம் என்னும் தொல்லியல் – கலைப்பண்பாட்டியல் மின்னிதழைக் கொண்டுவருவது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்த இதழ் உண்மையான வரலாற்றை மீட்டெடுப்பதோடு, தெற்கிலிருந்து வரலாற்றை நோக்குவதற்கான புதிய பாதையை வகுத்தளிக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

வாழ்த்துச் செய்தி

திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப.,

தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை
மற்றும் தொல்லியல்துறை ஆணையர்

தமிழ் மரபும் பண்பாடும் உலகின் பழமையானது சிறப்புமிக்கது. இந்த அற்புதமான மரபைப் பாதுகாப்பதும், அதன் பெருமையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லவும், தமிழ்நாடு அரசு மிகுந்த அக்கறையுடன் பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.

தொல்லியல் ஆய்விதழ்களில் கல்வெட்டு மரபின் தொடர்ச்சியாக, இன்றைய காலத்துக்கேற்ப, புதுமையுடன் பல்வேறு வரலாற்று நிகழ்வுகளும், தமிழர் மரபும் பண்பாடும் எடுத்துரைக்கும் முயற்சியாக தொல் தடம் ஆய்விதழ், இணைய இதழாக உருவாகியுள்ளது. நீண்டகாலமாக இருந்துவந்த ஒரு வெற்றிடத்தைத் தொல் தடம் ஆய்விதழ் போக்கியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது.

தொல் தடத்தின் இலச்சினை தமிழ் எழுத்துகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அது நமது தொன்மைக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தையும், தமிழின் அடையாளத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

நமது வரலாறு, தமிழின் பங்களிப்பு, அகழாய்வு, அன்றாடம் வெளிவரும் பண்பாட்டுச் செய்திகள், புதிய கண்டுபிடிப்புகள், பல்துறை ஆய்வுகள் ஆகியவற்றை எளிமையாகவும் ஆர்வமூட்டும் வகையிலும் மக்களிடம் கொண்டுசேர்ப்பது தொல் தடம் ஆய்விதழின் முதன்மை நோக்கமாகும்.

தொல் தடம் ஆய்விதழ், தொல்லியல் ஆய்வாளர்கள் அல்லது கல்வியாளர்களுக்காக மட்டுமானது அல்ல; இந்த முயற்சி முதன்மையாக பொதுமக்கள் அனைவரையும் சென்றடைவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. தொல் தடம் இதழின் இக்கட்டுரைகளும் ஆய்வுகளும் இணையம்வழி எளிதில் வாசிக்கக் கூடியவையாக இருக்கும். தமிழின் செழுமையான மரபு, அதன் தொன்மை, பண்பாடு ஆகியவை அனைவருக்கும் நெருக்கமாக உணர்த்தப்படுவதே இதன் குறிக்கோள் என்பதைப் பெருமையுடன் பகிர்கிறேன்.

இவ்விதழின் வெளியீட்டில் பங்களித்த அறிஞர்களுக்கும் புதிதாக இணைந்திருக்கும் ஆர்வலர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சிந்துவெளி ஆய்வு மையமும் இணைந்து மேற்கொண்டுள்ள இந்த முயற்சி போற்றுதலுக்குரியது.

நமது நோக்கம் தெளிவானது; தமிழின் தொன்மையை உலகறியச் செய்வது; அதன் பெருமையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்வது; அதன் செழுமையான வரலாற்றை ஒவ்வொருவர் மனதிலும் விதைப்பது!

தொல் தடம் வழியாக நமது மரபின் சுவடுகளை ஆழமாக அறிந்தகொள்ளும் வாய்ப்பு ஒவ்வொருவருக்கும் கிடைக்கிறது. தமிழின் தொன்மையைப் பற்றி அறிந்துகொள்வதன் மூலம், நம் அடையாளம் எவ்வளவு வேரூன்றியதும் வலிமையானதுமாக உள்ளது என்பதை நாம் அனைவரும் பெருமையுடன் உணர முடியும்.

இந்நிகழ்வை ஒரு தொடக்கமாகக் கொண்டு, தமிழின் பாரம்பரியத்தைப் பரப்பவும், பாதுகாக்கவும், அனைவரின் ஒத்துழைப்பையும் எதிர்நோக்குகிறேன்.

தமிழ் மரபு – தமிழர் பெருமை!

தமிழ் பண்பு – உலகின் செல்வம்!

தொல் தடம் இதழ் குழுவினருக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துகள்.

Contents

1	*Historic Musical Inscription – Dr. S. Subbulakshmi*	11
2	*From Ruins to Reality Virtual Reconstruction of Heritage Artefacts – J. Ganesh Hariramana, V. Santhosh, Sudhakar Nalliyappan & M. Chandhiran*	16
3	திருவண்ணாமலையில் பிற்காலப் பாண்டியர் எழுச்சி - ராஜ் பன்னீர் செல்வம்	21
4	தமிழகத்தில் பலிச்சடங்குகள் தொன்மையும் தொடர்ச்சியும் - முனைவர் மு. ஏழுமலை	26
5	கள ஆய்வில் காணப்பெற்ற கலைச்செல்வங்கள் - கி. ஸ்ரீதரன்	35
6	"கல்வெட்டுப் பிரிவை டெல்லி மாற்றாந்தாய் மனநிலையில் அணுகுகிறது" முனைவர் இராசகோபால் சுப்பையா நேர்காணல் - விக்னேஷ் சீனிவாசன்	39
7	முதுவாய்ப் பல்லி புலவர் மரபு காட்டும் குறியீட்டுப் புலப்பாடு - மு. சத்தியா	43
8	பட்டறைப்பெரும்புதூர் அகழாய்வு - முனைவர் ஜெ. பாஸ்கர்	50
9	*The Economic Impact of Temple Building during Chola Times The Olakkur Fragment - J. Sreegururaj*	56
10	சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல் - முனைவர் சுந்தர் கணேசன்	61
11	கல்வெட்டாய்வாளர் ஹூல்ஷ் அவர்களின் வாழ்வும் பணியும் - முனைவர் மார்க்சிய காந்தி	65
12	*Virtual Reality as a Tool – for Digital Archiving and Preservation in Archaelogical Research – Dr. S. Deepika*	69

Historic Musical Inscription

Dr. S. Subbulakshmi

Dr. S. Subbulakshmi

Abstract

History is an attempt made by man through centuries to reconstruct, describe and interpret the past. Inscriptions are the most reliable source of ancient history as they are devoid of myths. Inscriptions form an essential and prime component especially when we study ancient and medieval periods. Inscriptions and books are the best examples of written sources of History. They are pieces of evidence of the past. Musical inscriptions are very important for historians and musicologists. The Inscriptions corroborate information about data and location of the significant events, trace details of royal genealogies and provide an insight into early Indian political structure, religious and cultural practices. It also shows the highly evolved technical knowledge in music of the ancient Tamils. The fourth century Arachalur inscriptions showing the musical knowledge of that period is incredible.

Keywords

Inscription, rock- cut cave, Jain beds, musical syllables, Jathis

Introduction

Every country has a rich cultural heritage. Europe, China, India are places with very rich cultural heritage. History is a record of the past and it must be understood properly. Culture is a vast domain that encompasses various aspects such as dance, music, language, and other intangible heritages. History is at the mercy of sources. You cannot have history without proper understanding of sources. Each region has preserved sources which tell us about our past. One of such important sources is inscription. Inscriptions are Primary and literary sources of research.

Inscriptions

An Inscription is a form of writing carved into durable materials such as stone or metal. These inscriptions often depict significant events from the past. Inscriptions are important specimens for chronology because they are often physical objects contemporary in execution with their contents. Inscriptions and literary texts are among the most important written sources of history, offering concrete evidence of past cultures and practices. Musical inscriptions hold great significance for both historians and musicologists. Since they are engraved on rocks, many have survived to the present day. In India, inscriptions carved on stone and other enduring materials have been a key source of historical information since the beginning of the 4th century CE. Notable examples include the Arachalur rock- cut cave musical inscription of the 4th century, the Kudumiyan malai musical Inscriptions of 7th century and the tăla inscriptions of 14th century. These shows the highly evolved technical knowledge in music of the ancient Tamils.



Arachalur Inscription



Inscription

Ta	Tai	Ta	Tai	Ta
Tai	Ta	Te	Ta	Tai
Ta	Te	Tai	Te	Ta
Tai	Ta	Te	Ta	Tai
Ta	Tai	Ta	Tai	Ta

Musical syllables of Arachalur Inscription

Arachalur Musical Inscriptions

Arachalur inscription is a rock-cut cave musical inscription. This rock- cut historical site of musical inscription is situated at the south of Nagamalai hills in Arachalur Reserve forest near Erode in Tamil Nadu. It belongs to 4th Century CE. There are three Jain inscriptions in Arachalur on a Jain bed. Out of three two inscriptions have musical syllables in Palindromic pattern that are the same when read from left to right and vice versa and they are also the same

when read from the top to the bottom and vice versa. These inscriptions show that "Manian" or "Muniyan" Vannakkan Devan Sathan has organized these musical syllables. It is much earlier than kudumiyanmalai inscriptions in music.

Analyzation of the Inscription

Jathi pattern in Bharatha Nattiyam

This inscription appears to resemble a jathi pattern, typically used by the nattuvanar — the teacher and principal conductor of a dance performance. The music syllables Ta, Tai, Taa, Te, are known as sollu- kattu or jathis in tamil.

Ancient 6th Century thevaram speaks about jathis

1. Nan mādhar jathi pada mānadam Aādi - 2.96.3 (Sambandar thevaram)
2. Jathi vazhi varuvadhor Sathire - 3.98.2 (Sambandar thevaram)
3. Kudamuzha jathi vazhiye kooththada valla - 6.83.3 (Appar thevaram)
4. Koodiya layam jathi pizhaiyaamai - 7. 69.2 (Sundarar thevaram)
5. Sathiyum serum thālla orththu - 1466 (Pingala Nigandu)

In percussion instrument players also use tāla syllable (sollu-kattu) but they will not use "thai" which is specific to Dance. But they substantiate that they are rhythmic syllables.

Palindrome pattern

Palindromes are the literary beauties which are one of the decorative features of musical compositions. A palindrome is a form of wordplay—a word or sentence that reads the same forwards and backwards, from left to right or right to left. In tamil it is called "Mālai mātru" (A garland of beads which can be counted on either sides during japa or prayer). In Bharatanatyam, a similar principle is observed in the performance of jathis, where movements executed on the left side are customarily repeated on the right. This can also be considered a kind of palindrome pattern.

Jathi syllables

In this inscription, the syllables used are ta, taa, tai, and te—four in total. Through permutations and combinations, these syllables form five-line jathi patterns, with each line consisting of five syllables. The basic consonant is "t", which, when combined with various vowels (a, aa, ai, e), produces the four distinct syllables. These syllables, arranged in different sequences, create intricate rhythmic patterns that exemplify the structural beauty of jathis in classical music and dance.

First line	Ta	Tai	Ta	Tai	Ta
Second line	Tai	Ta	Te	Ta	Tai
Third line	Ta	Te	Tai	Te	Ta
Fourth line	Tai	Ta	Te	Ta	Tai
Fifth line	Ta	Tai	Ta	Tai	Ta

These lines can be read on both sides which is palindrome pattern

From left to right or from right to left for example Ta Tai Ta Tai Ta can be read on either side which results in the same.



First line	Ti	Ta	Tai	Ta	Ti
Second line	Ta	Ti	Ta	Ti	Ta
Third line	Tai	Ta	Ti	Ta	Tai
Fourth line	Ta	Ti	Ta	Ti	Ta
Fifth line	Ti	Ta	Tai	Ta	Ti

From top to bottom or bottom to top for example Ta Tai Ta Tai Ta can be read on either side which results in the same.

Thus the whole Inscription with five lines conveys palindrome pattern which reveals the Ancient Tamils powerful skill of coining jathis in a poetic manner.

Second part of the Inscription

In Arachalur, following the first part of the inscription there is another inscription, which is incomplete. This portion is also structured in five lines. The first and third lines are complete, each containing five syllables. However, the second line has only one syllable, while the fourth and fifth lines contain two syllables each. This means that four syllables are missing in the second line and six in total (three in each line) are missing from the fourth and fifth lines—making a total of ten missing syllables. The structure of the lines suggests a palindrome.

To solve this problem, we have to rearrange these syllables to acquire a full five-line musical inscription. Hence it shows a palindrome, by using permutation and combination we can



obtain a full five-line jathi pattern. In this inscription only three syllables are used: ta, ti, tai. (Iravatham Mahadevan, 2003: 443)

The symbol which is the first syllable in the first line mentioned as 'kai' and it is simultaneously mentioned as 'kai' in all places in the whole inscription. It is my suggestion that this syllable 'kai' may be replaced or renamed as 'Ti'.

Reason for replacing

In the first part of the inscription all the syllables used are with the letter 'T' and its series Ta, Te, Taa, Tai. The second one is also an exactly similar musical inscription with rhythmic syllables in five lines, but it is incomplete.

'T' series varieties are derived from vowels a,e,i,o,u. So for the syllable 'T' we can arrive ta, te, ti, to, tu respectively. We have already used ta, taa, te, tai. Here we can use ti which is a syllable of 'T' series instead of kai. 'Kai' is a syllable of 'K' series. The symbol for kai also looks like other T series symbol only.In addition to that, usually in the field of music and dance all the jathi patterns (at present) are constructed with T series only.

- The basic syllables of Percussion instruments are - ta, ti, tom, nam.
- The basic syllables of Bharathanatyam are - ta, tai, ti, tit, tom.
- The syllables of k like kum, kita, takita are used later.

Jathi pattern in Kandam:

Kandam is a technical term used for five number patterns in karnatic music. Any phrase or jathi in the form of five letters or syllables is called kanda gati. Here these inscriptions are on kandam pattern (five per line). In Karnatic music there are five types of gatis. Musicians using these gatis show a higher standard of expertise in that field.

1. Tisra Gati – 3 syllables
2. Chathusra Gati – 4 syllables
3. Kanda Gati – 5 syllables
4. Misra Gati – 7 syllables
5. Sangirna Gati – 9 syllable

Here in these Inscriptions the jathi pattern is set in Kanda gati. This inscription shows the advanced highly commendable knowledge of the musicians of ancient period particularly to fourth century.

Conclusion

This inscription shows the Ancient Tamils had highly commendable knowledge of creating such patterns. Secondly it also shows the brilliant sculptors knowledge of understanding to make the rock cutting. This fourth century Inscription reveals the excellence of Ancient Tamils in music and layam (thālam). The Inscriptions corroborate information about music and dance and provide an insight into early cultural practices.

Bibliography

1. Basham, A.L. *A cultural history of India.* Oxford: Clarendon Presss.1975.
2. Chelladurai, P.T. *Splendour of Music.* Dindugal: Vaigarai Publishers.2000.
3. Jeyalakshmi, S. *History of Tamil Music.* Madras: University of Madras. 2003.
4. Mahadevan, Iravadam. *Early Tamil Epigraphy from the Earliest Times to Sixth Century.* Cambridge: Harvard University Press. 2003.
5. Nilakanta Sastri, K.A. *A History Of South Indian Music.* NewDelhi : OUP 1955 Reprinted 2002.
6. Premalatha, V. *Kudumiyanmalai Inscription on Music.* Madras: Music Research Library accessed Jan 20. 2023.
7. Sridar,T.S. *Select Inscriptions of TamilNadu,* Tamilnadu State Department of Archaeology. Government of Tamil Nadu. 2006.

Professor Dr. S. Subbulakshmi is a distinguished scholar and educator in Tamil music and education in India. Her accomplished career includes leadership roles as former Dean of VELS University's School of Music & Fine Arts and retired Principal of T.N. Govt. Music College, Madurai. Her extensive knowledge is reflected in numerous publications and active involvement with the UGC. A respected authority, she has guided doctoral students and served on expert panels, earning prestigious awards for her contributions. **kavinthree@gmail.com**

From Ruins to Reality
Virtual Reconstruction of Heritage Artefacts

J. Ganesh Hariramana, V. Santhosh, Sudhakar Nalliyappan & M. Chandhiran

J. Ganesh Hariramana

Abstract

India, with its vast array of archaeological sites and monuments, requires a skilled workforce trained in Cultural Heritage Management (CHM). However, the abundance of ancient remains presents a significant challenge for the limited number of trained professionals, including archaeologists and local heritage activists, in their efforts to protect these sites from decay and vandalism. While there has been considerable momentum within the archaeological community for digital documentation through 2D photography, 3D documentation and reconstruction remain in their early stages, demanding extensive multidisciplinary research. Over the past two decades, the scope and potential of digital reconstruction in CHM have garnered global attention. This study focuses on the scope, methodology, and limitations of digital reconstruction of select artifacts at the Coimbatore State Archaeological Museum. By adhering to local methods and techniques, this study aligns with the implementation guidelines set forth by the ICOMOS in the Seville Principles, the International Principles of Virtual Archaeology.

Keywords

Digital heritage, 3D reconstruction, photogrammetry, cultural heritage preservation, virtual archaeology, Tamil Nadu

Introduction

India accounts for more than 500,000 heritage sites and monuments, around 4377 State Archaeology Protected Monuments and more than 400,000 Religious Heritage Sites.[1] And the Government of Tamil Nadu has declared 105 historical monuments and 3 archaeological sites totalling 108 monuments as "Protected historical monuments".[2] Protecting the extensive historical evidence from deterioration and vandalism is a challenge for the limited number of specialists, such as archaeologists and epigraphists. Digital documentation and conservation, utilizing technologies like 3D scanners, photogrammetry, and LiDAR, offer significant advantages for virtual reconstructions and educational or tourism purposes worldwide. The 2015-destroyed Temple of Baalshamin in Palmyra was digitally reconstructed using 3D visualization, showcasing digital reconstruction's future potential. (Mazzacca, et al. 2023).

The study focused on three antiquities from the Ancient Industrial Artefacts Museum in Coimbatore: a ceramic ware and stone sculptures of Durga and

1 The figures from NITI Aayog's "Working Group Report on Improving Heritage Management in India" (Mar 2020) may differ from those in the "Challenges faced in Heritage Management in India and Policy Imperatives" (Oct 2021), which found only 7% of mapped heritage structures protected.

2 These figures are referred from Department of Archeology's Policy Note of 2024-25, Demand No.29.

Murugan, all of which were damaged or broken. The damage was categorized as low, medium, or high based on the percentage of missing areas. For their hypothetical reconstruction, existing literature on iconography (T.A. Rao 1912, Jouveau-Dubreuil 1937) and available 2D data were referenced. The reconstruction process adhered to the Seville Principles, International Principles of Virtual Archaeology (ICOMOS 2017).

The scope and potential of digital reconstruction in aspects of education and virtual tourism is widely researched in the past two decades (Bent, et al. 2022, Mazzacca, et al. 2023, Adamczak, et al. 2024 and Garcia, et al. 2024). And the bibliometric analysis of Garcia et al. 2024 has found that impetus for virtual 3D reconstructions of Cultural Heritage is distributed among: Preservation (54%), Musealization (30%), Education (12%), and Research (4%). The present study aligning with the Seville Principle 7.2 & 7.3, tries to document select antiquities from the Coimbatore museum for the purpose of education and research. Also, highlights the methods and limitations in arriving at an authentic local model of reconstruction in Cultural Heritage Management (CHM).

Research Methodology

John Marshall's Conservation Manual (1923) serves as a fundamental guide to the principles of reconstruction. However, the application of these principles is limited in the contemporary Indian context, as noted in NITI Aayog's working report on Heritage Management (March 2020). According to ICOMOS's charter (1990), reconstructions serve two main purposes: experimental research and interpretation. The Seville Principles (Principles 2.1, 3, 4, 5.2, 5.4, and 7.1) emphasize that digital visualizations should complement physical conservation, remain authentic to the original, and be approached with scientific rigor and transparency.

This study focused on three antiquities: a Black and Red Ware (BRW) pottery (14 x 9cm) from the Megalithic Period (Perur), a stone sculpture of Durgai (114 x 55cm) of an unidentified period, and a 13th-century stone sculpture of Murugan (136 x 95cm) from Kadathur. Based on their physical damage, they were categorized as Low (<25%), Medium (25%-50%), and High (>50%). The BRW pottery was classified as Low damage, the Murugan statue as Medium damage, and the Durgai statue as heavily damaged.



Image 1: In the initial stage, 180 photos of the pottery were taken from various angles using a DSLR and 50mm lens, with proper lighting for accurate scaling. These images were processed with Reality Capture, involving alignment, masking, mesh creation, and texturing, and then refined in Blender for further optimization.

Image 2: Textures and details from the high-poly model were baked onto the low-poly version. Blender tools were used to address gaps and restore missing parts with final touches made to model's texture.

Durgai (High Damage <75%) | Murugan Medium Damage <50%) | BRW Pottery (Low Damage <25%)

Image 3: The upper panel shows the original images in their damaged condition, ranked from most to least damaged. The lower panel displays the reconstructed images.

For the 3D visualization of the BRW pottery, references were drawn from similar, minimally damaged pieces. The texture and mesh models were carefully worked within the pottery. For the digital reconstruction, Free and Open Sources like Blender, Reality Capture, Meshroom and Sketchfab were used optimally. The 3D reconstruction process comprises three main stages, each with several crucial steps.

1) Photogrammetry
2) Creating 3D Mesh Model
3) Sculpting and Texturing (Refer Image 1&2).



Image 4 : Picture 1 was refered from Gopinatha Rao's *Elements of Hindu Iconography*, Picture 2 was collected by the author from National Museum, New Delhi and Picture 3,4,5 & 6 were collected from online sources

For the 2D reconstruction, photography with natural lighting captured the models. For the 2D visualizations of Durgai and Murugan, iconography and earlier images from various sources were analyzed (Refer Image 4). Gopinatha Rao describes Durgai as having a fierce expression and multiple arms, each symbolizing war weapons. The Durgai statue's legs, weapons, and Murugan's front hands were carefully detailed. Adobe Photoshop was used for 2D reconstruction, utilizing 32 layers for both statues, ensuring the original images' integrity was preserved throughout the process. The result achieved intricate detail in both sculptures.

Results and Conclusion

As these were speculative models, they were reconstructed carefully to prevent misrepresenting the original forms. The main limitation of photogrammetric reconstruction is that digital scaling cannot be highly accurate, requiring reliance on physical measurements instead. The rendered 3D model of the BRW pottery is published online[3]. The selected stone sculptures required insights from various iconographic sources and other online image sources, all with due credits. The reconstructed images can be seen from Image 3. This study showcases the potential of digital technologies in conserving cultural heritage. Through photogrammetry, 3D modelling, and digital sculpting, damaged antiquities were reconstructed, benefiting education, research, and virtual tourism. Future directions include 3D printing for physical replicas, AI-enhanced predictive modelling, and expanding digital archives. These innovations will help preserve historical artefacts for future generations.

3 For the 3D view of the BRW Pottery please visit: https://sketchfab.com/3d-models/brw-pottery-reconstruction-4bedd39cc4c449fcabcd50d8f03840a6

Bibliography

1. Adamczak, Kamil, et al. "*Digital restoration and 3D visualisation of the early Neolithic pottery from Rynsk, Poland.*" Digital Applications in Archaeology and Cultural Heritage, 2024: 1-7.

2. Bent, George R., David Pfaf, Mackenzie Brooks, Roxanne Radpour, and John Delaney. *"A practical workfow for the 3D reconstruction of complex historic sites and their decorative interiors: Florence As It Was and the church of Orsanmichele."* Heritage Science, 2022: 1-17.

3. Bruno Rodriguez-Garcia, Henar Guillen-Sanz, David Checa, and Andres Bustillo. *"A systematic review of virtual 3D reconstructions of Cultural Heritage in immersive Virtual Reality."* Multimedia Tools and Applications, 2024.

4. DRONAH, NITI Aayog. *Challenges faced in Heritage Management in India and Policy Imperatives.* NITI Aayog, Government of India, 2021.

5. ICOMOs. *CHARTER FOR THE PROTECTION AND MANAGEMENT OF THE ARCHAEOLOGICAL HERITAGE.* Charter, ICAHM, 1990.

6. ICOMOs. *THE SEVILLE PRINCIPLES:INTERNATIONAL PRINCIPLES OF VIRTUAL ARCHAEOLOGY.* 19th ICOMOS General Assembly, New Delhi, 2017.

7. Jouveau-Dubreuil, G. *Iconography Of Southern India.* Paris: Librairie Orientaliste Paul Geuthner, 1937.

8. Mazzacca, G., A. Karami, S. Rigon, E.M. Farella, P. Trybala, and F. Remondino. *"NeRF FOR HERITAGE 3D RECONSTRUCTION." The International Archives of the Photogrammetry, Remote Sensing and Spatial Information Sciences,* 2023: 1051-1058.

9. NITI Aayog. *Improving Heritage Management in India.* Working Report, Government of India, 2020.

10. Rao, T.A. Gopinatha. *Elements of Hindu Iconography.* Madras: The Law Printing House, Mount Road, 1914.

11. Sthapathi, Ganapathi. *சிற்பச் செந்நூல்.* Chennai: Government Printing Press, 2001.

Acknowledgement

The authors would like to formally express their heartfelt thanks to the Government of Tamil Nadu, the Department of Archaeology, Thiru. D. Prakash (Project Coordinator of the Loose Sculpture 3D Digital Documentation) for his review and suggestions, and Dr. K. Suresh (Archaeological Officer of the Ancient Industrial Artefacts Museum in Coimbatore) for their invaluable support, which made this research possible.

J. Ganesh Hariramana is a Research Expert with the Department of Archaeology, Government of Tamil Nadu, specializing in Loose Sculpture 3D Documentation. **lscbe.tnsda@gmail.com**

Santhosh Velmani is a Skilled Expert in Loose Sculpture 3D Documentation at the Department of Archaeology, Government of Tamil Nadu.

Sudhakar Nalliyappan is a Semi-Skilled Expert involved in Loose Sculpture 3D Documentation for the Department of Archaeology, Government of Tamil Nadu.

M. Chandhiran is a Research Assistant working on Loose Sculpture 3D Documentation at the Department of Archaeology, Government of Tamil Nadu.

திருவண்ணாமலையில் பிற்காலப் பாண்டியர் எழுச்சி

ராஜ் பன்னீர் செல்வம்

ராஜ் பன்னீர் செல்வம்

ஆய்வுச்சுருக்கம்

திருவண்ணாமலை என்னும் ஊர், வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு இன்றைய நவீனயுகம் வரை, நெடும் வரலாற்றுத் தரவுகளோடு தொடர் இயக்கத்தில் இருந்துவரும் நிலப்பரப்பு. குறிப்பாக பல்லவ, சோழ, பாண்டிய, போசாள, விஜயநகர, நாயக்க மன்னர்களும், பிரெஞ்சு – ஆங்கிலேய காலனிய ஆதிக்கத்திலும் இவ்வூர் இருந்துவந்துள்ளது. அதேசமயம் பல புதிர்களை நமக்கு அளிக்கும் வரலாற்று நிகழ்வுகளையும் இம்மண் நமக்குத் தர மறக்கவில்லை. 400 வருடச் சோழ சாம்ராஜ்ஜியத்தின் ஆதிக்கம், இந்நிலப்பரப்பில் இருந்தபோதிலும், பார்போற்றும் தஞ்சைக் கோவிலைக் கட்டிய ராஜராஜ சோழனின் சுவடுகள் இவ்வூரில் தென்படவில்லை என்பது வரலாற்று உலகில் இன்றளவும் கேள்விக்குறியாக, பேசுபொருளாக உள்ளது. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இப்பகுதியில் நிலவிய அரசியல் சூழல் பற்றிய புதிர்களை, இதுவரை கண்டறியப்பட்டுள்ள தரவுகள் மூலம் இக்கட்டுரையில் பார்க்கலாம்.

திறவுச்சொற்கள்

திருவண்ணாமலை, பாண்டியர், மாணிக்கவாசகர், நிவந்தம், இடைக்காலம், அண்ணாமலையார்

திருவண்ணாமலை என்னும் ஊர், வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு இன்றைய நவீனயுகம் வரை, நெடும் வரலாற்றுத் தரவுகளோடு தொடர் இயக்கத்தில் இருந்துவரும் நிலப்பரப்பு. குறிப்பாக பல்லவ, சோழ, பாண்டிய, போசாள, விஜயநகர, நாயக்க மன்னர்களும் பிரெஞ்சு - ஆங்கிலேயக் காலனிய ஆதிக்கத்திலும் இவ்வூர் இருந்துவந்துள்ளது. அதேசமயம் பல புதிர்களை நமக்கு அளிக்கும் வரலாற்று நிகழ்வுகளையும் இம்மண் நமக்குத் தர மறக்கவில்லை. 400 வருடச் சோழ சாம்ராஜ்ஜியத்தின் ஆதிக்கம், இந்நிலப்பரப்பில் இருந்தபோதிலும், பார்போற்றும் தஞ்சைக் கோவிலைக் கட்டிய ராஜராஜ சோழனின் சுவடுகள் இவ்வூரில் தென்படவில்லை என்பது வரலாற்று உலகில் இன்றளவும் கேள்விக்குறியாக, பேசுபொருளாக உள்ளது. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் இப்பகுதியில் நிலவிய அரசியல் சூழல் பற்றிய புதிர்களை, இதுவரை கண்டறியப்பட்டுள்ள தரவுகள் மூலம் இக்கட்டுரையில் பார்க்கலாம்.

சோழர் வீழ்ச்சியும் பாண்டியர் எழுச்சியும்

கி.பி. 1216ஆம் ஆண்டு மூன்றாம் குலோத்துங்கனை வீழ்த்தி ஆயிரம்தளியில், முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் வீராபிஷேகம் செய்துகொண்டார். அதன்பின்னர் மணஉறவு காரணமாக போசாள மன்னர்கள், சோழர்களுக்குத் துணையிருந்ததன் விளைவால் பிற்காலப் பாண்டிய மன்னர்கள், கி.பி. 1251இல் சடையவர்மன் முதலாம் சுந்தரபாண்டியன் காலத்தில், குமரி முதல் நெல்லூர் வரை முழு அதிகாரமும் செலுத்தி வலிமையுடன் எழுச்சிபெற்றனர். இடையில் சுமார் 30 வருடங்கள் சோழர்கள் நிலையான ஆட்சி செலுத்தமுடியாமலும், பாண்டியர் பிடியில் இருந்து மீளமுடியாமலும் தவித்துவந்தனர். இச்சூழலில், அரசியல் சந்தர்ப்பங்களைச் சரிவர உபயோகித்துக் கொண்ட சிற்றரசர்கள், குறிப்பாகக் காடவர்கள், வலிமைபெற்றுத் தங்களை வரலாற்றில் தீர்க்கமாக நிலைநிறுத்திக் கொண்டனர்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவில்

தொண்டை நாட்டின் மிக முக்கியத் தலம் திருவண்ணாமலை. அண்ணாமலையார் கோவிலாகவும் வரலாற்றுச் செழுமையைப் பறைசாற்றும் விதமாகவும் பல்லவர் காலம் தொடங்கி, நகரத்தார் திருப்பணி வரை 2000க்கும் அதிகமான கல்வெட்டுகள் அதற்குச் சான்றாகக் கிடைத்துள்ளன. பல சோழ மன்னர்களின் ஆட்சியின்போது ஏராளமான தானங்கள் பெற்றுச் சிறப்புடன் செயல்பட்டாலும், முக்கியமாக மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில்தான் அதிகப்படியான கல்வெட்டுகள் பதிவாகியுள்ளன. இந்நிலப்பரப்பின் மீது மூன்றாம் குலோத்துங்கன் கொண்டிருந்த அதிகாரம், நமக்கு வெளிப்படையாகப் புலப்படும் ஆதாரமாகும்.

திருவண்ணாமலையில் சிற்றரசுகள்

மூன்றாம் குலோத்துங்கனின் நீடித்து நிலைத்த ஆட்சிக்குப்பின் சோழ நாட்டிற்கு முடிசூடிய, மூன்றாம் ராஜராஜன் காலம்தான் 300 வருடச் சோழ சாம்ராஜ்ஜியம் சரியத் தொடங்கிய காலமாகும். சோழ அரசர்களின் ஆளுகைக்குள் இருந்த சிற்றரசுகள், மூன்றாம் ராஜராஜனின் வலிமையற்ற ஆட்சியைப் பயன்படுத்தி சுயேச்சையான மன்னர்களாக மாற முனைந்தனர். திருவண்ணாமலை நிலப்பரப்பைச் சுற்றி சம்புவராயர், சேதி ராயர்கள் போன்ற சிற்றரசுகள் ஆட்சிசெய்திருந்தாலும், மூன்றாம் ராஜராஜனைச் சிறைவைத்து, தன் பலத்தைக் காட்டி வரலாற்றில் இடம்பிடித்த காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கன், திருவண்ணாமலை வரலாற்றிலும் நீங்கா இடம்பிடித்துள்ளான்.

சோழனை வென்றவர்கள்

மூன்றாம் ராஜராஜனின் வலிமை குன்றிய ஆட்சியால், சிற்றரசர்கள் யாவும் தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கினர். அப்படிப்பட்ட சூழலிலும் போசாள மன்னன் வீர நரசிம்மன், ராஜராஜனுக்குத் துணையாக இருந்தான். கி.பி. 1217இல் மூன்றாம் ராஜராஜனை வீழ்த்தி "சோணாடு கொண்ட சுந்தரா" என்று பட்டம் சூடிக்கொண்ட மாறவர்மன் சுந்தர பாண்டியனையும், கி.பி. 1232இல் ராஜராஜனைச் சிறை வைத்து "சோழனைச் சிறையிட்டு வைத்து சோழநாடு கொண்ட அழகியசியன்" என்னும் பட்டம் சூடிக்கொண்ட கோப்பெருஞ்சிங்கனையும் வீழ்த்தி "சோழ ராஜ்ஜிய பிரதிஸ்தாச்சார்யா" என்னும் பட்டத்திற்கேற்ப குலோத்துங்கன் மறைவுக்குப் பின் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வீர நரசிம்மன், மூன்றாம் ராஜராஜனுக்குத் துணைநின்று சோழ மணிமுடியைக் காத்துவந்தான். என்னதான் வலிமை குன்றிய அரசனாக ராஜராஜன் இருந்தாலும் கி.பி. 1216இல் தொடங்கி கி.பி. 1232 வரை, பாண்டியர்களால் சோழ சிம்மாசனத்தைத் தமதாக்கிக் கொள்ள இயலவில்லை.

அண்ணாமலையார் கோவில் கல்வெட்டுகள்

அண்ணாமலையார் கோவிலில் பல்லவர் தொடங்கி நகரத்தார் செய்த திருப்பணிகள் வரை அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டு நமக்கு ஏராளமான தகவல்களைத் தருகின்றன.

மூன்றாம் ராஜராஜன்

மூன்றாம் குலோத்துங்கனுக்கு அடுத்தபடியாக இக்கோவிலில் அதிகமான நிவந்தங்கள் மூன்றாம் ராஜராஜன் காலத்தில்தான் பதிவாகியுள்ளது கவனிக்கத்தக்கது. ராஜராஜன் காலத்தில் அரசியல் நிலைத்தன்மை இல்லாமல் சோழநாடு பல்வேறு இன்னல்களுக்கு ஆளானாலும், கோவில்களுக்குத் தங்குதடையின்றி தொடர் நிவந்தங்கள் கிடைத்து வந்திருக்கின்றன. அக்காலகட்டத்தில் அரசியல் சூழல் இந்நிலப்பரப்பில் சாதகமாக இல்லை; சமூக நிலையில் பெரிய மாற்றங்களும் இல்லை. ஆனாலும் மக்கள், அதிகாரிகள், சிற்றரசர்கள் கோவிலுக்குப் பலவகையில் கொடைகள் அளித்துள்ளனர். அவர்களில் பெண்களே அதிகம். ஆவணப்படுத்தப்பட்டுள்ள 39 கல்வெட்டுகளில் 15 நந்தா விளக்குகள் எரிக்கக் கொடையளிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. மற்ற கல்வெட்டுகள் நந்தவனம், சந்தி என்று கோவில் சார்ந்தே வழங்கப்பட்டதைக் குறிக்கின்றன. மூன்றாம் ராஜராஜனின் 32ஆவது ஆட்சியாண்டான கி.பி. 1248 வரையில் கல்வெட்டுகள் இக்கோவிலில் பதிவாகி உள்ளன.

காடவராயன் கோப்பெருஞ்சிங்கன்

குலோத்துங்கன் மறைவுக்குப் பிறகு எழுச்சிபெற்ற காடவ சிற்றரசன் கோப்பெருஞ்சிங்கன், தனது கவனத்தை அரசியலில் மட்டும் செலுத்தாமல் கோவில்களுக்குத் தானம் தருவதிலும் செலுத்தி உள்ளதைத் திருவண்ணாமலை கோவிலின் 31 கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இங்கு

நாம் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. கி.பி. 1216 முதலே கோப்பெருஞ்சிங்கன் எழுச்சியைக் கண்டுவிட்டாலும் தனித்த மெய்க்கீர்த்தியுடன் கூடிய கல்வெட்டுகள், ராஜராஜனைத் தெள்ளாற்றில் வென்று சிறைவைத்ததில் இருந்தே தொடங்குகின்றன. திருவண்ணாமலையில் தனது நான்காம் ஆட்சி ஆண்டான கி.பி 1236இல் தொடங்கி 9ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி. 1241) வரை எட்டு கல்வெட்டுகளும் உள்ளன. அதற்குப் பின்னால் இரண்டாம் கோப்பெருஞ்சிங்கனின் இருபதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் பதிவாகியுள்ளன.

முதலாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியன்

முதலாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியனின் இரண்டாம் ஆட்சி ஆண்டு (கி.பி. 1242) முதல் எட்டாம் ஆட்சி ஆண்டு வரையான ஐந்து கல்வெட்டுகள் இக்கோவிலில் பதிவாகி உள்ளன.

மாணிக்கவாசகர் கோவில் கல்வெட்டு

திருவண்ணாமலை கிரிவலப் பாதையில் அடி அண்ணாமலை மாணிக்கவாசகர் கோவில் உள்ளது. இக்கோவிலில்தான் மாணிக்கவாசகர் பெருமான், திருவெம்பாவையை அருளியதாகக் கருதப்படுகிறது. சமீபத்தில் கிழக்குப்புற மதில் சுவரின் கீழே இதுவரை பதிவுசெய்யப்படாத கல்வெட்டு ஒன்று ஆவணம் செய்யப்பட்டுள்ளது.

கல்வெட்டு தெரிவிக்கும் செய்தி இதுவே. ஸ்வஸ்தஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டு சுந்தர பாண்டியன் என்று சொல்லப்பட்ட பொழுதும், பிற்காலப் பாண்டியர்களில் எந்த சுந்தர பாண்டியன் என்று மெய்க்கீர்த்தியில் தெளிவான விவரங்கள் இல்லை. இக்கல்வெட்டில் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர் என்பாரும், சேதி மண்டலத்து நாட்டார் சபையும் சேர்ந்து, நெல்வாய் என்ற ஊரில் உள்ள நிலத்தை இறையிலி நிலமாக அறிவித்து அதில் ஒருபாதியை இக்கோவிலில் உள்ள திருப்பெருந்துறை உடைய நாயனார்க்கும், மற்றொரு பாதியைத் திருவாதவூர் நாயனார்க்கும் தானமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. ஆவுடையார்கோவில் ஆத்மநாதசாமி கோவிலில் உள்ளது போலவே இக்கோவிலிலும் மாணிக்கவாசகர் முன் ஆவுடையாக சிவபெருமான் காட்சியளிக்கிறார்.

இக்கல்வெட்டில் குறிக்கப்படும் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர் என்பவர், இரண்டாம் சடையவர்மன் குலசேகரனின் உயர் அதிகாரியாகப் பணியாற்றியதை, அண்ணாமலையார் கோவிலில் உள்ள முதலாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியனின் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. எனவே இக்கல்வெட்டின் ஆட்சி ஆண்டையும் தகவல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது 1238-1240 வரை ஆட்சிபுரிந்த சடையவர்மன் இரண்டாம் குலசேகர பாண்டியன் தம்பியும், அவனுடன் சிறிதுகாலம் இணையாட்சி புரிந்தவனுமான “இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்” காலத்திய கொடைகளாகக் கருதலாம். இது அம்மன்னனின் இரண்டாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு என்பதால் இதனை கி.பி. 1240ஆம் ஆண்டுக் கல்வெட்டு என்று எடுத்துக் கொள்ளலாம்.

கி.பி. 1238 முதல் கி.பி.1250 வரை

நாம் கூர்ந்து கவனித்தோமானால் மாறவர்மன் சுந்தர பாண்டியனுக்குப் பின் பட்டமேற்ற சடையவர்மன் இரண்டாம் குலசேகரன் காலம் (கி.பி. 1238) தொடங்கியதிலிருந்து சோழர்களை நிலையாக வெற்றிகொள்ள தீர்மானித்துப் பாண்டியர்கள் முன்னேறியுள்ளனர். இதற்கான சான்றுகளைக் காண்போம்.

மாணிக்கவாசகர் கோவிலில் பதிவாகிய கல்வெட்டு மூலம் நமக்குத் தெரியவருவது யாதென்றால், பாண்டியர்கள் அடுத்துவந்த பத்து வருடங்களில் சோழர்களுக்குட்பட்ட சிற்றரசுகளைப் படிப்படியாகத் தங்கள் பக்கம் இழுத்து, சோழர்களைப் பலமற்றவர்களாக ஆக்கினர். இந்நிலையில் சடையவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 1251இல் விவேகத்துடன் போர் நடத்தி 400 வருட சோழ சாம்ராஜ்ஜியத்தை முடிவுக்குக் கொண்டுவந்தான். இதில் 1240 வாக்கில் இந்நிலப்பரப்பை ஆட்சிசெய்த சோழப் பேரரசின் மூன்றாம் ராஜராஜனின் கல்வெட்டும், அவர்களுக்குக் கீழே ஆட்சிசெய்த கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டும், சோழர்களின் எதிரிகளான பாண்டியர்களின் கல்வெட்டும் அவரவர் மெய்க்கீர்த்தியுடன் பதிவாகியுள்ளன.

சோழர்கள் ஆட்சியின் கீழ் இயங்கிய திருவண்ணாமலை நகரப்பகுதியை விடுத்து, திருமலை என்று குறிப்பிடப்படும் மலையின் பின்புறத்தில், தற்காலத்தில் அடிஅண்ணாமலை என்றழைக்கப்படும் பகுதியைத் தேர்ந்தெடுத்து, பாண்டிய அமைச்சரான மாணிக்கவாசகருக்குத் தனிக்கோவில்



படம் : கி.பி 1232 முதல் 1269 வரை ஆவணம் ஆகியுள்ள
சோழ , பாண்டிய, கடவர் கல்வெட்டு விவரம்

எழுப்பி, சேதி நாட்டார்கள் மூலம் தானமும் வழங்கியுள்ளது கவனிக்க வேண்டியது. காடவர்களைப் போல சேதி மண்டலம் சிற்றரசும் பாண்டியர்களுடன் இக்காலகட்டத்தில் இணக்கமாக இருந்துள்ளதை அறியமுடிகிறது. இதே காலகட்டத்தில்தான் அடிஅண்ணாமலை கோவிலும் நிர்மாணிக்கப்பட்டு இருக்கவேண்டும்.

திருவண்ணாமலையும் காடவர்களும்

நிலம் யாருடையது என்ற பிரச்சினை சார்ந்து பல அரசியல் குழப்பங்கள் இம்மண்ணில் நிகழ்ந்திருந்தாலும், அண்ணாமலையார் கோவிலுக்குச் சோழர்களும் பாண்டியர்களும் ஒரே நேரத்தில் குறைவின்றி தானங்களை அளித்துள்ளனர். இதற்கு மிக முக்கியக் காரணமானவர்கள் காடவர்களே என்று கருதலாம். நிலையற்ற சோழ ஆட்சியின் விளைவால் இந்நிலப்பரப்பைத் தன் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவந்து இரு எதிரிகளை முறையே கையாண்டதன் பயனாக, காடவர்கள் சோழர் ஆட்சியின் இறுதிவரை, இந்நிலப்பரப்பைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததை அவர்களது கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. அதேசமயம் மற்ற சிற்றரசுகளான சம்புவராயர், சேதி ராயர்கள், தெலுங்குச் சோழர்கள் என்று அனைவரையும் அரவணைத்து, ஒருங்கிணைத்து இந்நிலப்பரப்பைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததை அவர்களின் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

பாண்டியர்களின் முதல் கல்வெட்டு

இதுவரை ஆவணப்படுத்தப்பட்டுள்ள பாண்டியர் கல்வெட்டுகளில் மாணிக்கவாசகர் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டே பாண்டியர்களின் முதல் கல்வெட்டு. கி.பி. 1240ஆம் வருடமே சிற்றரசுகள் துணையுடன் பாண்டியர்கள் இந்நிலப்பரப்பில் வேரூன்றத் தொடங்கிவிட்டனர் என்பதும் இதன்மூலம் நிரூபணமாகிறது. இதன்பின்னர், சரியாக 100 வருடங்கள் வரை பாண்டியர்கள் இம்மண்ணின் மீது நிலையான ஆட்சி, அதிகாரத்தை நிலைநாட்டியிருந்ததை, பதிவாகியுள்ள ஏராளமான கல்வெட்டுகள் மூலம் நம்மால் அறியமுடிகிறது.

முடிவுரை

பேரரசர்கள் மாறினாலும் சிற்றரசர்களின் தொடர்ந்த, சிறந்த நிர்வாகத் திறனால், அரசுத் தரப்பைத் தவிர்த்து பொதுமக்கள், அதிகாரிகளின் கொடைகளும் இக்கோவிலுக்குத் தொடர்ந்து கிடைத்துள்ளன. வழிபாட்டையும் வளர்ச்சியையும் சிதைவுறாத தொன்மையையும் கொண்டு திருவண்ணாமலை கோவில் இன்றுவரை தொடர்கிறது..

துணை நூற்பட்டியல்

1. Nilakanta Sastri, K. A. *The Colas. Translated into Tamil by K. V. Raman.* Chennai: New Century Book House Pvt Ltd, 1955.

2. Panneer Selvam, Raj. *“கட்டுரை ஆசிரியர் ஆவணம் செய்த கல்வெட்டு.”* Hindu Tamil Thisai, January 24, 2021. https://www.hindutamil.in/news/tamilnadu/625022-inscription-discovery.html

3. Sethuraman, N. *Medieval Pandyas: A.D. 1000–1200.* Kumbakonam: Raman & Raman Private Limited, Pidarikulam Road, 612001.

4. Srinivasan, P. R. *Tiruvannamalai: A Saiva Sacred Complex of South India. Vol. 1.* Pondicherry: Institut Français de Pondichéry, 1990.

5. Srinivasan, P. R. *Tiruvannamalai: A Saiva Sacred Complex of South India. Vol. 2.* Pondicherry: Institut Français de Pondichéry, 1990.

ராஜ் பன்னீர் செல்வம் *தகவல் தொழில்நுட்பம் பயின்று மென்பொருள் துறையில் பணியாற்றி வந்தாலும் வரலாற்றின் மீது கொண்ட ஈர்ப்பால் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இத்துறையில் பயணித்து வருகிறார். இதுவரை 20கும் மேற்பட்ட கல்வெட்டு , 30கும் மேற்பட்ட சிற்பங்கள, பல்லவர் ஓவியம், பெருங்கற்கால தடயங்கள் எனப் பல வரலாற்று தடயங்களை ஆவணம் செய்துள்ளார். திருவண்ணாமலை மீது கொண்ட தீரா காதலால் , அண்ணாமலையார் கோவில் வரலாற்றை ஆய்வுசெய்து ஆவணப்படுத்தி வருகிறார். மேலும் தமிழகத்தில், குறிப்பாக பல்லவர் கால கொற்றவைகளை ஆவணம் செய்து வருகிறார்.* **prajbtech@gmail.com**

தமிழகத்தில் பலிச்சடங்குகள் தொன்மையும் தொடர்ச்சியும்

முனைவர் மு.ஏழுமலை

முனைவர்
மு. ஏழுமலை

ஆய்வுச்சுருக்கம்

ஒவ்வொரு சமூக வரலாற்றுத் தேடலிலும் அச்சமூகத்தின் வழிபாட்டுப் பரிணாமங்களும் அவ்வழிபாட்டில் நிகழும் பலிச்சடங்குகளும் ஒன்றிணைந்து காணப்படுவதை இயல்பாகக் காணமுடியும். இந்நிலையில் தமிழச் சமூகத்தின் தொன்மையான வழிபாட்டு முறைகளோடு தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வந்த பலிச்சடங்குகளையும், சமகாலத்தில் அப்பலிச் சடங்குகள் பெற்ற மாற்றங்களையும், அப்பலிகளுக்கான காரணங்களையும் ஆராய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திறவுச்சொற்கள்

அரிகண்டம், நவகண்டம், களப்பலி, தற்பலி, தீப்பாய்ந்தம்மன், திரௌபதி, சதி, அரவான்

முன்னுரை

ஒவ்வொரு சமூக வரலாற்றுத் தேடலிலும் அச்சமூகத்தின் வழிபாட்டுப் பரிணாமங்களும் அவ்வழிபாட்டில் நிகழும் பலிச்சடங்குகளும் ஒன்றிணைந்து காணப்படுவதை இயல்பாகக் காணமுடியும். இந்நிலையில் தமிழச் சமூகத்தின் தொன்மையான வழிபாட்டு முறைகளோடு தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டு வந்த பலிச்சடங்குகளையும், சமகாலத்தில் அப்பலிச் சடங்குகள் பெற்ற மாற்றங்களையும், அப்பலிகளுக்கான காரணங்களையும் ஆராய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சமூக உருவாக்கமும் தெய்வ உருவாக்கமும்

தமிழ்ச் சமூகம் நீண்ட பண்பாட்டு வரலாற்றைக் கொண்டது. இப்பண்பாட்டு உருவாக்க வரலாற்றை நோக்கும்போது, தாய்வழிச் சமூகத்தின் கூறுகள் முதன்மை வகிப்பதைக் காணமுடிகிறது. மனிதனின் வேட்டைச் சமூக வாழ்வியலில், இயற்கை நிகழ்வுகளுக்கான காரண காரியம் உணரப்படாத நிலையில், அச்சமூகத்தினர் எதிர்கொண்ட அச்சத்தினால், புரியாமைக்கு மூலமாக விளங்கியவற்றை வழிபடும் பொருளாக்கினர். அவற்றையே நமது சமாதானங்களின், எதிர்வினைகளின் கருவியாக (வழிபாடாக) வளர்த்தெடுத்தனர். இடி, மின்னல், மழை, சூரியன், சந்திரன், மரம், கல், பாம்பு, விலங்குகளை வழிபடத் தொடங்கினார்கள். வானம், காடு ஆகியவை இயற்கையில் மாறும் சூழ்நிலைகளைக் கொண்டவை. புற்றும் நீர்நிலையும் மனிதர்களுக்கு இயல்பாகவே அச்சத்தைத் தந்தவை. இவற்றையெல்லாம் வழிபடுவதன் மூலமே பாதுகாப்பாக அவர்கள் உணர்ந்தனர்.

மனிதனின் வாழ்க்கைமுறையில் வேட்டைச் சமூகத்தைத் தொடர்ந்து மேய்ச்சல் சமூகம் உருவானது. அதைத் தொடர்ந்து வேளாண்மைச் சமூகமாக ஒரு இடத்தில் நிலைகொண்ட காலசுழற்சி ஏற்பட்டது. மனிதனின் சிந்தனை, வளர்ச்சிபெறத் தொடங்கிய காலம் என்றும் இதனைக் குறிப்பிடலாம். இந்தக் காலச்சூழலில்தான் இயற்கை நிகழ்வுகளுக்கான காரணகாரியங்களை அறியும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவற்றின் வெளிப்பாடாகத்தான் வேட்டைச் சமூகச் சூழ்நிலையில் இயற்கைக்கும், இயற்கை நிகழ்வுகளுக்கும் “ஆண்”, “பெண்” என்ற இருபால் நிலையிலிருந்து கற்பிதங்கள் உருவாக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாகப் ‘பெண்’ என்ற பால்நிலையை மையமாகக் கொண்டு பெரும்பான்மையான கற்பிதங்கள் உருவாகத் தொடங்கின. உணவு சேகரிப்பு, உணவு உற்பத்தி

திரௌபதி

(வேளாண்மையிலும்), குழந்தைப் பெற்று வளர்ப்பது ஆகியவற்றில் பெண்கள் பெற்ற முக்கியத்துவம் இதற்கு அடிப்படையாக அமைந்தது. பெண் குறித்த முதன்மைக் கருத்தாக்கம் வலுவடைந்ததன் அடையாளம்தான் தாய்வழியிலான ரத்த உறவுகள் முக்கியத்துவம் பெற்றதாகும். இப்படித்தான் பெண், மதிப்புக்குரியவளாகவும் வழிபாட்டுக்குரியவளாகவும் வளர்த்தெடுக்கப்பட்டாள். இவற்றின் உச்சநிலைதான் அனைத்துச் சமூகங்களிலும் தாய்த்தெய்வ வழிபாடு, முதன்மையான வழிபாடாக வலுப்பட்டது.

நாட்டார் வழிபாட்டு மரபில் இயற்கை, பெண் என்ற இரண்டு வழிபாட்டு மூலங்களைத் தொடர்ந்து உருவானது மூதாதையர் வழிபாடாகும். ஒரு குழுவாக வாழத் தொடங்கிய மனித இனம், வாழ்வுக்கும் வளமைக்கும் ஆதாரமான உணவுச் சேகரிப்பால் மட்டும் நிறைவை அடையவில்லை. சிலவேளைகளில் ஒரு செயல்பாடற்ற நிலையும் வெறுமையும் அங்கே உணரப்பட்டது. அந்த வெறுமையே மூதாதையர் வழிபாட்டை உருவாக்கியது. அதுமட்டுமல்லாமல் தன்னைக் காத்த மூதாதையரின் ஆசிகளைத் தொடர்ந்து பெறுவதன்மூலம், தமக்கு நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நிகழ்வதற்குச் சாத்தியமுள்ள கேடுகள் அகன்று வளமை பெருகும் என்ற நம்பிக்கையும், மூதாதையர் வழிபாட்டில் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வழிபாட்டின் மூலம் மூதாதையரால் வளமையைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உருவானது. இந்த நம்பிக்கை சார்ந்து சில சடங்குகளும் உருவானது. தம்மைப் பலியாகத் தருவதிலிருந்து, மீட்டுக்கொண்டு, தமக்குப் பதிலாக வேறொன்றைக் கொடுத்தால் தன் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் எனும் நம்பிக்கை, இந்தப் பலிச்சடங்குகளுக்குக் காரணமாகும். ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெறமுடியும் என்பது பலியிடுதல் என்பதன் அடிப்படை உளவியலாக உள்ளது. வளமை, வலிமை, நோயிலிருந்து மீள்வது, அச்சம், பகை, பாதுகாப்பு, சமூகத்தைக் கட்டுப்படுத்துதல், நன்றிக்கடன் போன்றவை இப்பலிச் சடங்குகளுக்கு அடிப்படைக் காரணங்களாக உள்ளன.

தொல் சமூகங்களான வேட்டை, மேய்ச்சல், வேளாண்மைச் சமூகங்கள் தம்முடைய பணிகளுக்கும் வாழ்க்கைமுறைக்கும் ஏற்றவாறு தங்களுக்கான தெய்வங்கள், வழிபாட்டு முறைகளை உருவாக்கின. தெய்வங்களுக்கான படையல் பொருள்கள், பலிப்பொருள்கள், சடங்குகள் உருவாகி வளர்ந்தன.

நாட்டார் தெய்வத்துக்கான முதன்மைக் காரணிகளாக, அத்தெய்வம் உருவாக்கப்பட்ட இனத்தின் வாழ்நிலை, தேவைகள், உற்பத்தி, வளங்களின் பெருக்கம், பாதுகாப்பு ஆகிய அம்சங்கள் உள்ளன. வேட்டைச் சமூகம், கால்நடைச் சமூகம், வேளாண்மைச் சமூகம் என்ற படிநிலையிலான சமூக மாற்றங்கள் மூலம் சமூக வாழ்வியலில், மரபான அம்சங்கள் எவ்வாறு புனரமைப்பு செய்யப்பட்டன என்பதையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஒரு சமூகத்தின் மரபார்ந்த சிந்தனைகளையும் உணர்வுகளையும் அதற்கடுத்து உருவாகும் சமூக அமைப்பிற்குக் கடத்துவதற்கான காரணங்களையும் வழிமுறைகளையும் ஆய்வுக்குட்படுத்துவதும், ஒரு சமூகத்தைப் புரிந்துகொள்வதற்கான தேவையாகும்.

ஒவ்வொரு சமூகமும் தங்கள் வாழ்வியல் சூழல்களில் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள மேற்கொள்ளும் செயல்பாடுகள் (நடனம், பாடல், மந்திரம், பலி உள்ளிட்ட சடங்குகள்) சமூக மாற்றத்திற்கு ஏற்ப எவ்வாறு மாற்றமடைகின்றன? மரபுச் செயல்முறைகள், சிந்தனைகள், நம்பிக்கைகள் முதலானவை எவ்வாறு முந்தைய சமூகத்தின் எச்சங்களாகவும் தற்கால நடைமுறைச் சமூகத்தின் வெளிப்பாடாகவும் அடையாளமாகவும் உருவாகின்றன? என்பதை அறிவது இன்றியமையாதது.

இத்தகைய புரிதலுக்கான காரணிகளில் ஒன்றுதான் பலிச்சடங்கு. ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு சமூகம், தன்னுடைய இனக்குழுவுக்கான வளமைக்காகவும் பாதுகாப்புக்காகவும் கண்டெடுத்த ஒரு செயல்பாட்டு வடிவம்தான் பலி என்ற சடங்கு வடிவம். இந்தப் பலிச்சடங்கின் மூலம் வெளிப்படும் குருதி என்பது வளமைக்கான குறியீடாக உள்ளது.

பருவமடைதல், இனப்பெருக்கம் உள்ளிட்ட வளமை நிலைகள், குருதியோடு தொடர்புடையது. இப்படித்தான், குருதி நம்பிக்கையோடும் புனிதத்தோடும் இணைகிறது.

தொன்மை வழிபாட்டு முறைகளும் பலிச்சடங்குகளும்

தமிழ்ச் சமூக நாட்டார் தெய்வ வழிபாடு, தாய்த் தெய்வ வழிபாட்டுத் தொன்மையை உடையது. சமூகத்தில் பெண் முதன்மைப் பெற்றிருந்த நிலையில் பெண் என்பவள் வணக்கத்திற்குரியவளாகவும் வளமைக்குரியவளாகவும் கருதப்பட்டாள். இத்தன்மை பெருங்கற்காலப் பண்பாட்டிலும் இரும்புக்காலப் பண்பாட்டிலும் தொடர்ந்துள்ளதை கிடைக்கப்பெறும் பாறை ஓவியங்கள் உள்ளிட்ட தொல் சான்றுகளின் மூலம் அறிய முடிகிறது. சங்கம், சங்கம் மருவிய கால பண்பாட்டு நிலைகளிலும், சிலப்பதிகார காலத்திலும் கிடைக்கப்பெறும் நடுகல், கல்வெட்டுகள் உள்ளிட்ட சான்றுகள் வழியாக, கொற்றவை வழிபாட்டின் பன்முகத் தன்மையைக் காணமுடிகிறது. கொற்றவை வழிபாடு தமிழகம் முழுவதும் பரவலாக இருந்தமைக்கு தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கப்பெறும் நடுகற்களும், கொற்றவையின் உருவம் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் சான்றுகளாக அமைகின்றன.

> அடிக்கழுத்தின் நெடுஞ்சிரத்தை அரிவராலோ அரிந்தசிரம்
> அணங்கின் கைக்கொடுப்பராலோகொடுத்தசிரம் கொற்றவையைப்
> பரவுமாலோ குறைஉடலம் கும்பிட்டு நிற்குமாலோ...

சங்ககாலச் சான்றுகளை உற்றுநோக்கும்போது கொற்றவை வழிபாடு என்பது வெற்றிக்காக வழிபட்ட தெய்வமாக உள்ளதைக் காண முடிகிறது. கொற்றம் என்றால் வெற்றி என்ற ஒரு பொருள் உண்டு. இந்நிலையில் வெற்றி பெறுவதற்காகத் தெய்வத்தை வழிபடுதல் என்ற மரபின் அடையாளமாகத்தான் கொற்றவை வழிபாட்டைக் காணவேண்டும். இவற்றின் தொடர்ச்சியாகத்தான் பலிமுறைகளையும் புரிந்துகொள்ள வேண்டும். மேலும், பலியிட்டுக்

துரியோதனன் படுகளம்

கொள்பவர்களை நடுகல் மூலமாக அடையாளப்படுத்துவதும், பிறகு, பலியிட்டுக் கொண்டவரைக் கற்களில் உருவம் பொறித்தும், அவர்களைப் பற்றிய குறிப்புகள் எழுதி வைக்கப்படுவதுமாக வழக்கங்கள் இருந்துள்ளன.

திணைக்குடி மரபில் கால்நடைச் சமூகத்தில் கால்நடைகள் ஒரு சமூகத்தின் செல்வமாக இருந்தன. அந்தப் பின்னணியில் ஆநிரைகளைக் கவர்தல், எதிரிகளால் கவரப்பட்ட ஆநிரைகளை மீட்டல் எனும் செயல்பாடுகளில் உயிரிழந்த வீரர்களுக்கு நடுகல் எடுப்பதும், நடுகற்களில் அந்த வீரரின் உருவம் வரையப்படுவதும், வீரரைப் பற்றிய குறிப்புகள் எழுதப்பட்டு போற்றப்படுவதுமான பண்பாட்டு மரபைக் காண முடிகிறது. அரச உருவாக்கம் உருவான நிலையில் அரசர்களுக்கான போர் வெற்றிக்காக வீரர்கள் அரிகண்டம், நவகண்டம், தூங்குதலைக் கொடுத்தல் முதலான பல முறைகளில் பலியிட்டுக் கொள்ளும் முறைகள் தமிழகம் மட்டுமின்றி, கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்ததை அம்மாநிலங்களில் கிடைக்கும் கல்வெட்டுச் சான்றுகள் வாயிலாக அறிய முடிகின்றது. இத்தகைய பலியிட்டுக்கொள்ளும் முறைமை ஒன்பதாம் நூற்றாண்டுவரை நீட்சி பெற்றதற்கான சான்றுகள் பெரும்பான்மையாகக் கிடைக்கப் பெறுகின்றன.

நரபலி வளமையின் குறியீடு

மக்களின் வளமைக்கான சடங்காக தமிழ்நாட்டில் குறிப்பாக வட தமிழகத்தில் நடைபெறும் திரௌபதியம்மன் வழிபாட்டில் உள்ள அரவான் களபலிச் சடங்கும், துரியோதனன் படுகளச் சடங்கும் உள்ளதை விளக்குவதற்கு முன்பு, வளமைக்கான மூலமாக உள்ள சடங்காகக் கொள்ளப்படும் மற்ற நிகழ்வுகளைக் காணவேண்டும். பலியிடுதலில் மனித பலி, விலங்கு பலி, பறவை பலி, விளைப்பொருள்கள் பலி எனப் பலவகைகள் உள்ளன.

பல்லவர் காலக் கல்வெட்டில் மனித உயிர்பலியைப் பற்றி ஆராயும்பொழுது, கம்பவர்ம பல்லவனின் திருவாமூர் வீரக்கற் கல்வெட்டு, [1]

> “ஸ்ரீ கம்ப பருமற்கு யாண்டு இருபதாவது பட்டை பொத்தனுக்கு ஒக்கொண்ட நாகன் ஒக்க திந்தன் பட்டை பொத்தன் மேதவம் புரிந்ததென்று படாரிக்கு நவக்கண்டங் குடுத்து குன்றகத்தலை அறுத்துப் பிடலிகை மேல் வைத்தானுக்கு திருவான்மூர் ஊரார் வைத்த பரிசாவது எமூர்ப் பறைகொட்டக் கல்மேடு செய்தாராவிக்குக் குடுப்பாரானார் பொத்தனங் கிழவர்களும் தொறுப்பட்டி நிலம் குடுத்தார்கள் இது அன்றென்றார் கங்கையிடைக் குமரிஇடை எழுநூற்றுக் காதமும் செய்தான் செய்த பாவத்துப் படுவார் அன்றென்றார் அன்றாள் கோவுக்கு காற்ப்பொன் றண்டப் படுவார்”

விளக்கம்:

பல்லவ மன்னன் கம்பவர்மனின் இருபதாவது ஆட்சியாண்டில் பட்டை பொத்தன் என்பான் போரில் வெற்றியடைவதற்காக ஒக்கொண்ட நாகன் ஒக்கதிந்தன் என்பான் தன் தலையை அரிந்து பிடாரியின் பீடத்தில் வைத்தான். அவனுக்குத் திருவான்மூர் ஊரார் பறைகொட்டி, கல்நட்டு சிறப்பு செய்தார்கள். நிலமும் கொடையாக அளிக்கப்பட்டது. இக்கொடைக்கு மறுப்புத் தெரிவிப்பவர் கங்கைக் கரையிலிருந்து குமரிக்கரை வரையில் இடைப்பட்ட எழுநூறு காதத்திலும் உள்ளோர் செய்த பாவம் அனைத்தும் அடைவார். மேலும் அப்பொழுது ஆள்கின்ற மன்னனுக்குக் கால் பொன் தண்டமும் அளிக்கவேண்டும். நவகண்டங் கொடுப்பவர்க்கும் நடுகல் எடுக்கும் பழக்கம் இருந்திருக்கிறது என்பது இக்கல்வெட்டிலிருந்து தெளிவாகிறது.

மேற்கண்ட சொற்களுக்கான விளக்கத்தையும் பின்புலத்தையும் தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளா ஆகிய திராவிட நிலப் பகுதிகளில் 726 வீரக்கற்களைக் (கல்வெட்டுக்களைக்) கொண்டு ஆராய்ச்சி செய்து, ‘தென்னிந்திய நடுகற்கள்’ என்னும் பெயரில் நூல் வெளியிட்டுள்ளார் முனைவர் வெ. கேசவராஜ். அந்த நூலில்,

> “பைரவர், வீரபத்திரர், காளி போன்ற தெய்வங்களுக்குரிய கோயில்களில் வீரர்கள் தலைப்பலி கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்வாறு பலியிடுவதற்காகக் கோயில்களில் தனியிடங்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

1 கல்வெட்டு ஓர் அறிமுகம் , தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2009, ப. 82

இக்கற்கள் வீரர்களுடைய மத நம்பிக்கையைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. தலைப்பலி கொடுப்பவர்கள் சொர்க்கத்திற்குச் செல்வர் என்ற நம்பிக்கை அவர்களுக்கிருந்தது என்பதனை அக்கற்களில் காட்டப்பட்டுள்ள வீரசுவர்க்கக் காட்சி புலப்படுத்துகிறது. கழுத்தில் வாளைப் பாய்ச்சிக் கொண்டு இறத்தலை மட்டுமே அல்லாமல் வயிற்றைப் பிளந்து குடல்சரியக் காட்சிதரும் வீரர்களையும் இக்கற்கள் காட்டியுள்ளன." (வெ. கேசவராஜ், 2008, ப. 399).

என்றும் எடுத்துக்காட்டியுள்ளார். இதன் மூலம் நரபலி குறித்த நம்பிக்கைகளையும் நரபலி நிறைவேற்ற கோயில்கள் இருந்ததையும், வீரர்கள் தங்கள் தலையைத் தாங்களே வாள்கொண்டு அறுத்துக்கொண்டும் குடல்சரிய வயிற்றைக் கீறிப் பலியிட்டும் கொண்ட சடங்குகள் மட்டுமல்லாமல் தூங்குதலை, நவகண்டம், அரிகண்டம், பிறரை பலிகொடுத்தல் (நரபலி), உடல் உறுப்புகளை அரிந்து கொடுத்தல் (பாவாடம்), உடலைப் பல வகையில் வருத்துதல் (அலகு குத்துதல்) போன்ற பலவகையான பலிச்சடங்குகளைக் காண முடிகிறது. தங்கள் அரசர்களின் போர் வெற்றி, குழந்தை வரம், புதையல் கிடைப்பதற்கான பிரார்த்தனையாகவும் இருந்ததற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வாறு பலிச்சடங்குகள் குறித்த மிக விரிவான சான்றுகள், கல்வெட்டுகள் மூலமும் இலக்கிய தரவுகள் மூலமும் வெளிப்படுகின்றன.

அரிகண்ட நடுகல் - தில்லைக் காளி கோவில்

பழங்குடிகளும் நரபலி நம்பிக்கையும்

ந்திரவாதிகளிடையே மட்டும் பரவலாக நரபலி இருந்துள்ளது என்ற செய்தியை அவ்வப்போது கிடைக்கும் தகவல்களால் அறியமுடிகிறது. இத்தகைய சூழ்நிலையில் வட இந்தியாவில் 19ஆம் நூற்றாண்டுவரை நரபலி, ஒரு சமுதாய விழாவாகக் கொண்டாடப்பட்டதை இ. ராயிசுடன்பைக் என்பவர் 'வையகத்தின் அறியவரா. . . . வழக்கங்கள்' என்னும் நூலில் பதிவுசெய்துள்ளார். இப்பதிவிலிருந்து த. பழமலய் அவர்கள் தம் 'நரபலி தெய்வங்கள் திருவிழாக்கள்' என்னும் நூலில் சில பகுதிகளை எடுத்தாண்டுள்ளார்.

“ஒரிசா பகுதியில் கும்சூர் என்னும் இடத்தில் உள்ள கோண்டு இனப் பழங்குடியினர் ஆண்டிற்கு ஒருமுறை விழாவாகவே கொண்டாடப்பட்டதைப் பதிவு செய்திருக்கிறார்கள் இவ்விழா, தரிபெண்ணு என்னும் பெண் தெய்வத்திற்கு எடுக்கப்படும் விழாவாகும். நரபலிக்கு உட்படும் நபரை மெரியா என்று அழைத்துள்ளனர். மெரியா, சமுதாயத்தில் சிறந்த மதிப்பீட்டைப் பெற்றிருக்கிறார். இவ்வாறு பலியாகி இறப்பவர் சொர்க்கத்திற்குச் செல்வார் என்ற நம்பிக்கையும் இருந்துள்ளது” (வெ. கேசவராஜ், 2008, ப. 399).

என்பதும்,

“மெரியாவோடு ஒரு கோண்டு மனைவியோ மகளோ உடலுறவுகொண்டு, பிள்ளை பெற்றுக்கொண்டால் தெய்வத்திற்கு நன்றி பாராட்டுவாள்” (த. பழமலய், 2002, ப. 76)

என்பது பலியாகுபவர் கொண்டிருக்கும் சமூக மதிப்பைப் புரிந்துகொள்ளச் செய்கிறது. இதனை அரவான் களப்பலிக்கு முன்னர் கிருஷ்ணன் மோகினியாக மாறி அரவானை மணக்கும் தொன்மத்தோடு இதைச் சேர்த்துப் பார்க்கலாம் - இதன் தொடர்ச்சியாகக் கூவாகம் திருவிழாவில் திருநங்கைகள் அரவானை நினைத்துத் தாலி கட்டிக்கொள்வதுடன், அரவான் களப்பலிக்குப் பின்னர் கட்டிய தாலியை அறுத்துக்கொண்டு ஒப்பாரியிட்டு அழும் நிகழ்ச்சியையும்.

கோண்டு இனத்தவர்களிடையே தமிழகத்தில் இன்று நடைபெறும் ஆடு, கோழி பலியிடுதலைப் போன்று ஒரு இயல்பான பலிச்சடங்காக நரபலிச் சடங்கு நடைபெற்றுள்ளது. இதனை,

“கோண்டு இனத்தவர்களிடையில் ஆள்பலி என்பது வழக்கமாக ஏற்பாடு ஆனது. இதில் அவர்கட்கு மறைவு இல்லை. நாணப்படுவதற்கும் இல்லை. ஆண்டுதோறும் முறையாகக் குறிப்பிட்ட நாள்களிலும் சில தேவையை முன்னிட்டும் பொது இடத்தில் பழங்குடியினர் கூடி இதனை குமுகாயத் திருவிழாவாக எடுத்தனர்” (த. பழமலய், 2002, ப. 75)

என்ற குறிப்பிலிருந்து அறியமுடிகிறது. 19ஆம் நூற்றாண்டுவரை பல்வேறு நிலைகளில் நரபலியின் செயல்பாடுகள் இருந்ததற்கான சான்றுகள் பரவலாகக் கிடைக்கப்பெறுகின்றன.

“இந்த நாட்டில் காணும் ஒரு வழக்கத்தை இப்போது நான் விவரிக்கப் போகிறேன். யாதேனும் ஒரு குற்றத்திற்றாக ஒருவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டால், அவன் யாதேனும் ஒரு தெய்வத்திற்குத் தன்னைப் பலிகொடுக்க முன்வரலாம். அவ்வாறு செய்வதற்கு அதிகாரிகள் இசைவுதருகிறார்கள். இசைவு பெற்றபின், அவனுடைய நண்பர்களும் சுற்றத்தார்களும் அவனை ஒரு வண்டியில் ஏற்றி, அவனுக்கு 12 கத்திகளைக் கொடுத்து, அவனை ஊர்வலமாக அழைத்துச் செ ல்வார்கள்.”(மார்க்கோபோலோ,தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்,ப.248)

சதி (உடன்கட்டை ஏறும் பழக்கம்)

இந்த இந்தியாவில் பிரபுக்களோ வேறு உயர்ந்த மனிதர்களோ இறந்துபோனால் அவர்களுடைய உடலைத் தீயிலிட்டுக் கொளுத்தி விடுகிறார்கள். அவர்களுடைய மனைவிமாரும் சிதையிலேறி உயிரோடு வெந்து சாம்பலாகி விடுகிறார்கள். தங்கள் கணவன்மார்மீது வைத்துள்ள அன்பிற்காகவும், இம்மையில் தங்கள் புகழை நிலைநாட்டுவதற்காகவும், மறுமையில் நிலைத்த இன்பத்தைப் பெறுவதற்காகவும் அவர்கள் உடன்கட்டை ஏறுகிறார்கள். அவர்கள் நெருப்பில் பாயும்போது, திருமணஞ் செய்துகொள்ள மணவறைக்குப் போகும் பெண்களைப் போல, மிகவும் மகிழ்ச்சியாய்த் தோன்றுகிறார்கள். அவ்வாறு செய்பவர்களைச் சிறந்த இயல்புகளையுடைய பெண்கள் என்று மற்றவர்கள் பாராட்டுகிறார்கள். இது வியத்தகு செய்தியன்றோ? ஒருவன் இறந்துபோனால் ஐந்து பெண்கள் உடன்கட்டை ஏறுவதையும் நான் என் கண்ணால் கண்டிருக்கிறேன். (ஜார்டன்ஸ் துறவி, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள், ப.334–335)



அரிகண்ட வீரர்கள், காங்கி அம்மன் கோயில், திருவோத்தூர் - செய்யார்.
படம்: காந்தி பாலசுப்பிரமணியன்

தம்மைத் தாமே காவு கொடுத்தல்

தெய்வச் சிலைகளுக்குத் தம்மைத் தாமே காவு கொடுத்துக் கொள்ளும் வழக்கம் இந்த இந்தியாவில் இருக்கிறது. ஒருவன் நோய்வாய்ப்பட்டதாலோ வேறு யாதேனும் இடையூறு நேர்ந்ததாலோ துன்பம் அடைகின்றபோது, அந்தத் துன்பம் நீங்கிவிட்டால் தன்னைக் கடவுளுக்குப் பலிகொடுத்து விடுவதாக நேர்ந்து கொள்கிறான். அந்தத் துன்பம் நீங்கிவிட்டால் அவன் இரண்டோராண்டுக்காலம் நல்ல சத்துள்ளதும் கொழுப்பு நிறைந்ததும் ஆகிய உணவையும் பானத்தையும் அருந்தித் தன்னுடைய உடலை நன்றாய்க் கொழுக்க வைக்கிறான். பின்னர். அடுத்த திருவிழாவின்போது, அவன் மலர் மாலைகளை அணிந்து கொண்டும், நறுமணப் பொருள்களை உடலிற் பூசிக்கொண்டும். ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் தெய்வச் சிலையின் முன் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் செல்கிறான். (நம் ஊரில் ஏசுநாதரின் வான்செலவு விழாவின்போது அன்னை மரியின் சிலையை ஊர்வலமாக எடுத்துச் செல்கிறார்களே அது போல இங்கும் தெய்வச் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் செல்கிறார்கள்.) கடவுளுக்குத் தன்னைப் பலிகொடுப்பதாக நேர்ந்து கொண்டவன் இரண்டு கைப்பிடியுடைய வாளைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிறான். அந்த வாள் தோலைச் சீவித்தேய்ப்பதற்கு நாம் பயன்படுத்தும் கத்தியை ஒத்திருக்கிறது. நெடுநேரம் ஆடியும் பாடியும் மக்களுடைய கவனத்தைக் கவர்ந்த பிறகு தன்னைப் பலிகொடுக்க நேர்ந்துகொண்டவன் வாளைத் தன் கழுத்தின் பின்புறம் வைத்து, இரு கைகளாலும் பலமாக அழுத்தி, தன் தலையைத் தானே கொய்துவிடுகிறான். (ஜார்டன்ஸ் துறவி, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள், ப.346)

பலியீட்டுச் சடங்கின் தொடர்ச்சி நிலைகள்

தமிழ்ச் சமூகத்தில் மக்களின் வளமை உருவாக்க நிலையில் தொன்மையான நிலையில் பலிச்சடங்குகள் நரபலியாகவும், ஆடு, கோழி, பன்றி, மாடு உள்ளிட்ட விலங்குகளின் பலியாகவும் தொடர்ந்து வருவதைக் காணமுடிகிறது. இவ்வாறு மனிதர்களைப் பலியிடுதல், மனிதர்கள் பலியிட்டுக் கொள்ளுதல், விலங்குகளைப் பலியிடுதல் என்ற நிலை மட்டுமின்றி இன்றைய காலச்

சூழலில் பலியிடும் வடிவங்கள் பல்வேறு வகைகளில் நிகழ்த்தப்படுவதைத் திரௌபதியம்மன், அங்காளம்மன், பெரியாயி உள்ளிட்ட நாட்டர் தெய்வ வழிபாட்டு நிகழ்வுகளில் காணமுடிகிறது. இச்சடங்குகளில்,

1. அரவான் களப்பலிச் சடங்கில் அரவான் சிலையின் ஒன்பது இடங்களில் மண் அரிந்தெடுத்து ஆடு அல்லது கோழியின் குருதியில் கலந்து கோயிலைச் சுற்றிப் பலியிடுதல் பலியிடுதலின் மாற்று வடிவம்தான்.

2. துரியோதன் படுகளச் சடங்கில் பெரிய மண் சிலையில் (துரியோதனன்) கால் முட்டியில் வைக்கப்படும் குங்குமம் கலந்த நீரை அனைவரும் எடுத்து நெற்றியில் வைத்துக்கொள்ளுதல், தருமபுரி உள்ளிட்ட பகுதிகளில் மின் இயந்திர மோட்டார்களை வைத்து படுகளச் சடங்கைப் பார்க்க வந்த அனைவரின் மீதும் குங்குமம் கலந்த நீர் படுமாறு செய்வது பலிச்சடங்கின் மாற்று வடிவமே.

3. அங்காளம்மன் வழிபாட்டில் காய்கறிகளைச் சுடுகாட்டில் சூறைவிடும் சடங்கும், அரிசி மாவினால் செய்யப்பட்ட உருவத்தைச் சூறைவிடுவதும் பலிச்சடங்கின் மாற்று வடிவமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

4. பெரியாயி வழிபாட்டில் மண் சிலையின் கையில் உள்ள சிவப்புநிறக் குங்குமம், பலியான ஒன்றின் குருதிமதிப்பைப் பெறுகிறது. இது பலியீட்டுச் சடங்கின் எச்சமாகும்.

5. பிறரைப் பலியிடுதல் (நரபலி): சதி எனும் உடன்கட்டை ஏறுதல் - கணவன் இறந்தபிறகு மனைவி அதே சிதையில் ஏறித் தன்னைப் பலியிட்டுக்கொள்வதையும், பிறகு தீப்பாய்ந்தம்மனாக, ஒரு நாளைக் குறித்து, சிதையில் புகுந்து தன்னை மாய்த்துக்கொள்வதையும் குறிக்கிறது. இவ்வாறு தன்னைப் பலியிட்டுக்கொண்ட பெண்களைப் பூவாடைக்காரி, மாலையம்மன் போன்ற தெய்வங்களாக வணங்கி வருகிறார்கள்.

6. காஞ்சிபுரம் காமாட்சியம்மன் தேரோட்டத்தில் தேர் நகராமல் பலநாள்கள் நின்றுவிட, சில மந்திரவாதிகளின் ஆலோசனைப்படி கர்ப்பிணிப் பெண்ணைப் பலியிட்டு தேரை நகர்த்தியதாகச் சில செப்பேடுகள் பதிவுசெய்கின்றன.

7. இப்போதும் புதையல் வேண்டியோ வளமை வேண்டியோ மந்திரவாதிகள் ஆலோசனைப்படி சிலர் நரபலி கொடுத்த நிகழ்வுகளைச் செய்தித்தாள்களில் பார்க்கிறோம்.

8. அரசால் படுகொலை செய்யப்பட்டவர்கள் தெய்வமாக வணங்கப்படுவது குறித்து “கொலையில் உதித்த தெய்வங்கள்” என்ற பேராசிரியர் ஆ.சிவசுப்ரமணியனின் நூலில் இதுகுறித்து மேலதிக தகவல்களைக் காணலாம்.

மேற்குறிப்பிட்ட சடங்கு நிகழ்ச்சிகள், பலிச்சடங்குகளுக்கான குறிப்பிடத்தக்க சடங்குகளாகும்.

நாட்டார் தெய்வங்களின் வழிபாட்டில் மட்டுமின்றி, பெருந்தெய்வ வழிபாடுகளில் இடம்பெறும் தேர் ஊர்வலங்களில் உப்பு, மிளகு கலந்து தேர்மீது இடுதல், அரிசி மாவினால் செய்யப்பட்ட மனித உருவங்களை வீசுதல் உள்ளிட்ட பல நிலைகளில் பலிச்சடங்குகள் தொடர்வதைக் காணலாம்.

தேங்காய் உடைத்தல், எலுமிச்சைகளைப் புதிய வாகனங்களின் சக்கரத்தில் வைத்தல், பூசணிக்காய் உடைத்து குங்குமம் இட்டு வீசுதல், பறவைக் காவடி, செடல் ஏறுதல், அலகு குத்துதல் முதலான பல சடங்கு நிகழ்த்துதல்களும் நரபலி, விலங்குகளின் பலியீட்டுச் சடங்கின் தொடர்ச்சியே.

முடிவுரை

> வெள்வாள் அமருட் செஞ்சோ றல்லது
> உள்ளா மைந்தர் உயிர்ப்பலி கொடுத்தன்று...

தமிழ்ச் சமூகத்தின் பலிச்சடங்குகள் குறித்த வரலாறுகளைக் காணும்போது, ஒவ்வொரு சமூக வளர்ச்சியிலும் அச்சமூகத்தின் தேவைகளை முன்வைத்த பலிச்சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இவற்றோடு இந்தப் பலிச்சடங்குகள் அச்சமூகத்தின் வளமைக் குறியீடுகளாகவும் உள்ளதைக் காணமுடிகிறது. பலிச்சடங்கு 19ஆம் நூற்றாண்டு வரை, தொடர்ச்சியாக நடைபெற்று வந்ததற்கான ஏராளமான சான்றுகள், நடுகற்களின் மூலமாகவும், கல்வெட்டுகளின் மூலமாகவும் அறிய முடிகிறது. சமகாலத்தில் நரபலி, விலங்கு பலிக்கான மாற்று வடிவமாக தேங்காய், எலுமிச்சை, பூசணிக்காய், அரிசி மாவினால் செய்யப்பட்ட பொம்மைகள் உள்ளதை இன்றைய காலத்தில்

நாட்டார் தெய்வ வழிபாட்டிலும் பெருந்தெய்வ வழிபாட்டிலும் காண்பதன் மூலம் பலிச் சடங்கின் தொன்மையையும் தொடர்ச்சியையும் அறிந்துகொள்ளலாம்.

துணை நூற்பட்டியல்

1. இரவிச்சந்திரன், சி.மா. (முதன்மைப் பதிப்பாசிரியர்). கொங்கு நாட்டுப்புறவியல். *கோயம்புத்தூர்: தமிழ்த்துறை*. பாரதியார் பல்கலைக்கழகம். 2008.

2. சீனிவாசன், இரா. (பதிப்பாசிரியர்). *தமிழகத்தில் பாரதம்: வரலாறு – கதையாடல்*. சென்னை: மாற்று வரிசை வெளியீடு. 2011.

3. கேசவராஜ், வெ. (முனைவர்). தென்னிந்திய நடுகற்கள். *சென்னை: காவ்யா பதிப்பகம், மே 2008.*

4. பழமலய், த. *நரபலி: தெய்வங்கள், திருவிழாக்கள்*. சென்னை: தன்னனானே பதிப்பகம். 2002.

5. பரமசிவன், தொ. *பண்பாட் டு அசைவுகள்*. நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம், ஆறாம் பதிப்பு. 2010.

6. பரமசிவன், தொ. *விடுபூக்கள்*. சென்னை: காலச்சுவடு பதிப்பகம், நான்காம் பதிப்பு. 2018.

7. வே. பார்த்திபன். *கல்லாகிப் போனவர்கள். ஆதிவனம் பதிப்பகம்*. ஈரோடு. 2023.

8. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி (தொகுப்பும் பதிப்பும்). *தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டினர் குறிப்புகள்*. புத்தநத்தம்: அடையாளம் பதிப்பகம். 2016.

9. மீனாட்சி மோ. *“நவகண்டம் கொடுக்கும் தொல் வழிபாடும் அரவான் களபலி சடங்கும்.” RMRL YouTube channel video:* https://www.youtube.com/watch?v=c_jyFppQF4Y. August 17, 2022.

10. வே. பார்த்திபன். *சோழநாட்டு நடுகற்கள*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். 2025.

முனைவர் மு. ஏழுமலை *சென்னை அரும்பாக்கத்தில் உள்ள துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியின் தமிழ்த்துறையில் பணியாற்றி வருகிறார். இவர் தெருக்கூத்து வாத்தியார்கள், தெருக்கூத்துக் கலைஞர் உருவாக்கம், தமிழ்ப் பண்பாட்டில் திரௌபதி, நாட்டார் தெய்வ வழிபாடு ஒரு பண்பாட்டுப் பொருளாதாரச் செலவு, சமுக வரலாறு: நாட்டார் வழக்காற்றியல், அரங்கம், உரையாடல் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். உங்கள் நூலகம், மணற்கேணி, அரிமா நோக்கு உள்ளிட்ட பல இதழ்களில் நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளைத் எழுதி வருகிறார்.* **elumalai.m81@gmail.com**

களஆய்வில் காணப்பெற்ற கலைச்செல்வங்கள்

கி. ஸ்ரீதரன்

கி. ஸ்ரீதரன்

ஆய்வுச்சுருக்கம்

காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்டங்களில் தொன்மைமிக்க பல ஊர்கள் அமைந்துள்ளன. வேளாண்மைத் தொழில் சிறப்புற்று விளங்கும் இப்பகுதியில் 'கொற்றவை எனப்படும் துர்க்கை' சிற்பங்கள் அதிகளவில் மக்களால் போற்றி வணங்கப்படுகின்றன. நீர்நிலை அருகில் அமைந்துள்ள பகுதியில் 'சேட்டை எனப்படும் மூத்தோள்' சிற்பங்களும் பெருமளவில் மக்களால் போற்றி வணங்கப்படுகின்றன.

திறவுச்சொற்கள்

கொற்றவை, துர்கை, சேட்டை, மூத்தோள், தவ்வை

தொல்லியல் ஆய்வுக்குக் கள ஆய்வு மிகவும் இன்றியமையாதது. கள ஆய்வுக்குச் செல்லும்போது பல்வேறு வகையான தொல்லியல் சான்றுகளைச் சேகரிக்க முடியும். அவை பானை ஓடுகள், பண்டைய காசுகள், கோயில்கள், கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓலைச்சுவடிகள். இவை அனைத்தும் ஓரிடத்தின் வரலாற்றுச் சிறப்பினைக் கூறுபவை.

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பிக்கும்போது தொன்மை மாறாமல் திருப்பணி மேற்கொள்வதற்காக, தொல்லியல் ஆலோசகராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதுதொடர்பில் தமிழ்நாட்டின் தொண்டை மண்டலத்தில் பல கிராமங்களில் உள்ள திருக்கோயில்களை ஆய்வுசெய்தோம். அவ்வாறு கள ஆய்வின்போது பார்க்கப்பட்ட கலையழகு மிக்க, சில சிற்ப வடிவங்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இவை.

காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்டங்களில் தொன்மைமிக்க பல ஊர்கள் அமைந்துள்ளன. வேளாண்மைத் தொழில் சிறப்புற்று விளங்கும் இப்பகுதியில் **'கொற்றவை எனப்படும் துர்க்கை'** சிற்பங்கள் அதிகளவில் மக்களால் போற்றி வணங்கப்படுகின்றன. நீர்நிலை அருகில் அமைந்துள்ள பகுதியில் **'சேட்டை எனப்படும் மூத்தோள்'** சிற்பங்களும் பெருமளவில் மக்களால் போற்றி வணங்கப்படுகின்றன.

சேட்டை (மூத்தோள்)

- மதுராந்தகம் வட்டம் காட்டுக்கூடலூர் என்ற கிராமத்தில் பொன்னி அம்மன் கோயில் அருகே இச்சிற்பம் வழிபடப்படுகிறது. வட்ட வடிவமான கல்லில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. அமர்ந்த கோலத்தில் தேவி தலைக்கு மேலே குடையும், இருபுறங்களில் சாமரங்கள் (கவரி) காணப்படுவது சிறப்பு. தேவியின் வலப்புறம் மாந்தி அமர்ந்திருப்பதைக் காணலாம். காலின் அருகில் இருபுறங்களிலும் குத்துவிளக்குகள் காணப்படுகின்றன. இச்சிற்ப வடிவத்தின் காலம் 10ஆம் நூற்றாண்டு.

- மதுராந்தகம் வட்டம் கருங்குழி அருகே அரையப்பாக்கம் என்ற ஊரில் கோயிலில் சேட்டை வழிபடப்படுகிறது. சேட்டை அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். வலது புறத்தில் மேல்பகுதியில் மாந்தியின் வடிவம் உள்ளது. இடதுபக்கம் காக்கைக் கொடி உள்ளது. அமர்ந்த தேவியின் காலின் இரு பக்கங்களில் சேடிப் பெண்களின் வடிவங்களும் உள்ளன. தலைக்கு மேலே மாந்தியின் அருகில்

சேட்டை - காட்டுக்கூடலூர்

சேட்டை - அரையப்பாக்கம்



கொற்றவை - இரும்புலி

கொற்றவை - தேன்பாக்கம்

சேட்டையின் ஆயுதமான கலப்பை உள்ளது. வேளாண்மை, நீர்நிலைகள் ஆகியவற்றைக் காக்கும் இறைவடிவமாக விளங்குகிறது

கொற்றவை: (துர்க்கை)

- மதுராந்தகம் வட்டத்தில் இரும்புலி என்ற கிராமத்தில் உள்ள செல்லி அம்மன் கோயில் அருகே இச்சிற்ப வடிவம் வழிபடப்பெறுகிறது. திறந்தவெளியில் ஏரிக்கரையில் இச்சிற்பம் காணப்படுகிறது. எட்டுக் கரங்களில் கத்தி, அம்பு, வாள், அம்பு ஆகியவை காணப்படுகிறன. இடதுகரங்களில் கத்தி, வில, கேடயம் ஆகியவை காணப்படுகிறன. காதுகளில் பெரிய அளவில் குழைகள் உள்ளன. எருமைத்தலை மீது நின்ற கோலம், காலுக்குக் கீழே வீரன் ஒருவன் தனது தலையை ஒருகையால் பிடித்துக்கொண்டு மறுகரத்தால் வாளைக் கொண்டு, தலையை அரிந்து காணிக்கையாக நவகண்டம் அளிக்கும் நிலையில் காணப்படுகிறது.
- இடதுபுறம் சிம்மமும் பின்புறம் மானும் வாகனங்களாகக் காட்சி அளிக்கின்றன. இச்சிற்பத்தின் காலம் 11ஆம் நூற்றாண்டு.

கொற்றவை - நெட்ரம்பாக்கம்

கொற்றவை - கீழ்க்குளத்தூர்

சண்டிகேசுவரர் - புத்தளி

- மதுராந்தகம் வட்டத்தில் தேன்பாக்கம் என்ற ஊரில் பசுபதீசுவரர் கோயில் அருகே இச்சிற்பம் வழிபடப்படுகிறது. மூன்று பாகமாக வளைந்து நின்ற நிலையில் (திரிபங்கமாக) காட்சி தருகிறார். தலையில் மூன்றடுக்காக கிரீடம். எட்டுக் கரங்கள். வலது கரங்களில் சக்கரம், வாள், மணி வலது, முன் மார்புக்குக் கீழே காட்டப்பட்டுள்ளது. இடது கரங்களில் சங்கு, கேடயம், வாள், இடது முன்கை இடையின் கீழே காட்டப்பட்டுள்ளது. தேவியின் பின்புறம் நீண்ட திரிசூலம் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்ப வடிவத்தை 10ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம். காலின் கீழ்பகுதி பூமியில் புதைந்துள்ளது.

- மதுராந்தகம் வட்டம் நெட்ரம்பாக்கம் என்ற ஊரில் கிராமத்து கோயில் அருகே இக்கொற்றவையின் சிற்பம் வழிபாட்டில் உள்ளது. தலையில் மூன்று அடுக்காக கிரீடம், காதுகளில் மகர குண்டலங்கள். எட்டுக் கரங்கள். வலது கரங்களில் பயன்படுத்தும்

நிலை (பிரயோக நிலையில்) சக்கரம், வாள், அம்பு, மலரேந்திய கரம் ஆகியவை காணப்படுகின்றன. இடதுகரங்களில் சக்கரம், கேடயம், வில் ஆகியவை காணப்படுகின்றன. சிற்பத்தின் கால்பகுதி பூமியில் புதைந்துள்ளது. பின்புறம் நீண்ட கழியுடன் திரிசூலம் காட்டப்பட்டுள்ளது. **இடதுபக்கத்தில் மேல்புறத்தில் மயில் இச்சிற்பத்தின் தனித்தன்மையாக விளங்குகிறது**. சிற்ப வடிவத்தைக் காணும்போது பிற்காலப் பல்லவர் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக விளங்குகிறது.

- செய்யாறு அருகே கீழ்குளத்தூார் என்ற கிராமத்தில் வயல்களுக்கு நடுவே கிராமத்துக் கோயிலொன்றின் அருகே இச்சிற்பம் வழிபாட்டில் உள்ளது. தேவி நின்ற கோலம். எட்டுக் கரங்களில் ஆயுதங்கள். தலைக்கு மேலே இருபுறமும் மானும் சிம்மமும் காட்டப்பட்டுள்ளது. காலின் கீழே வீரன் ஒருவன் தன் தலையைத் தானே அரிந்து அளிப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. இடதுபுறம் தேவியின் காவலர் கையில் வாளேந்திக் காட்டப்பட்டுள்ளார். சிற்பத்தின் வடிவம் வடிவமைப்பினைக் காணும்போது, இச்சிற்பம் 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்

சண்டிகேசுவரர்

உத்திரமேரூர் வட்டத்தில் புத்தளி என்ற கிராமத்தில் சத்திய நாதேசுவரர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோயிலில் வழிபாட்டில் உள்ள சண்டிகேசுவரர் சிற்பம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. தலைமுடியின் அலங்காரம் ஜடாபாரமாகவும், காட்சித் தருகிறது. நான்கு கைகளில் மேலிரு கரங்களில் இடது மேல் கரத்தில் மலர் உள்ளது. வலதுகரத்தில் மழுவும் இடதுகரம் தொடையில் ஊன்றிய நிலையிலும் காட்டப்பட்டுள்ளது. இடதுகாலை மடக்கி, வலதுகாலைத் தொங்கவிட்ட நிலையில் காட்சிதருகிறார். சிற்பவடிவினைக் காணும்போது 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக விளங்குகிறது. தொண்டை மண்டலப் பகுதியில் காணப்படும் இக்கவின்மிகு சிற்பங்கள் இப்பகுதியின் கலை வரலாற்றுக்கும், மக்களின் இறை வழிபாட்டுக்குமான சிறந்த சான்றுகளாக விளங்குகின்றன.

இந்த அரிய சிற்பங்கள், முறையாக ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

நிழற்படங்கள்

1. சேட்டை - காட்டுக்கூடலூர்
2. சேட்டை - அரையப்பாக்கம்
3. கொற்றவை - இரும்புலி
4. கொற்றவை - தேன்பாக்கம்
5. கொற்றவை - நெட்ரம்பாக்கம்
6. கொற்றவை - கீழ்க்குளத்தூர்
7. சண்டிகேசுவரர் - புத்தளி

கி. ஸ்ரீதரன் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் தொல்லியல், சிற்பம், கல்வெட்டு மற்றும் திருக்கோயில்கள் குறித்த ஆய்வுகள் செய்துள்ளார். கரூர், கொற்கை, கங்கைகொண்ட சோழபுரம் உட்பட பல வரலாற்று சிறப்புமிக்க இடங்களில் நடைபெற்ற அகழாய்வு பணிகளில் பங்கு பெற்றுள்ளார். மேலும், 3000-க்கும் மேற்பட்ட கலைப்பொருட்களை ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கியுள்ளார். 1983 ஆம் ஆண்டு புதுடெல்லியில் நடைபெற்ற தென்னிந்திய செப்புத் திருமேனிகள் கண்காட்சி அமைக்கும் பணியில் முக்கிய பங்கு வகித்துள்ளார். தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்னர், தனது கட்டுரைகளை நூல்களாக வெளியிட்டுள்ளார். தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை வெளியிடும் "திருக்கோயில்" இதழ்களில் இவரது கட்டுரைகள் வெளிவந்துள்ளன. **sridharmythily@gmail.com**

“கல்வெட்டுப் பிரிவை டெல்லி மாற்றாந்தாய் மனநிலையில் அணுகுகிறது”

முனைவர் இராசகோபால் சுப்பையா நேர்காணல்

விக்னேஷ் சீனிவாசன்

விக்னேஷ் சீனிவாசன்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் மூத்த கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர் முனைவர் இராசகோபால் சுப்பையா. தென்னிந்திய கல்வெட்டு தொகுதி *XLI* தொகுத்தவர். தொல்லியல் கழக வெளியீடான ‘ஆவணம்’ இதழின் பதிப்பாசிரியராகவும் உள்ளார்.



சு. இராசகோபால்

தமிழ்நாட்டுக் கல்வெட்டியல் ஆய்வு எப்போது தொடங்கியது?

தமிழ்நாட்டுக் கல்வெட்டியல் ஆய்வு 200 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியது. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி தென்னிந்தியாவில் கால்பதித்த காலந்தொட்டு இந்நாட்டை ஆளவேண்டும் என்ற நோக்கத்தில் உள்நாட்டு வரலாறு, நிர்வாகம், பண்பாடு ஆகியவற்றை அறிந்துக்கொள்ள கம்பெனி அலுவலர், கிறித்துவ போதகர் முதலியோர் முயற்சி மேற்கொண்டனர். அவ்வகையில் 1783-1821இல் நில அளவையாளராகப்பணியாற்றியகர்னல்காலின்மெக்கன்சிமேற்கொண்டஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. அன்றைய சென்னை மாகாணத்தின் (Madras Presidency) மைசூர் அரசுப் பகுதியிலும் பணியாற்றிய இவர், தன் முறையான அலுவலோடு அந்தந்த வட்டாரம் குறித்த தொல்லியல், வரலாறு, பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமயம் (குறிப்பாக சமண, புத்த சமயங்கள்) குறித்த எல்லாச் செய்திகளையும் தன் செலவில் அமர்த்திய தனி உதவியாளரைக் கொண்டு தொகுத்தார். ஏராளமான ஓலை, காகிதச் சுவடிகள், அரச குடும்பத்து வம்சாவளிகள், நாட்டார் வழக்குகள் எனப் பலவகையான செய்திகள், விவரங்கள் தொகுக்கப்பட்டன. இவை தமிழ், தெலுங்கு, கன்னடம், மராத்தி எனப் பல மொழிகளில் உள்ளன. இவற்றில் செப்பேடுகள், கல்வெட்டுகளும் அடங்கும். இதில் படிக்க முடிந்த கல்வெட்டுகளின் பாடங்கள் காகிதங்களில் எழுதப்பட்டன. எழுத்து புரியாத கல்வெட்டுகள் வரைபடங்களாக வரையப்பட்டன. இவையெல்லாம் மெக்கன்சி மறைவுக்குப் பின்னால், ‘மெக்கன்சி சுவடிகள்’ என்ற பெயரில் அட்டவணைப்படுத்தப்பட்டன. இவற்றுள் தமிழில் உள்ளவை, சென்னைக்

கீழ்திசைச் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. சில சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இத்தொகுப்பில் அடங்கிய தமிழ் கல்வெட்டுகள் யாவும் (சுமார் 1300) கல்வெட்டறிஞர் தி.நா.சுப்ரமணியன் அவர்களால் 'தென்னிந்தியக் கோவில் கல்வெட்டுகள்' என்ற பெயரில் மூன்று தொகுதிகளாக மேற்குறிப்பிட்ட நூலகமே வெளியிட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் இன்று நாம் கையாளும் மைப்படி முறையில் இல்லாமல் கண்படியாகப் பார்த்து எழுதப்பட்டவை. அவை பிழைகள் மலிந்து இருந்தாலும் பெரும்பாலும் செய்தியைப் புரிந்துக்கொள்ளும்படி உள்ளன. அக்கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட கற்கள் பலவற்றை இப்போது காணமுடியவில்லை. ஆகவே, அவற்றைப் பொறுத்தவரை நமக்கு இருக்கும் ஒரே தரவு மெக்கன்சி தொகுப்பில் கிடைக்கும் பாடங்களேயாதலால் மெக்கன்சிக்குக் கடமைப்பட்டுள்ளோம்.

முறையான கல்வெட்டியல் ஆய்வு எப்போது? யாரால் தொடங்கப்பட்டது?

முறையான கல்வெட்டியல் ஆய்வு என்பது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தொடங்கியது. ஆங்கிலேய அரசு துவங்கிய இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறை (*Archaeological Survey of India*) கோயில்கள், கோட்டைகள், சிலைகள் முதலிய பழங்காலப் பண்பாட்டுச் சின்னங்களைப் பற்றிய ஆய்வுகளோடு அவற்றோடு தொடர்புடைய கல்வெட்டுகளைப் படிக்கவும் வெளியிடவும் தூண்டியது. முறையான காலவாரியான வரலாற்றை, கல்வெட்டுகளிலிருந்தே பெறமுடியும் என்று பரவலாக நம்பப்பட்டது. இலக்கிய வரலாற்றுக்கும் உதவும் என்று வடமொழியில் நல்ல பயிற்சிபெற்ற அன்றைய மேனாட்டு அறிஞர் பலரும் நம்பினர். இந்தச் சூழலே தொல்லியல் ஆய்வுத்துறையில் கல்வெட்டுக்கென்று தனி அலுவலரை நியமிக்கத் தூண்டுகோலாக அமைந்தது.

தமிழ்க் கல்வெட்டியல் துறையில் ஜெர்மானிய அறிஞர் ஊல்சின் பங்களிப்பு யாது?

அன்றைய சென்னை மாகாண அரசு அதற்காகக் கல்வெட்டாய்வாளர் (*Epigraphist*) என்ற பதவியை உருவாக்கியது. தொடக்கத்தில் இருந்தே இப்பதவி இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையின் ஒரு பகுதியாகவே செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. இப்பதவியில் 1886ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முதல் கல்வெட்டாய்வாளராக வடமொழியும் தமிழும் அறிந்த ஜெர்மானிய அறிஞர் ஊல்சு (*Hultzsch*) நியமிக்கப்பட்டார். இவருடைய அலுவலகம் பெங்களூரில் இருந்து செயல்பட்டது.

ஊல்சு 1903ஆம் ஆண்டுவரை ஏறக்குறைய பதினேழு ஆண்டுகள் துறையின் தலைவராக இருந்தார். அவர் பணியில் சேர்ந்த சில நாட்களிலேயே மாமல்லபுரம் சென்று ஆய்வுசெய்தார். வடமொழியும் தமிழும் அறிந்த வெங்கையா என்ற இளைஞரை அங்கு சந்தித்தார். வெங்கையாவின் அறிவுக்கூர்மையை உணர்ந்து அவரைத் தன்னுடைய ஆய்வு உதவியாளராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். வெங்கையாவும் அவருடைய முதல் துணை அலுவலராக உடனே இணைந்து விடுகிறார். நான்கு ஆண்டுகள் கழித்து கிருஷ்ண சாஸ்திரி இரண்டாம் உதவியாளரானார். 1905ஆம் ஆண்டில்தான் மூன்றாம் உதவியாளராக கே.வி. சுப்ரமணிய ஐயர் சேர்ந்தார். தமிழ் பிராமி கல்வெட்டுகளின் புதிர்களை அவிழ்த்து, அவை தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன என்று முதலில் நிறுவிய பெருமை இவருக்கு உண்டு.

மாமல்லபுரத்திற்குப் பின் ஊல்சு தஞ்சாவூர்க் கல்வெட்டுகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். தொடர்ந்து காஞ்சிபுரம், சிதம்பரம், திருவரங்கம், நாகப்பட்டினம், மதுரை, கங்கைகொண்ட சோழபுரம், கீழப்பழுவூர் போன்ற பல பெரிய கோயில்கள் உள்ள ஊர்களில், கல்வெட்டுகளைப் படியெடுத்தனர். ஆண்டறிக்கைகளைப் படிக்கும்போது ஊல்சும் அவரது உதவியாளர்களும் ஆற்றிய உழைப்பு மலைக்க வைப்பது. போக்குவரத்து வசதிகள் மிகக்குறைவாக இருந்த காலம் அது. அக்காலத்தில் கள ஆய்வுக்காக பெரும்பாலும் ரயிலில்தான் பயணம் செய்யமுடியும். ஊல்சு 1891இல் கரூரில் இருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் வழியில் குளித்தலை ரயில் நிலையத்தில் இறங்கி காவேரியின் தென்கரையில் வெட்டுவாய்த்தலை என்ற பேட்டைவாய்த்தலையையும், எதிர்கரையில் முசிறிக்கு அருகில் இருந்த ஒருவாய்த்தலையையும் பார்வையிட்டதாகவும் அவை பற்றிய கல்வெட்டுகளைப் படியெடுத்ததாகவும் தம் அறிக்கையில் ஆர்வமாகக் குறிப்பிட்டுள்ளார். தென்கரையில் இருந்து வடகரையில் இருக்கும் முசிறிக்குப் பரிசல் மூலம் ஆற்றைக் கடந்து சென்றதைச் சொல்லிவிட்டு இந்த இரண்டு வாய்த்தலைச் சிறப்புகளை, குறிப்பாக பேட்டைவாய்த்தலையின் பொறியியல் மேன்மையை வியந்து சொல்லியுள்ளார்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் முந்தைய இந்த இரண்டு வாய்த்தலைகளையும் ஒரு சிறந்த பாரம்பரியச் சின்னமாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும். ஊல்சு வியந்த இடமா இது என்ற சந்தேகம் வரும் அளவுக்குத்தான் அந்த வாய்த்தலைகள் இப்போது உள்ளன.

கல்வெட்டுகளைப் படியெடுத்துத் தொகுத்ததோடு அவற்றை விரைவில் பதிப்பித்து நூலாக வெளியிடவும் தொடக்கத்திலிருந்தே பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஊல்சு இதற்காக தென்னிந்தியக் கல்வெட்டுகள் (*South Indian Inscriptions*) என்ற வரிசையைத் துவக்கிவைத்தார். முதல் மூன்று தொகுதிகளை ஊல்சே பதிப்பித்தார். கள ஆய்வுப்பணியும், பதிப்பிக்கும் பணியும் ஒருசேர நடந்ததனால் நாளடைவில் பாடங்களைப் பதிப்பித்து வெளியிடும் பணி சுணங்கிவிட்டது. இத்துறையில் மைப்படியில் இருந்து மூலப்பாடங்களை இன்றைய எழுத்தில் பெயர்த்தெழுதும் முறை குறிப்பிடத்தக்கது. முதலில் உதவியாளர் படித்த பாடத்தை, அவருடைய மூத்த ஆய்வாளர் திருத்தி, மீண்டும் முதன்மை ஆய்வாளர் இறுதித் திருத்தம் செய்வார். இப்படித் திருந்திய பாடம் (*Transcript*) பெற நிறைய நேரம் தேவை. ஊல்சு பதிப்பித்த முதல் மூன்று தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் மூலப்பாடத்தோடு அதன் ஆங்கில மொழிபெயர்ப்பும் விரிவான விளக்கங்களும் கொண்டிருந்தன. தஞ்சாவூர்க் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ள இரண்டாம் தொகுதியைப் பார்த்தால் இந்த உண்மை புரியும். இந்த விரிவான பதிப்பு முறையும், வெளியீட்டு வேலை தேங்கியதற்கான இன்னொரு காரணம்.

இந்திய தொல்லியல் துறையின் கீழ் இயங்கிவந்த கல்வெட்டியல் ஆய்வுகள் கடந்த 30 ஆண்டுகளில் சுணங்கியது ஏன்?

தொடக்கம் முதல் பெங்களூரில் இயங்கிவந்த கல்வெட்டாய்வாளர் அலுவலகம் 1897ஆம் ஆண்டில் ஊட்டிக்கு மாற்றப்பட்டது. பின் 1966ஆம் ஆண்டில் மைசூருக்கு மாற்றப்பட்டது. 1945ஆம் ஆண்டு வரை தென்னிந்திய அளவில் இயங்கிவந்த கல்வெட்டியல் துறை அதற்குப் பிறகு இந்தியா முழுமைக்கும் இயங்க வேண்டும் என்று விரிவுபடுத்தப்பட்டது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளோடு வட இந்திய மொழிகளுக்கும் இடம் அளிக்கப்பட்டது. முதலிலிருந்து இந்த அலுவலகம் இந்தியத் தொல்லியல் துறையின் ஒரு பிரிவாகவே இயங்கி வந்தது. தொடக்கத்தில் தொல்லியல் துறையில் பெரும்பாலானவர்கள் கல்வெட்டியலிலும் நல்ல ஈடுபாடு கொண்டிருந்தனர். பலர் கல்வெட்டுகளைப் பதிப்பிக்கும் பணியிலும் ஆர்வமாகப் பங்கேற்றனர். நாளடைவில் தொல்லியலாளருக்கும் கல்வெட்டியலாளருக்கும் இடைவெளி அதிகமாகியது. இன்று பணியில் இருக்கும் தொல்லியலாளர் பலருக்கும் கல்வெட்டியல் தொடர்பே இல்லை. அதனால், கல்வெட்டியல் பிரிவு இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையில் ஒரு சுருங்கிய இடத்தையே பெற்றுள்ளது. மாற்றாந்தாய் போலவே டெல்லியில் உள்ள தலைமை அலுவலகம் இப்பிரிவை நடத்துகிறது. இதுவே, இன்று கல்வெட்டுப் பிரிவின் தேக்கத்திற்கு முக்கியக் காரணமாகும். கடந்த முப்பது ஆண்டுகளில் அப்பிரிவில் முதுநிலை ஆய்வாளர் பலர் ஓய்வுபெற்றதும் அவ்விடங்கள் நிரப்பப்படவில்லை. இன்று முதுநிலைப் பதவிகள் யாவும் வெற்றிடங்களாக உள்ளன.

1960களில் கல்வெட்டியல் பிரிவில் மொத்த ஆய்வாளர் எல்லா மொழிகளுக்கும் சேர்த்து 15 பேர்தான் இருந்திருப்பார்கள். அவர்களுள் தமிழ் மொழிக்கு 5 பேர் சராசரியாக இருந்து வந்துள்ளார்கள். ஆயினும் இத்துறையினர் தொகுத்துள்ள கல்வெட்டுகள் சராசரியாக ஆண்டுக்கு 600 இருக்கும்.

பல ஆண்டுகளாகத் தமிழ்க் கல்வெட்டுகளின் எண்ணிக்கை குறித்து சர்ச்சைகள் எழுந்த வண்ணம் உள்ளன. உண்மையிலேயே இதுவரை எத்தனை தமிழ்க் கல்வெட்டுகள் இருக்கின்றன? ஏதேனும் புள்ளிவிவரங்களைப் பகிர முடியுமா?

இதுவரை சேர்ந்துள்ள கல்வெட்டுகளின் மொத்த எண்ணிக்கை (தோராயமாக) 70,000 ஆகும் (ஒரு பதினைந்து ஆண்டறிக்கைகள் இன்னும் வெளியாகாததால் இந்தக் கணக்கு முழுமையானது அல்ல). அவற்றுள் தமிழ் முதலிய தென்னிந்திய மொழிக் கல்வெட்டுகள் 55,000. தமிழ்க் கல்வெட்டுகள் மட்டும் 27,000 என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் தென்னிந்தியக் கல்வெட்டுகள் வரிசையில் 25 தொகுதிகளில் பாடங்களோடு வெளியிடப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் 11,000 ஆகும். மேலும் வெளியிட வேண்டியவை 16,000.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடங்கப்பட்டது எப்போது?

1961ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தொடங்கப்பட்டது. தொடங்கிய சில ஆண்டுகளில் அலுவலகம் நிலையான வடிவம்பெற்ற பிறகு தமிழ்நாடு முழுக்க உள்ள கல்வெட்டுகளைத் தொகுக்கவேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது. அன்று ஒரு முக்கிய அரசியல்வாதியும் தமிழறிஞருமான சா.கணேசன், இந்தத் திட்டத்திற்குத் தூண்டுகோலாக இருந்தார். மாவட்டவாரியாக இந்தக் கல்வெட்டுகளைத் தொகுக்க வேண்டும் என்றார். முதன்முதலில் சென்னை நகரக் கல்வெட்டுகளும் அடுத்து செங்கம் நடுகல் கல்வெட்டுகளும் படியெடுக்கப்பட்டன. அடுத்து கன்னியாகுமரி, தஞ்சாவூர் மாவட்டக் கல்வெட்டுகள் தொகுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. ஆர்வம் நிறைய இருந்தது. ஆனால் முறையாக இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்தனர். இந்தத் துறையின் முதல் இயக்குநர் இரா.நாகசாமி அவர்கள் தொடக்க ஆண்டுகளில் துறையில் சேர்ந்த ஆய்வாளர்களுக்கு முறையான கல்வெட்டுப் பயிற்சி அளித்தார். ஆகவே 1970 முதல் 2000 ஆண்டுவரை துறையில் தேர்ந்த கல்வெட்டியலாளர்கள் பத்து பன்னிரண்டு பேர் தொடர்ந்து இருந்துள்ளார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சு. இராசகோபால் இவர் தென்னிந்திய கல்வெட்டு தொகுதி *XLI* தொகுத்தவர். தொல்லியல் கழக வெளியீடான 'ஆவணம்' இதழின் பதிப்பாசிரியராகவும் உள்ளார். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கல்வெட்டாய்வாளராக பணியாற்றி ஓய்வுபெற்றார். கல்வெட்டுகளை படியெடுப்பதிலும் படிப்பதிலும் அதீத ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்.

விக்னேஷ் சீனிவாசன் *இளங்கலையில் பொறியியல் பட்டப்படிப்பை அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் பயின்றபோது தமிழர் வரலாறு மற்றும் தொல்லியலின் மீது ஏற்பட்ட பெரும் நாட்டம் காரணமாக, முதுகலையில் பண்டைய வரலாறு மற்றும் தொல்லியலை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயின்றார். தற்போது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் இணை இயக்குநர் முனைவர் இரா. சிவானந்தம் அவர்களின் வழிகாட்டலின்கீழ், இடைக்கால தமிழ்நாட்டில் சமய பிரிவுகளின் சமூக தாக்கங்கள் குறித்து முழுநேர முனைவர் பட்ட ஆய்வை சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் தொடர்ந்து வருகிறார்.*
vigneshsrinivasang@gmail.com

முதுவாய்ப் பல்லி
புலவர் மரபு காட்டும் குறியீட்டுப் புலப்பாடு

மு. சத்தியா

மு. சத்தியா

ஆய்வுச்சுருக்கம்

பாட்டும் தொகையுமாய் அமைந்திருப்பது சங்க இலக்கியம். இவ்விலக்கியத்தில் வர்ணிக்கப்படும் சில காட்சிகள் புலவனால் மறைமுகமாகச் சொல்லப்படும் குறிப்புகளாகும். அப்படி மதுரை மருதனிளநாகனாரால் சொல்லப்பட்ட 'முதுவாய்ப் பல்லி' என்னும் சொற்றொடரை ஒரு குறியீடாகப் பார்க்கலாம். 'நிரை நிலை நடுகற் பொருந்தி இமையாது இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி' என்ற வரி 'வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவரோ'டு பொருந்துவதைக் காணலாம். முதுமை வாய்ந்த அப்பல்லி நடுகல் மீதிருந்து தான் விரும்பும் உணவிற்காகக் காத்திருக்கிறது. இது பாலைநில வழியில் வணிகர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கும் 'வன்கண் ஆடவரை'க் காட்டுவதாக அமைகிறது. இதனால் ஆநிரையை மீட்டவருக்கு மட்டுமல்லாது 'சாத்துஎறி போரில்' அதாவது வணிகர்களை வீழ்த்தி அவர்களின் பொருள்களைக் கவரும் போரில் இறந்த வீரர்களுக்கும் நடுகல் நடும் வழக்கம் இருந்திருப்பது தெரியவருகிறது.

திறவுச்சொற்கள்

பல்லி, நடுகல், ஆகோள், பூசல், சாத்துஎறி, போர், வருநர், ஆடவர்

சங்க இலக்கியத் தொகுதிகளில் புலவர் மரபால் படைக்கப்பட்ட அகம், புறம் சார் புனைவுகளில் பழந்தமிழரின் வாழ்வியல் கூறுகளைப் பெரிதும் காணமுடிகிறது. வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய பெருங்கற்கால நாகரிக வாழ்வின் எச்சங்களும் சங்க இலக்கியத்தில் பதிவாகியுள்ளன. இப்பெருங்கற்காலத்தின் இறுதிப்பகுதியில் உருவானதே 'நடுகல்' நடும் மரபு. இது இறந்த வீரனுக்கு நடப்படும் நினைவுச்சின்னம் போன்றதாகும். கல்வட்டம், கல்திட்டை, கற்பதுக்கை, நெடுங்கல் போன்ற பெருங்கற்படைச்சின்னங்களின் வளர்ச்சி வரிசையில் இறுதி இடத்தைப் பிடிப்பது நடுகல்லாகும். இந்நடுகற்கள் ஆநிரை பூசலில் இறந்துபடுவோருக்கு நடப்படும் கல் என்பது பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாகும்.

சங்க காலத்தில் நிரை மீட்ட வீரர்களுக்கே நடுகல் வைக்கப்பட்டுள்ளது, நிரைமீட்ட வீரர்களைக் கரந்தையர் என்று சங்க இலக்கியம் குறிப்பிடும். இவர்களைக் குறிக்க மறவர், ஆடவர், தறுகண் ஆளர் போன்ற சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன **(ர.பூங்குன்றன், கொற்றவையும் நடுகற்களும், ப.7).**

சங்கப்பாடல்களில் பெரும்பாலனவை, ஆநிரைப் போர்களில் மடிந்த வீரர் பொருட்டு எழுப்பப்பட்ட கற்களைக் குறித்தே பேசுகின்றன **(வெ.கேசவராஜ், தென்னிந்திய வீரக்கற்கள், ப.81).**

வேட்டை, ஆநிரை கவர்தல், மீட்டல் ஆகிய நிகழ்வுகளில் நடந்த போராட்டங்களில் 'வீர' மரணமடைந்த வீரர்கள் / மறவர்களுக்குக் காடுகள், மரங்கள் இருந்த சிறு பாதைகள், வண்டிப்பாதைகள் (உமணர் சென்ற பாதை) ஆகியவற்றின் ஓரங்களில் நடுகற்களை நாட்டி, அவற்றில் இறந்த வீரர்களின் பெயர்களை வைத்து அவற்றை வழிபட்டது 'சங்க' கால வழக்கமாகியிருந்தது **(ராஜ் கௌதமன், பாட்டும் தொகையும் தொல்காப்பியமும், ப.197)**

சங்ககாலப் புலவரான மதுரை மருதனிளநாகனார் நடுகல் பற்றிய குறிப்புகளைத் தம் பாடல்களில் இணைத்துப் பெரிதும் பேசியுள்ளார். இவர் நடுகல்லைப் பற்றி குறிப்பிடும்போது 'முதுவாய்ப் பல்லி' என்ற ஒரு குறியீட்டைக் காட்சிப்படுத்துகிறார். அதாவது, நடுகல் மீது அமர்ந்து தன் இரைக்காகக் காத்திருக்கும் ஒரு முதுமை வாய்ந்த பல்லி. இந்த உருவகம் கரந்தை வீரர்களுக்கே நடுகல் நடப்படுகிறது என்கிற கருத்துக்கு முரணாக அமைந்துள்ளது. இதனால் நடுகல் கரந்தை வீரர்களுக்கு மட்டுமே நடப்படும் நினைவுக்கல்லா? மருதனிளநாகனாரின் 'முதுவாய்ப் பல்லி' என்னும் உருவகம் எதன் குறியீடு? கரந்தையாரைத் தவிர பிற வீரர்களுக்கு நடுகல் நடப்பட்டிருந்தால் அவர்கள் யார்? என்ற கேள்விகளை எழுப்பிக் கொண்டு இக்கட்டுரை நகர்கிறது.

நடுகல் தொடர்பான ஆய்வில் தவிர்க்க முடியாத சங்ககாலப் புலவர் மருதனிளநாகனார். இவர் சங்க இலக்கியத்தில் நடுகல் பற்றிய குறிப்புகளைக் கொண்ட ஆறு பாடல்களைப் பாடியுள்ளார். நடுகல்லிற்கு முன்னிருந்த பெருங்கற்படைச் சின்னமான நெடுங்கல் (அகம்.269), நடுகற்களுக்கு ஏற்படும் விபத்துகள் (அகம்.297,343,365), 'குயிலெழுத்து', 'கோட்டெழுத்து' என்று நடுகல்லில் உள்ள எழுத்துப்பொறிப்புகள் (அகம்.297,343), கல்லில் உள்ள எழுத்துப்பொறிப்புகளை வாசிக்க முயலும் வழிப்போக்கர்கள் (அகம்.297,343), அக்கல்லிற்கு பீலி, கரந்தை சூட்டுதல் (அகம்.131,269) முதலானவற்றை இவர் பாடல்களில் காணலாம். இதனால், தொல்லியல் அறிஞர் ர.பூங்குன்றன் மருதனிளநாகனாரைக் 'கல் பாடிய மருதனிளநாகனார்' என்றழைக்கிறார் **(ர.பூங்குன்றன், தொல்குடி - வேளிர் - அரசியல், ப.78)**. *இந்த மருதனிளநாகனார் தரும் 'முதுவாய்ப் பல்லி' பற்றிய குறிப்பு நடுகல் பற்றிய மரபார்ந்த கருத்தைக் கட்டுடைப்பதாக அமைந்துள்ளது.*

பொருள் தேடி தலைவன் பிரிந்து செல்ல உள்ளான் என்பதைத் தலைவி அறிந்துகொள்கிறாள். இதனால், தன் திருந்திய அணிகலன்கள் நெகிழ, தன் பெரிய தோள் மெலிய, நீரொழுகும் கண்ணோடு காணப்படுகிறாள். அதனைக் கண்ட தோழி, தலைவன் கடந்து செல்ல உள்ள வழியின் நிலையை அவனுக்கு எடுத்துரைத்து, செலவழுங்கச் செய்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில்தான் 'முதுவாய்ப் பல்லி' உருவகத் தன்மை கொண்டதாகவுள்ளது.

வில் ஈண்டு அருஞ் சமம் ததைய நூறி
நல் இசை நிறுத்த நாணுடை மறவர்
நிரை நிலை நடுகற் பொருந்தி இமையாது
இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி
சிறிய தெற்றுவது ஆயின் பெரிய
ஓடை யானை உயர்ந்தோர் ஆயினும்
நின்றாங்குப் பெயரும் கானம் **(அகம்.387:13-19)**

வில்லைக் கொண்டு அரிய போர் ஒன்று நடந்துள்ளது. அப்போரில் வெற்றி பெற்று, தன் புகழை நிலைநாட்டி இறந்த, மானம் மிக்க வீரர்களுக்கு நடுகற்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்நடுகற்கள் கூட்டமாக வரிசையாக நிலைகொண்டுள்ளன. இந்நடுகற்களில் ஒரு முதுமை வாய்ந்த பல்லி பொருந்தி இருந்து கண் இமைக்காமல் தான் விரும்பும் இரைக்காகக் காத்துக்கிடக்கிறது. இந்நடுகற்கள் வரிசையாக நிலைபெற்றுள்ள இந்தக் காட்டு வழியில் அப்பல்லியின் 'தடை ஓசை'யைக் கேட்டபின் பெரிய நெற்றிப்பட்டத்தை அணிந்துள்ள யானையில் வரும் உயர்ந்தோனாகிய அரசனாக இருந்தாலும் அதற்கு மேல் செல்ல அஞ்சி திரும்பிச் செல்வர். அத்தகைய காட்டு வழியில் தலைவன் செல்ல உள்ளான்.

இப்பாடலில் மருதனிளநாகனார் 'நிரை நிலை நடுகற் பொருந்தி இமையாது இரை நசைஇக் கிடந்த முதுவாய் பல்லி' என்று ஒரு காட்சியைக் காட்டுகிறார். வரிசையாக நடப்பட்டிருக்கும் நடுகல்லில் ஒரு முதுமை வாய்ந்த பல்லி, கண் இமைக்காது தனக்கான இரையை எதிர்நோக்கி விரும்பிக் காத்துக் கிடக்கிறது. புலவர் கையாண்டுள்ள இக்காட்சி பாலைநில வழியில் வணிகர்களைக் கொன்று அவர்களின் பொருட்களைக் கவரக் காத்திருக்கும் ஆடவர்களோடு பொருந்துவதைக் காணலாம். பாலைவழியில் பயணம் செய்யும் வணிகர்களை இரையாகவும் அவர்கள் கொண்டுவரும் பொருளுக்குக் காத்திருக்கும் ஆடவரை, இரைக்காகக் காத்திருக்கும் முதுமை வாய்ந்த பல்லியாகவும் பொருத்திப் பார்க்கலாம்.

மேலும், வில்லைப் பயன்படுத்தி போர் நடந்திருப்பது 'வில் ஈண்டு அருஞ்சமம்' என்ற தொடர் கொண்டு தெரிந்துகொள்ளலாம். ஆனால், அது என்ன வகையான போர், எதற்காக நடந்த போர், அங்கு நடப்பட்டிருக்கும் நடுகல் யாருக்கானது போன்ற செய்திகளைப் புலவர் வெளிப்படுத்தவில்லை.

பாலை வழியில் பயணப்படும் வணிகர்களுக்காகக் காத்திருந்து அவர்கள் சுமந்து வரும் பொருள்களைக் கவரும் ஆடவர்கள் பற்றிய சில பாடல்களைக் காண்போம்.

பொருள் தேடிச் சென்ற தலைவன் உரிய காலத்தில் வாராதது கண்டு மெலிந்த தலைவியைத் தோழி ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது இப்பாடல்,

.. செங்கோல்
கருங்கால் மராத்து வாஅல் மெல்இணர்
சுரிந்துவணர் பித்தை பொலியச் சூடிக்
கல்லா மழவர் வில்லிடத் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை (அகம்.127:12-17)

செம்மையான கொம்பினையும் கருமையான காம்பினையும் கொண்டு வெண்மை நிறத்தில் மரா என்னும் மரத்தின் பூங்கொத்து பூத்திருக்கும். இப்பூங்கொத்தை மழவர்கள் தங்களின் சுருண்டு வளைந்துள்ள தலைமயிர் பொலியச் சூடிக்கொள்வர். இவர்கள் வில்லினைத் தம் இடப்பக்கத்தில் தழுவி பொருள் கொண்டு பாலைவழியில் வரும் வணிகர்களை எதிர்ப்பார்த்து காத்திருப்பர். இவர்கள் பொருள் கவர்தலன்றி வேறொன்றும் அறியாத 'கல்லா மழவர்'கள்.

பொருள் தேடிச் செல்வதற்குத் தலைவன் விரும்புகிறான். ஆனால் தான் செல்லவிருக்கும் பாலைநிலத்தின் தன்மைகள் அவன் முன்னால் தோன்றி அச்சத்தை ஏற்படுத்துகிறது. இப்பாடல், குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது.

புறவு புறத்து அன்ன புன் கால் உகாஅத்து
இறவு சினை அன்ன நளி கனி உதிர
விடு கணை வில்லொடு பற்றி கோடு இவர்பு
வருநர் பார்க்கும் வன்கண் ஆடவர்
நீர் நசை வேட்கையின் நார் மென்று தணியும்
இன்னா கானமும்... (குறுந்.274:1-6)

புறாவின் முதுகு போன்ற நிறம் கொண்டது உகா என்னும் மரம். அம்மரத்தின் காய்கள் இறால் மீன்களைப் போல அமைந்திருக்கும். இவ்வுகா மரத்தில் வன்மையான கண் கொண்ட 'ஆடவர்'கள் அம்புகளை விடத் தயாராக வில்லினை ஏந்திக்கொண்டு, மரத்தின் காய்கள் உதிரும்படி அதன் கிளை மேல் ஏறி அமர்ந்திருப்பர். இவர்கள் அவ்வழியே பொருள் கொண்டு வரும் வணிகர்களை எதிர்பார்த்துக் காத்திருப்பர். பாலைநிலப்பகுதி நீரற்று இருப்பதால் அவர்கள் தாகம் எடுக்கும்போது மரப்பட்டையை மென்று தாகம் தணித்துக் கொள்வர்.

மருதனிளநாகனாரின் மற்றொரு பாடலில் நடுகல் அமைந்திருக்கும் காட்டுப் பகுதியில் 'வருநர்' யாரும் அவ்வழியே வராததால் தன் கவலை தீர்ப்பார் இன்றி தவிக்கும் 'கடுங்கண் ஆடவ'ரைக் காட்டுகிறார்.

அத்தம் நடுகல் ஆளென உதைத்த
கான யானைக் கதுவாய் வள்ளுகிர்
இரும்பனை இதக்கையின் ஒடியும் ஆங்கண்
கடுங்கண் ஆடவர் ஏமுயல் கிடக்கை
வருநர் இன்மையிற் களையுநர்க் காணா
என்றூழ் வெஞ்சுரம்... (அகம்.365:4-9)

காட்டு வழியில் நடப்பட்டிருக்கும் நடுகல்லை ஆள் என்று நினைத்து உதைத்த யானையின் வலிமையான நகம் பெரிய பனையின் தோட்டினைப் போல ஒடியும். அத்தகைய வலிமையான நடுகற்கள் நடப்பட்டிருக்கும் காட்டு வழியில் கடுமையான கண்களையுடைய 'ஆடவர்'கள் அம்பு எய்யும் முயற்சியோடு பதுங்கி இருப்பர். வழி செல்வோர் இன்மையால் அதாவது வணிகர்களின் வரவு இன்மையால் தம் வறுமையைக் களைபவர் இன்றி வாடுவர். இத்தகைய பாலைநில வழியை எண்ணி கவலையுற்ற தன் நெஞ்சினைத் தலைவன் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது மேற்கண்ட பாடல்.

பாலை வழியைக் கடந்து பொருள் தேடிச் செல்ல நினைக்கும் தலைவனைத் தோழி செலவு அழுங்குவிப்பதாக அமைந்துள்ளது இப்பாடல்.

விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நல்நிலை பொறித்த கல்நிலை அதர
அரம்புகொள் பூசல் களையுநர்க் காணாச்
சுரஞ்செல... (அகம்.179:7-10)

குறிதப்பாத செம்மையான அம்பினையும் வளைந்த வில்லினையும் உடையவர்கள் 'ஆடவர்'கள். இவர்கள் எழுத்துப் பொறிப்புகள் நிலைபெற்றிருக்கும் நடுகற்கள் உள்ள பாலைவழி அதிரப் பூசலில் ஈடுபடுவர். இவர்களின் பூசலைக் களைபவர் இன்றி, அதாவது பொருள் கொண்டு வரும் வணிகரின் வரவு இன்றி, பாலைநில வழி இருக்கும்.

இந்நான்கு பாடல்களிலும் பொருள் கொண்டு வரும் வணிகர்களை எதிர்நோக்கி நடுகற்கள் உள்ள காட்டுவழியில் 'ஆடவர்'கள் காத்திருக்கின்றனர். இவர்கள் வில் கொண்டு போர் செய்வோர். இவர்கள் வணிகர்கள் கொண்டுவரும் பொருட்களைக் கொள்ளையடிப்பவர்கள். இந்த வணிகர்களின் வரவு இன்மையால் தம் வறுமை களைபவர் இன்றி வருத்தம் கொள்கின்றனர். இதனோடு மருதனிளநாகனார் காட்டும் 'முதுவாய்ப் பல்லி' பொருந்திப் போவதைக் காணலாம்.

காட்டுவழிச் செல்வோரை ஒளிந்திருந்து தாக்கிக் கொன்று இவர்களது பொருட்களைப் பறித்துத் தமக்குள் கூறுபோட்டுப் பிரித்த மறவர் – மழவர் பற்றிய செய்திகள் அகப்பாடலின் பாலைத்திணைப் பாடல்களில்தான் காணப்படுகின்றன. ஆநிரை கவர்தல் வேறு, ஆட்களைக் கொன்று பொருள் கவர்தல் வேறு. இனக்குழு மறவருள் ஒரு பிரிவினர் உடைமை நாகரிகத்தைச் சேர்ந்த வணிகர், வழிச் செல்வோர் போன்றோரைத் தாக்கிப் பொருள் சேர்த்தனர். **(ராஜ் கௌதமன், ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், ப.34)**

வழி செல்வோரைக் கொன்று அவர்களின் பொருட்களைக் கொள்ளையடிப்போரைப் பொருநராற்றுப்படை 'ஆறலை கள்வர்' என்று சுட்டுகிறது. ஆறு + அலை + கள்வர் எனப் பிரித்து வழிசெல்வோரை வருத்தம் கொள்ள செய்யும் கள்வர்கள் என்று இதற்கு பொருள் கொள்ளலாம். 'ஆறலை கள்வர்' என்ற சொல் சங்க இலக்கியத் தொகுதியில் பொருநராற்றுப்படையில் மட்டும்தான் காணப்படுகிறது. பொருநராற்றுப்படையில் பாலையாழின் சிறப்பைக் கூறுமிடத்து ஆறலை கள்வர்கள்கூட, தம் படைக்கலங்களைக் கைவிடும்படி செய்ய கூடிய தன்மையைக் கொண்டது பாலையாழ் என்று கூறப்பட்டுள்ளது.

ஆறு அலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவுஇன் பாலை (பெருநர்.21,22)

இவர்கள் வறட்சியின் காரணமாக உணவு இல்லாததால் கொள்ளையிடல், வணிகர்களிடம் வழிப்பறி செய்தல், ஊரைச் சூறையாடுதல் முதலியவற்றில் ஈடுபட்டிருக்க வேண்டும். இந்நிலையை 'மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயலில்' (அகம்.245:5) மேகங்கள் மழை பொழிவதை மறந்து போனதால் மூங்கில்கள் வற்றிப்போன பாலைவழி என்னும் அகப்பாடலின் அடி வெளிப்படுத்துகிறது.

'வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவர்' என்பதில் வருநர் என்போர் இவ்விடத்தில் வணிகர்களாக இருக்க வேண்டும். வருநர் என்பதற்குப் புதிதாய் வருபவர், விருந்தினர், தலைவன் என்று பாட்டும் தொகையும் (இலக்கிய அகராதி) பொருள் தருகிறது (பாட்டும் தொகையும், ப.145). சங்க இலக்கியத் தொடரடைவின்படி 'வருநர்' என்ற சொல் 14 இடங்களில் வந்துள்ளன.

இதில் மூன்று இடங்களில் மட்டும்தான் பாலைவழியில் செல்லும் வணிகர்களை இச்சொல் சுட்டி நிற்கிறது. ஆனால், வருநர் என்போர் வணிகர்களே என்பதை நிறுவுவதற்கு பிற சங்கப் பாடல்கள் உதவுகின்றன.

...சாத்து எறிந்து
அதர்கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் படுபகை வெரீஇ
ஊர் எழுந்து உலறிய பீர் எழு முது பாழ் (அகம்.167:7-10)

காட்டுவழியில் பயணப்படும் வணிகர்களைக் கொன்று அவர்களிடமிருந்து பறித்த பொருட்களை அச்சம் தரும் அம்புகளையும் வளைந்த வில்லையும் கொண்ட 'ஆடவர்'கள் தமக்குள் பங்கு போட்டு கொண்டனர். இவர்களுக்கு அஞ்சிய மக்கள் அவர்கள் வாழும் ஊரைவிட்டு அகன்றதால் அவ்வூர் பாழ்பட்டு போனது என்பதை இந்த அகநானூற்றுச் செய்யுள் உரைக்கிறது.

மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயலில்
செல்சாத்து எறியும் பண்புஇல் வாழ்க்கை
வல்வில் இளையர் தலைவர் எல் உற (அகம்.245:5-7)

மேகங்கள் பொழிவதை மறந்துபோனதால் மூங்கில்கள் வற்றிப்போன பாலைவழியில் பயணம் செய்யும் வணிகர்களைத் தாக்கியழிக்கும் பண்பற்ற வாழ்க்கையுடையவர்கள் வலிமையான வில் கொண்ட இந்த மறவர் கூட்டத்தினர் என்கிறது இச்செய்யுள். இது மருதனிளநாகனாரின் மற்றொரு பாடலாகும். இவ்விரு பாடல்களிலும் வரும் 'சாத்து எறிந்து', 'சாத்து எறியும்' என்னும் சொற்றொடர்கள் கவனிக்கதக்கது.

'சாத்து' என்பதற்கு திரள், வணிகர் கூட்டம் என்று பாட்டும் தொகையும் (இலக்கிய அகராதி) பொருள் தருகிறது **(பாட்டும் தொகையும், ப.79)**. இதனால், வணிகர்களைக் கொன்று பொருள் கவரும் செய்தி பிற அகப்பாடல்களிலும் இடம் பெற்றிருப்பதால் 'வருநர்' என்பது வணிகர்களையும் குறிக்க சங்க இலக்கியத்தில் பயன்பட்டிருப்பது உறுதியாகிறது. மேலும், வணிகர்களைக் குறிக்க வம்பலர், ஆறுசெல் வம்பலர், ஆறுசெல் மாக்கள், வம்ப மாக்கள், வழங்குநர், களையுநர் போன்ற சொற்களும் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

வருநர், வம்பலர் போன்றோரைப் போர்புரியச் செல்லும் அயல்நாட்டு வீரர்கள், ஒற்றுப்பார்ப்பதற்காக மறைந்து இருப்பவர்கள் என்று பொருள்கொள்ள நிறைய சாத்தியங்கள் உள்ளன என்று பாவெல் பாரதி கருதுகிறார் **(முகில்நிலவன் (தொ.ஆ.), தமிழ் இலக்கியத்தில் குற்றப்பரம்பரையினர், ப.174)**. ஆனால், இதற்கான சாத்தியக்கூறுகள் மிக குறைவே.

பாலைவழியில் செல்லும் வணிகர்கள் தம் பொருள்களைப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல சில வீரர்களைத் தம்மோடு அழைத்து வருகின்றனர். இவர்களை வயவர்கள் என்பர். 'வயவன்' என்பதற்குப் பாட்டும் தொகையும் (இலக்கிய அகராதி) வீரன், படைத்தலைவன் என்று பொருள் கூறுகிறது **(பாட்டும் தொகையும், ப.145)**. 'வயவர்' என்ற சொல் சங்க இலக்கியத்தில் 23 இடங்களில் இருப்பதைச் சங்க இலக்கியத் தொடரடைவைக் கொண்டு அறிய முடிகிறது.

வணிகர்களோடு பாதுகாப்பிற்காக வரும் வயவர்கள் பகைவர்களோடு போரிட்டு இறந்தால், அவர்களுக்கு நடுகல் நட்டுள்ளனர் என்று வெ.கேசவராஜ் கருதுகிறார். ஆனால், இதற்குச் சான்றுகள் இல்லை என்று அவரே பதிவு செய்கிறார் **(வெ.கேசவராஜ், தென்னிந்திய வீரக்கற்கள், ப.85)**.

வணிகர்களுக்கும் பொதிசுமந்து வரும் கழுதைக் கூட்டத்திற்கும் பாதுகாப்பாக வரும் திருந்துவாள் கொண்ட வயவர்களை ஒரு பாடல் காட்சிப்படுத்துகிறது.

விளர் ஊன் தின்ற வீங்குசிலை மறவர்
மை படு திண் தோள் மலிர வாட்டி
பொறை மலி கழுதை நெடு நிரை தழீஇய

திருந்து வாள் வயவர் அருந் தலை துமித்த
படு புலாக் கமழும் ஞாட்பில், துடி இகுத்து,
அருங் கலம் தெறுத்த பெரும் புகல் வலத்தர்,
வில் கெழு குறும்பில் கோள் முறை பகுக்கும்
கொல்லை இரும் புனம் (அகம்.89:10-17)

பயணம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கும் பொதி சுமந்துவரும் நெடிய கழுதைக் கூட்டத்திற்கும் பாதுகாப்பாகத் திருந்துவாள் கொண்ட வயவர்கள் உடன்வருகின்றனர். இவர்களோடு கொழுப்பு நிறைந்த ஊனைத் தின்ற மறவர்கள், தங்களின் கருமை நிறம் பொருந்திய வலிமையான தோள்கள் பூரிக்க, வில் கொண்டு போரிட்டு அவர்களின் தலைகளை வெட்டினர்.

இப்பாடலின் ஆசிரியர் மதுரைக்காஞ்சி புலவர். இவர் ஆறலை கள்வர்களின் 'சாத்து எறி போர்' பற்றியும் அது நடந்த இடச்சூழல் பற்றியும் பதிவு செய்துள்ளார். இங்கு மருதனிளநாகனார் அகம்.387-வது பாடலில் 'வில் ஈண்டு அருஞ்சமம்' என்று குறிப்பிடுவது நினைவுகூறத்தக்கது. வில் கொண்டு நடந்த அரிய போர் இந்தச் 'சாத்து எறி போரா'கவும் இருக்கலாம்.

முடிவுரை

ஒரு புலவன் தேவையற்ற காட்சியைத் தன் பாடலில் பதிவு செய்வதில்லை. அந்தவகையில் மருதனிளநாகனாரின் 'முதுவாய்ப் பல்லி' என்னும் இப்பதிவு உருவகத் தன்மை கொண்டது. 'நிரை நிலை நடுகற் பொருந்தி இமையாது இரை நசைஇக் கிடந்த முதுவாய்ப் பல்லி' என்ற வரி 'வருநர்ப் பார்க்கும் வன்கண் ஆடவரோ'டு பொருந்துவதைக் காணலாம்.

பல்லியானது நடுகல்லில் பொருந்தி இருப்பதால் போரில் இறந்து நடுகல்லான வீரனைப் பல்லியாகவும் பல்லியின் இரையைப் பொருள் கொண்டுவரும் வணிகராகவும் புலவர் காட்சிப்படுத்துகிறார். நடுகல்லான அவ்வீரன், பொருள்களோடு பயணப்பட்டு வரும் வணிகர்களின் பாதுகாப்பிற்காக உடன்வரும் 'திருந்துவாள் வயவர்'களை அழித்து தானும் இறந்துபட்டு கல்லாகியிருக்க வேண்டும். 'வில் ஈண்டு அருஞ்சமம்' என்று இப்போர் வில் கொண்டு நடந்திருப்பதாக மருதனிளநாகனார் கூறுகிறார். மருதனிளநாகனாரின் 6 நடுகல் பாடல்களில் இப்பாடலில் மட்டும்தான் போரைக் குறிக்கும் 'சமம்' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இதனால், இந்நடுகல், ஆநிரை கவர் வீரனுடையதாக இருக்க முடியாது.

ஆகோள் பூசலில் ஈடுபட்டு மரணம் அடையும் வீரருக்கு மட்டும்தான் நடுகல் வைக்கும் வழக்கம் உள்ளது என்பது பெரும்பாலான ஆய்வாளர்களின் கருத்தாகும். ஆனால், ஆநிரை கவர்வோர் மட்டுமன்றி 'சாத்து எறி போரி'ல் இறந்த ஆறலை கள்வருக்கும் நடுகல் நடும் வழக்கம் இருந்திருப்பது மருதனிளநாகனாரின் 'முதுவாய்ப் பல்லி' என்னும் இக்குறியீட்டின் வழி உறுதியாகிறது.

துணை நூற்பட்டியல்

1. கேசவராஜ், வெ. *தென்னிந்திய வீரக்கற்கள். சென்னை: காவ்யா பதிப்பகம். (முதற்பதிப்பு). 2008.*

2. சாமிநாதையர், உ. வே., உரை ஆசிரியர். *குறுந்தொகை: மூலமும் உரையும். சென்னை: உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம். (எட்டாம் பதிப்பு). 2020.*

3. சாமிநாதையர், உ. வே., பதிப்பு ஆசிரியர். *பத்துப்பாட்டு: மூலமும் உரையும். சென்னை: உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம். (ஒன்பதாம் பதிப்பு). 2019.*

4. பூங்குன்றன், ர., சசிகலா, கோ. *கொற்றவையும் நடுகற்களும். சென்னை: சிந்தன் புக்ஸ். (முதற்பதிப்பு). 2019.*

5. பூங்குன்றன், ர. *தொல்குடி - வேளிர் - அரசியல். சென்னை: ஹெரிடேஜ் டிரெஷர் பப்ளிஷர்ஸ். (இரண்டாம் பதிப்பு). 2016.*

6. முகில் நிலவன், ஆசி. தொகுப்பு *தமிழிலக்கியத்தில் குற்றப்பரம்பரையினர். மதுரை: பாலை பதிப்பகம். (முதற்பதிப்பு). 2014.*

7. ராஜ் கௌதமன். *ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும். சென்னை: நியூ சென்சுவரி புக் ஹவுஸ் நிறுவனம். (முதற்பதிப்பு). 2018.*

8. ராஜ் கௌதமன். *பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழுச் சமூக உருவாக்கமும். சென்னை: நியூ சென்சுவரி புக் ஹவுஸ் நிறுவனம். (முதற்பதிப்பு). 2018.*

9. ராஜம், எஸ். *பாட்டும் தொகையும். சென்னை: மர்ரே அண்டு கம்பனி. (முதற்பதிப்பு). 1958.*

10. வேங்கடசாமி நாட்டார், ந. மு., உரை ஆசிரியர். *அகநானூறு: மூலமும் உரையும். சென்னை: பாரதி பதிப்பகம். (முதற்பதிப்பு). 2022.*

மு. சத்தியா. *சென்னைப் பல்கலைக்கழகம் தமிழ் இலக்கியத்துறையில் முனைவர் பட்ட ஆய்வு செய்து வருகிறார். பண்டைய தமிழ்ச் சமூகத்தில் ஆகோள் பூசலும் நடுகற்களும் என்பது இவரின் ஆய்வு. தொல்லியல் மற்றும் கல்வெட்டு எழுத்தில் பட்டயப் படிப்பையும் முடித்துள்ளார். சங்க இலக்கியம், இலக்கிய வரலாறு, தொல்லியல், மானிடவியல் முதலான துறைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கல்வெட்டுகள், நடுகற்கள், ஓலைச்சுவடிகள் முதலானவற்றை வாசித்தல் தொடர்பாகவும் இயங்கி வருகிறார்.* **sathyamurugan0507@gmail.com**

பட்டறைப்பெரும்புதூர் அகழாய்வு

முனைவர் ஜெ.பாஸ்கர்

முனைவர்
ஜெ. பாஸ்கர்

ஆய்வுச்சுருக்கம்

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர்களில் ஒன்று, பட்டறைப்பெரும்புதூர், திருவள்ளூரிலிருந்து மேற்கில் திருத்தணி செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கே தெற்கு - மேற்காக கொற்றலையாறு செல்கிறது.

திறவுச்சொற்கள்

பட்டறைப்பெரும்புதூர், திருவள்ளுவர், கொசஸ்தலை, உறைக்கிணறு, Black and Red ware

அமைவிடம்

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர்களில் ஒன்று, பட்டறைப்பெரும்புதூர், திருவள்ளூரிலிருந்து மேற்கில் திருத்தணி செல்லும் சாலையில் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் மேற்கே தெற்கு - மேற்காக கொற்றலையாறு செல்கிறது

ஊரின் வரலாற்றுப் பின்னனி

பெருமூர் என்று பல்லவர் காலத்தில் அழைக்கப்பட்டதை, இங்குள்ள பல்லவ மன்னன் அபராஜித வர்மன் (கி.பி. 900) கல்வெட்டு கூறுகிறது. இதில் இவ்வூர் தொண்டை மண்டலத்தில் உள்ள ஈக்காட்டுக் கோட்டத்தில் பெருமூர் நாட்டைச் சார்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கனின் (கி.பி. 1070) கல்வெட்டு இவ்வூரைச் சிம்மலாந்தக சதுர்வேதி மங்கலம் என அழைக்கிறது.

தொல்லியல் முக்கியத்துவம்

தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டம், கற்கால வரலாற்றுக்குச் சான்றுபகரும் முதன்மை மாவட்டம். ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட கற்காலக் குடியிருப்புகள் இப்பகுதியில் அமைந்துள்ளன. அத்திரம்பாக்கம், குடியம், வட மதுரை, நெய்வேலி, பரிக்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்ற தொல்லியல் அகழாய்வுகள், கற்கால மனிதர்களின் வாழ்வியலை எடுத்துரைக்கின்றன. அத்தகைய சிறப்புடைய திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ள இவ்வூரிலும், அக்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகளும், சங்க காலத்திய தொல்பொருள்களும், பழங்கால மண்பாண்டங்களும் கிடைக்கின்றன. மேலும், பல்லவர் காலக் கோயில்களும், சோழர் காலக் கல்வெட்டுகளும் இக்கிராமத்தில் உள்ளன.

அகழாய்வுகள்

தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில் பழந்தமிழர் பண்பாடு, அன்றாட வாழ்வியல் நடைமுறைகளை முழுவதுமாகத் தெரிந்துகொள்ளவும், கெற்றலையாற்றின் நாகரிகத்தினை வெளிப்படுத்தவும் தமிழ்நாடு அரசு

கற்கருவிகள்

தொல்லியல் துறை அகழாய்வுப் பணியை முன்னெடுத்தது. 2015-16, 2017-18 ஆகிய இரு பருவங்களில் இங்கு அகழாய்வு நடைபெற்றுள்ளது. மொத்தம் 33 அகழாய்வுக் குழிகள் (சுமார் 825 ச.மீ. பரப்பளவு) அமைக்கப்பட்டு 1,404 தொல்பொருள்கள் கிடைத்துள்ளன. இதில் பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் ஆகிய காலங்களைச் சேர்ந்த கற்கருவிகள், இரும்புக் கருவிகள், எலும்பு, கண்ணாடியால் செய்யப்பட்ட மணிகள், சூதுபவளம், பளிங்கு, செவ்வந்திக்கல் ஆகிய அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகள், சங்கு வளையல்கள், சுடுமண் பொம்மைகள், விளையாட்டுப் பொருள்கள், சுடுமண் காதணிகள், சில்லுகள், செம்புப் பொருள்கள், யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட கழுத்தணி, சீப்பு, எலும்பில் செய்யப்பட்ட பொருள்கள், அம்மிக்கல், தீட்டுக்கற்கள், தேய்ப்புக் கற்கள், முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் வெளியிடப்பட்ட செப்புக் காசு உள்ளிட்ட தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கருப்பு சிவப்பு பானை ஓடுகள் (Black and Red ware), கருப்புநிறப் பானை ஓடுகள் (Black ware), மெருகூட்டப்பட்ட கருப்புப் பானை ஓடுகள் (Black polished ware), சிவப்புநிற மண்பாண்ட ஓடுகள் (Red ware), செம்பழுப்புப் பூச்சு கொண்ட சிவப்புநிற மண்பாண்ட ஓடுகள் (Russet coated painted ware), சிவப்பு வண்ணம் பூசப்பட்ட பானை ஓடுகள் (Red slipped ware), கூம்பு வடிவ சாடிகளின் (conical jars) மூடிப்பகுதிகள், ரோமானிய நாட்டு சுழல் வடிவங்கள் வரையப்பட்ட ரௌலட்டட் மண்பாண்டங்கள் (Rouletted ware), கூரை ஓடுகள், குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள், தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புள்ள பானை ஓடுகள் ஆகியனவும் இந்த அகழாய்வில் கிடைக்கப்பெற்றன.

செங்கற்களால் கட்டப்பட்ட கிணறு

வட்டவடிவில் 2.85 மீட்டர் ஆழத்தில் காணப்பட்ட இக்கிணற்றின் விட்டமானது சுமார் 2.60 மீட்டர் (வெளிப்புறம்), 220 மீட்டர் (வெளிப்புறம்) அளவைக் கொண்டுள்ளது. செங்கல் கட்டுமானம் 56 அடுக்குகள்; கிணற்றின் மொத்த ஆழம் சுமார் 391 மீட்டர். செங்கலுக்கென்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிலையான அளவீடுகள் இல்லை. சரிவக வடிவிலான செங்கற்கள் (trapezoidal bricks) அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சராசரியாக செங்கற்களின் நீளம் – 24 செ.மீ., உட்புற அகலம்-23 செ.மீ., வெளிப்புற அகலம்-26 செ.மீ., கனம்-7 செ.மீ. என அளவீடுகள் கொண்ட செங்கற்கள் பெருமளவில் உள்ளன. வட்ட வடிவிலான கிணற்றை அமைப்பதற்காக இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுமானம் ஒற்றைக்கல் சுவருடன் அமைக்கப்பட்டுள்ளது. கிணற்றின் ஆழப்பகுதியில், செங்கல் கட்டுமானத்திற்கு அடுத்ததாக சுமார் 1.19 மீட்டர் (உட்புறம்) விட்டத்தைக்கொண்ட இரண்டு சுடுமண்ணாலான உறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

உறைக்கிணறு

28 உறைகள் கொண்ட உறைக்கிணறு

உறைகளின் உயரம் சுமார் 30 செ.மீ. ஆக உள்ளது. கிணற்றின் கடைசிக் கட்டுமானப் பகுதி வரை அகழாய்வு செய்ததில் மேற்கூறிய விவரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தற்போது கிணற்றின் சுடுமண்ணாலான உறைகளின் மட்டம் வரை தண்ணீர் சுரந்து தேங்கி நிற்கிறது.

இக்கிணற்றின் அமைப்பும் கட்டுமானமும் மிக நேர்த்தியாக உள்ளன. மேல் மூன்று அடுக்குகளில் மட்டும் செங்கற்கள் உதிர்ந்துள்ளன. நான்காவது அடுக்கிலிருந்து 56 அடுக்கு வரை தொடர்ச்சியாக செங்கற்கள் சிறு சேதாரமுமின்றிக் காணப்படுகிறது. ஒரு அடுக்கில் சராசரியாக 32 செங்கற்கள் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. கிணற்றின் நடுப்பகுதியில் வடகிழக்குப் பக்கமாக கட்டுமானமானது, சிறிதே உள்பக்கம் சரிந்த நிலையில் உள்ளது. கிணற்றின் அடித்தளத்தில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இந்நிலை ஏற்பட்டிருக்கலாம். செங்கல் கட்டுமானமானது அடித்தளத்தில் நேரடியாக அமைக்கப்பட்டுள்ளது. எவ்வித மரச்சட்டத்தின் மேலும் எழுப்பப்படாமல் மணலின் மீது நேரடியாக வைக்கப்பட்டு இக்கட்டுமானம் எழுப்பப்பட்டிருப்பது முதற்கட்ட ஆய்வில் தெரியவருகிறது.

தமிழகத்தில் சங்க காலத்தைச் சேர்ந்த 56 வரிசைகளுடன் கூடிய செங்கல் கட்டுமானம் கொண்ட முதல் கிணறு இதுதான். இக்கிணற்றின் உள்பகுதியில் மண்பாண்டங்கள், தொல்பொருள்கள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

உறைகிணறு

A 1 குழியில் சுமார் ஒரு மீட்டர் ஆழத்தில் 28 உறைகளுடன் கூடிய உறைகிணறு ஒன்று 2015-16ஆம் ஆண்டு அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது 23 உறைகள் மட்டுமே வெளிப்படுத்தப்பட்டன. தற்போது உறைகிணறு முழுவதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மொத்த ஆழம் தரைப்பகுதியிலிருந்து 6.10 மீட்டர் ஆக உள்ளது. உறைகிணற்றின் உயரம் 5.10 மீட்டராக உள்ளது. இது தமிழக அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஆழமான உறைகிணறுகளில் ஒன்றாக உள்ளது. ZH4/3 என்ற அகழாய்வுக் குழியில் 15 உறைகளுடன் கூடிய கிணறு ஒன்று 2.50 மீட்டர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கூம்பு வடிவ ஜாடிகள் (conical jars)

704/3, 703/1 ஆகிய குழிகளில் சுடுமண்ணாலான கூம்பு வடிவ சாடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 714/3 குழியில் சுமார் 12 சாடிகள் கிடைமட்டமான நிலையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

செங்கல் கிணறு

கூம்பு வடிவ ஜாடிகள்

பட்டறைப்பெரும்புதூர் அகழாய்வு தளம்

இவை பெரும்பாலும் உடைந்த நிலையில் உள்ளன. 713/1 குழியில் இரண்டு சாடிகள் முழுமையாக நல்ல நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன. இதே குழியில் உடைந்த நிலையில் ஏழு சாடிகள் ஆய்வில் வெளிப்பட்டன.

அகழாய்வு 2022-23

இங்கு மேற்கொண்ட அகழாய்வுகள் குறுகிய நிலப்பரப்பில் (*small scale excavation*) செய்யப்பட்ட அகழாய்வுகளாகும். எனினும் தமிழக வரலாற்றுக்கு முக்கியத் தரவுகளை அளித்தன. இவ்விடத்தின் தொல்லியல் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு விரிவான அகழாய்வை (*Large scale excavation*) மேற்கொள்ள தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை முடிவெடுத்து ஆணையரின் வழிகாட்டுதலின்படி முனைவர் ஜெ.பாஸ்கர் தலைமையிலான அகழாய்வுக் குழு மீண்டும் இவ்விடத்தில் அகழாய்வை மேற்கொண்டுள்ளது.

இவ்வகழாய்வில் இதுவரை 26 குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனைமேடு என்று அழைக்கப்படும் தொல்லியல் மேட்டில் நான்கு குழிகளும் இருளந்தோப்பு என்ற பகுதியில் 22 குழிகளும் அமைக்கப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 1,100 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கற்காலக் கற்கருவிகள், இரும்புக்கால மண்பாண்டங்கள், வரலாற்றின் துவக்க காலத்தைச் சேர்ந்த பல்வேறு வகையான தொல்பொருள்கள், இடைக்காலத் தொல்பொருள்கள் எனப் பழங்கால மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் சான்றுகள் கிடைத்துள்ளன. பத்துக்கும் மேற்பட்ட கூம்பு வடிவ சாடிகள், சுடுமண் சிற்பங்கள், நூற்றுக்கும் மேற்பட்ட கீறல் குறியீடுகள் கொண்ட மண்பாண்ட ஓடுகள், வணிகத்தொடர்பை வெளிப்படுத்தும் ரௌலட்டட் வகை மண்பாண்டங்கள், கார்னீலியன், குவார்ட்ஸ், படிகத்தினாலான கல்மணிகள், கண்ணாடி மணிகள் உள்ளிட்ட தொல்பொருள்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பல்வேறு காலகட்டங்களை வெளிப்படுத்தியிருப்பினும் வரலாற்றின் துவக்க காலத்தைச் சேர்ந்த, அதாவது சங்க காலத்தில் (இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த) வாழ்ந்த மக்களின் வாழ்வியலுக்கு அதிகச் சான்றுகள் கிடைத்துள்ளன.

அகழாய்வு சிறப்புகள்

1. கூம்பு வடிவ சாடிகளில் துளையிடப்பட்ட சாடி ஒன்றும் கிடைத்துள்ளது. காஞ்சிபுரத்தில் நடைபெற்ற அகழாய்வில் இதுபோன்ற கூம்பு வடிவ சாடிகள் கிடைத்துள்ளன. ரோமானிய நாட்டைச் சேர்ந்த ஆம்போரா வகை சாடிகளைப் போன்று (imitated jars) சாடிகள் செய்து பயன்படுத்தும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது. திரவப் பொருள்களான மது, எண்ணெய்

உள்ளிட்டவற்றை வைப்பதற்கும், மதுபானங்களைப் பதப்படுத்துவதற்கும் இந்தச் சாடிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. ரோமானியர்கள் போன்ற வெளிநாட்டினரோடு வணிகத் தொடர்புடைய பண்டைய நகரங்களில் மட்டுமே கிடைக்கக்கூடிய ரௌலட்டட் வகை மண்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன. சுடுமண்ணாலான இரண்டு உறை கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

3. இதில் ஒரு கிணறு, 28 உறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட உறைகிணறுகளில், அதிக எண்ணிக்கையிலான உறைகள் கொண்ட கிணறாக விளங்குகிறது.

4. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்தைச் சேர்ந்த செங்கற்களால் கட்டப்பட்ட பெரிய அளவிலான கிணறு பட்டறைப்பெரும்புதூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது சிறப்புமிக்க கண்டுபிடிப்பாகும். வட்ட வடிவிலான இக்கிணறு மிக நேர்த்தியாக சரிவக வடிவிலான செங்கற்களைக் கொண்டுக் கட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இதுவரை 140க்கும் மேற்பட்ட இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்றுள்ளது. ஆனால், முதல்முறையாக செங்கற்களால் கட்டப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த கிணறு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். வீடுகள், கோட்டைகள், மாட மாளிகைள் போன்ற கட்டுமானங்களைக் குறிப்பிடும் சான்றுகள் சங்க இலக்கியங்களில் உள்ளன. ஆனால், அவை இருந்ததற்கான சான்றுகள் சரிவர கிடைக்கவில்லை. அரிக்கமேடு, பூம்புகார், அழகன்குளம், கீழடி அகழாய்வுகளில் மிகவும் சொற்ப அளவிலான கட்டுமானத் தடயங்களே கிடைத்துள்ளன. இவ்வகையில் பட்டறைப்பெரும்புதூரில் தற்போது கண்டுபிடித்திருக்கும் செங்கற்களால் கட்டப்பட்ட கிணறு, தமிழகத் தொல்லியல் வரலாற்றில் ஒரு புதிய மைல்கல்லாகும். இதுவரை பெரிய அளவிலான முழுமையான கட்டட அமைப்பு, தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் கிடைக்கப்பெறவில்லை. இக்கட்டட அமைப்பிலிருந்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பழந்தமிழரின் கட்டடக் கலையின் நுண்ணறிவையும், கட்டுமானத் திறனையும், கிணறு வடிவமைக்கும் முறையினையும், குடிநீருக்காக கிணறுகள் வெட்டப்பட்டு பயன்படுத்திய வரலாற்றுத் தகவலையும் பெற முடிகிறது.

5. பழங்கற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் ஆகிய காலங்களைச் சேர்ந்த கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்மூலம் லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே கற்கால மக்கள் இப்பகுதியில் வாழ்ந்திருப்பது தெரிய வருகிறது.

6. ஒரே இடத்தில் கற்கால வாழ்வுக்குச் சான்றுபகரும் கண்டுபிடிப்புகளும், வரலாற்றுக் காலத்தைப் பிரதிபலிக்கும் தொல்லியல் தடயங்களும் கிடைப்பது தொல்லியல் சிறப்புக்குரியது. கற்காலம் முதற்கொண்டு தற்போது வரை மக்கள், இங்கே தொடர்ச்சியாக வாழ்ந்துவருவதை அறிய முடிகிறது.

7. கொசஸ்தலையாற்றுக் கரையோரத்தில் அமைந்திருந்த நாகரிகத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வகழாய்வு அமைந்துள்ளது. இது பண்டைய தமிழரின் சமூக, வரலாறு,பண்பாட்டுக் கூறுகளுக்குச் சான்றாக உள்ளது.

முனைவர் ஜெ. பாஸ்கர் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் தொல்லியல் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். தொல்லியல் துறையில் முனைவர் பட்டம் பெற்ற இவர், தமிழகத்தின் முக்கியமான இடங்களான ஆதிச்சநல்லூர், பட்டறைபெரும்பதூர், அழகன்குளம் உள்ளிட்ட பல இடங்களில் அகழ்வாய்வு இயக்குநராகப் பணியாற்றியுள்ளார். அகழ்வாய்வில் விரிவான அனுபவம் கொண்டவர். இந்தியத் தொல்லியல் கழகத்திலும்(ASI) பணியாற்றியுள்ளார். மேலும், தொல்லியல் குறித்து ஏராளமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை, நூல்களை வெளியிட்டுள்ளார். தொல்லியல் துறையில் கற்பித்தல், பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல் உள்ளிட்டவற்றிலும் ஈடுபட்டு வருகிறார். **mallaijbaskar@gmail.com**

The Economic Impact of Temple Building during Chola Times

The Olakkur Fragment

J. Sreegururaj



J. Sreegururaj

Abstract

This article investigates the economic impact of temple building during the Chola period, a topic rarely explored despite the Cholas' significant contributions to temple architecture. Due to the scarcity and fragmentary nature of relevant inscriptions, direct economic information on temple construction is limited. This study focuses on an inscription from the Agastyesvarar temple at Olakkur, which offers crucial insights into the costs involved. The Olakkur inscription, dating to the 5th year of Kulottunga Choladeva II, details a grant of 100 Kalanju of gold by Rajendradeva II for constructing a stone temple (Tirukkarrali). It reveals that 50 Kalanju was spent to build the structure up to the panchanga level, after which the remaining 50 Kalanju was unaccounted for, leaving the temple unfinished. Subsequently, 20 Kalanju was used to install an image of Umaskandasahita due to the temple's lack of one. The article also references earlier and later donations, including a private donor in the 41st year of Kulotunga I who paved the garbhagriha and made other contributions. While acknowledging the fragmentary nature of the evidence, this research provides an initial indication of the approximate budgetary estimates for building a "ekatala" temple during the Chola era.

Keywords

Chola, Temple Building, Economic Impact, Olakkur, Inscriptions, Kalanju, Rajendradeva II, Kulottunga I, Kulottunga II, Temple Costs

Introduction

Chola inscriptions in a very broad sense, talk about land grants, grants for lighting perpetual lamps, tax assessments, grants for maintenance of temple lands etc. While several socio-politico-economic interpretations of the Chola times have been done by great scholars based on the inscriptions, very little has been investigated on the economic impact of temple building, despite the fact that the Cholas were the greatest temple builders in human history. This definitely is not without reason. There are hardly any inscriptions that talk about the economics of temple building activities and even if available, are fragmentary, thereby needing intensive interpretations which become tenable to debate, considering the fact that samples are too few in the ocean of inscriptions.

In this article, an earnest attempt is made to transgress the boundaries based on fragmentary but definitely credible inscriptions from the temple at Olakkur. The fragmentary piece of inscription at Olakkur is a glittering diamond on the subject, in the vast ocean of mostly monotonous Chola inscriptions.

Interpreting weights and measures

To appreciate the grants given by the Cholas, a familiarity is needed about the most expensive grants - gold and it was measured in Kalanju.

As per the 4th year inscription of Aditya II, 20 Kasus made 10 Kalanju. 2 [KAN – Pg 614] Also, 1 manjadi was equal to 2 Kundrinmani and 20 Manjadi was equal to 1 Kalanju. 2 [KAN – Pg 624]

Economic value of Kalanju - Wages for administrative staff

The Madras museum plates of Uttama Chola record a wage of one kuruni per day and two kalanjus per annum for clothes for a watchman. 2 [KAN – Pg 557]

The wages depended on the type of work and the intensity of skill involved. According to an inscription of Rajaraja at Brihadeeshwara, Thanjavur, each brahmachari serving the temple got one padakku (sixteen nalis) of paddy per day and four kasus (two kalanjus) of gold per year. 2 [KAN – Pg 558]

As loans to villages during famine

According the Alangudi inscription, the villagers borrowed 1011 Kalanju of gold and 464 palam of silver from the temple to sustain agriculture, during famine. 2 [KAN – Pg 562]

As fines

An inscription from the Nageswara swamy, Kumbakonam mentions an impost of 3,000 Kalanjus for the maintenance of the Chola - Pandya army levied upon the assembly of Tirukkudamukku as dandam by Madrai konda udaiyar. 6 [SRB Pg 134]

Olakkur - Agastyesvarar Temple

Location

The Agastyesvarar temple of Olakkur lies very close to the National Highway connecting Chennai and Tiruchi and 24 kms south of Melmaruvathur.

Oldest inscription at Olakkur

The oldest inscription seems to be one of 6 A.D. on a slab set up in the brahmin street. This is an indication that Olakkur predates the Cholas in its existence.

Inscriptions at Agastyesvarar temple

There are four inscriptions on the South, West and the Northern adhisthana.

Paving the floor during Kulotunga I- Southern wall

The earliest one on the southern basement is of the 41st year of Kulotunga I. (ARE 351, 1909). According to it,

> **"a private donor - kannapakkilan parpan ulaganandan paved the floor on the garbhagriha, set up the sripada-pithaa, neytangi and Consecrated an image of vigneshwara and gifted gold for a lamp to the temple of Tiru Agastesvaram udaiya Mahadevar at Ulakkiyur alais Rajamahendranallur"**

Noteworthy is that the contributions have all along been done by individual donors in the name of the King. The fact that this Inscription has been re-inscribed on the southern wall states its importance. I'm tempted to believe that this temple which was half finished despite the donation by Rajendra Deva II was brought back to worship by this donor. He paved the garbhagriha and gave several donations, including consecrating a Vigneshwara image and giving a gift of 5 Kalanju talks about his status in the society / possible royal affiliation.

Donation for building a stone temple

Inscriptions on the west wall - 5th year of Rajakesarivaraman Tribhuvana Kulottunga Choladeva II - forms the central axis of this research as it contains the crucial information.

ஸ்வஸ்தி ஸ்ரீ பூமேவு வளர்திருப் பொன்மார்பு புணர நாமேவு கலைமகள் நலம் பெரிது சிறப்ப விஜயமாமகள் வெல்புயத் திருப்ப இசையின் செல்வி எண் திசை வளர்ப நிரருபர்வந் திறைஞ்ச நீணில மடந்தையும் திருமணம் புணர்ந்து திரு வளர் திருமா மணிமுடி கவித்தென மணிமுடி சூடி மல்லை ஞாலத்து பல்லுயிர்க்கெல்லாம் எல்லையில் இன்பம் இயல்பினில் விளைப்ப வாழி பல்லூழி ஆழிநடப்ப செம்பொன் விஷவஸிங்காஸனத்து புவனமுழுது உடையாளொடும் வீற்றிருந்த அருளிய கோராஜ கேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலொத்துங்க சொழ தேவர்க்கு யாண்டு அஞ்சாவது

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஓயமா நாடான விஜய ராஜேந்திர வளநாட்டு உலக்கையூரான ராஜ மஹேந்திர நல்லூர் திருவகத்தீசஸ்வரமுடைய மஹாதேவர்க்கு திருக்கற்றளி எடுக்கைக்கு ராஜேந்திரதெவர் இவ்வூர் ஊராம் பக்கமல் தந்த பொன்னூற்றுக் கழஞ்சும் கொண்டு திருக்க

ற்றளி பஞ்சாங்கத்தளவும் செய்து பணியறுத்த பொனந் ஐம்பதின் கழஞ்சும் பொக்கி நிக்கிப்பொன ஐம்பதின் கழஞ்சும் கால் விரொத்தாலந்தரப்பட்ட பிந்பு திருக்கற்றளி செயமாட்டாது கிடந்தமயில் காலும் பிடாருஞ் செய்வார்களுமஞ் ஸ்ரீ மாஹெஷ்வருமந் திருக்கற்றளி செய வெணுமெனற்று துடர்ந்தடநத்து நாங்கள் செய

மாட்டாமையில் இப் பொந்நுக்கு செலவாக இக்கோயிலில் உமாஸ்கந்தஸஹிதந் திருமெனி யில்லாமையில் திருமெநி யெழுந்தருளுவிக்க இப்பொந் இருபதிந் கழஞ்சும் இத்தெவர்க்கு தேவதாநமாக விட்ட இவ்வூர் எரி எதிர்வாயில் வள்ளைவாயில் நிக்கி நிவந்தந் நெல்லை முற்றுக்குங் கொல்லை நிலம் இரு வெலிக்கு...

The inscription of Tribhuvana Chakravarthy Kulottunga Choladeva II - South Indian inscriptions volume 26 no. 374

Rajendra II (1052-1064 A.D.) gifts 100 Kalanju for building a temple at Olakkur

↓

The locals build the temple upto the panchanga in 50 Kalanjus and waste away the remaining 50 kalanjus

↓

The temple remains unfinished for several years and the frustrated artisans demand completion from the villagers.

↓

In the 41st year of Kulottunga I (1111 A.D), a private donor called kannapakkilan parpan ulaganandan paves the floor on the garbhagriha, sets up the sripada-pitha and a neytangi.

↓

Approx. 80 years later (assuming construction in 1058 A.D. - hey days of Rajendra II) in the 5th year of Kulotunga II (1138 A.D), the ur records the history of the temple through this inscription



One of the few surviving pictures (possibly the only one!) photographs of Olakkur, Agastyesvara before being badly renovated. Pic courtesy: Middle Chola Temples, S.R.Balsubhramanyam

The inscription is incomplete and it contains the prasasti of the King commencing with Pumevi valar tiruppon. It states that Irajendradevar gave 100 Kalanju of gold for raising a stone structure (Tirukkarrali) to Tiru Agastesvaram udaiya Mahadevar at Ulakkiyur in Vijaya Rajendra valanadu, a sub division of Jayangondasola mandalam. The money was entrusted to the ur of the place.

Of this sum a 50 Kalanju was expended to raise the structure up to the level of panchanga. The structure remained unfinished thereafter, because the balance 50 Kalanju was spent out in course of time. When the artisans and Sri Mahesvaras demanded that the stone structure should be finished, the ur people were unable to do that. To make good the loss, a sum of 20 Kalanju was spent to set up an image of Umaskandasahita in the temple as it lacked one. Then the inscription proceeds further to refer to a gift of two veli of land as devadana to provide for the services of the temple but stops.

Interpretation & Analysis

The fact that the villagers decided to record the donation by Rajendra deva, almost 80 years later (assuming construction in 1058 A.D. - hey days of Rajendra II) in the 5th year of Kulotunga II, registers their strong intent to record the history of their temple.

Chronological recap

It is also possible to infer that the temple at Olakkur must have been built of brick before it received the donation of Rajendra II, as it clearly states, “Tiru Agastesvaram udaiya Mahadevar kku Tirukkarrali edukkaikku”.

It also states that, “pon noorukk kalanju kondu”. So, we know that the cost of conversion of an eka tala temple during Rajendra deva was around 100 kalanjus. Considering the fact that it’s a grant from the emperor himself and that too for building a temple, the budgets would have been well estimated and not wanting for contribution from the public.

Further states that the work was stopped at the level of Panchanga after spending 50 Kalanjus.

The temple in its current form, is only upto to the adhisthana in stone. The temple of Olakkur seems to have been built of brick above the adhisthana, even during Chola days because the remaining amount given by Rajendra II was lost or wasted away.

There's a remark, "Tirukkarrali seiyyamaatadhu kidandhamayil". So, it's very certain that the temple lay unfinished for several years.

Since the villagers could not complete the activity, they installed an image of Umaskandasahita to the temple at 20 Kalanjus. Very direct evidence to the expenses incurred for making a bronze image.

While the next donor arrives only in the 41st year of Kulotunga I, the temple seems to have been reasonably funded even during Rajendra II's time. The incomplete section further talks about a devadana of two veli of land, along with the 100 Kalanju.

Conclusion

This work has been an earnest attempt at quantifying the economic impact of temple building based on Chola inscriptions. While the inscription at Olakkur has been the pivotal axis for this work, it is understood that it is fragmentary and one-off in the ocean of inscriptions. Similarly, stand-alone inscriptions at Tiruvadutarai, Gomukteswarar and Tiruvelvikudi, give similar leads though not as direct, as the one at Olakkur.

Scholars would say the sample size is too small to make any decisive conclusions. While the author agrees to that fact, it must also be understood that it at least gives us an indication of the rough budgetary estimates for building an ekatala. Until further un-read inscriptions with such related content are read, such fragmentary inscriptions shall remain our lead indicators!

Bibliography

1. Balasubrahmanyam, S. R. *Early Chola Art.* Bombay: Asia Publishing House, 1965.
2. Balasubrahmanyam, S. R. *Early Chola Temples: Parantaka I to Rajaraja I, 907-985.* New Delhi: Orient Longman, 1971.
3. Balasubrahmanyam, S. R. *Middle Chola Temples: Rajaraja I to Kulottunga I (A.D. 985-1070).* Faridabad: Thomson Press India Ltd., 1975.
4. Hoekveld-Meijer, G. Koyils in the Cholamandalam. Meppel: Krips Repro Meppel, n.d. *Māyāmatam, mutal pākam [Māyāmatam, Part One].* Thanjavur: Saraswati Mahal Library, 2014.
5. Meister, Michael W., and M. A. Dhaky. *Encyclopedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa.* Princeton: American Institute of Indian Studies, 1999.
6. Nilakanta Sastri, K. A. *The Cholas. 2nd ed.* Madras: University of Madras, 1955.
7. *South Indian Inscriptions. Vol. 19.* New Delhi: Archaeological Survey of India, various years.
8. *South Indian Inscriptions. Vol. 26.* New Delhi: Archaeological Survey of India, various years.
9. Subbarayalu, Y. *South India under the Cholas.* New Delhi: Oxford University Press, 2012.

J. Sreegururaj is an independent researcher on the Cholas. In the last two decades, he has studied, photographed and documented close to 200 Chola temples and writes about them in his blog. He has written several articles on the Cholas and is a regular speaker in several historical forums. He holds a Diploma in Archaeology & Epigraphy from the International Institute of Tamil Studies, Chennai and a certification from the Deccan College, Post Graduate and Research Institute, Pune, apart from a Masters in Science & Engineering. **sreegururaj@gmail.com**

சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல்

முனைவர் சுந்தர் கணேசன்

முனைவர்
சுந்தர் கணேசன்

ஆய்வுச்சுருக்கம்

ஜான் மார்ஷல் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைவராக இருந்த காலகட்டத்தில் (1902-1928) சிந்துவெளிப் பண்பாடு குறித்து உலகிற்கு அறிவிக்கப்பட்டது. தற்போதைய பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் உள்ள ஹரப்பா பகுதியில் தயாராம் சாஹ்னி (*Dayaram Sahni*) 1921-22 ஆம் ஆண்டில் அகழாய்வு மேற்கொண்டார். இக்குறிப்பிட்ட ஆண்டில் ராக்கல்தாஸ் பானர்ஜி (*RakhalDas Banerji*), மொகஞ்சதாரோ பகுதியில் அகழாய்வு மேற்கொண்டார். இந்த அகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருள்கள், முத்திரைகள் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமையகமாக இருந்த சிம்லாவுக்கு கொண்டு செல்லப்பட்டன. ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு இடங்களுக்கும் இடையிலான தூரம் 700 கி.மீ. ஆனால் இந்த இரண்டு இடங்களிலும் கிடைத்த முத்திரைகளிலும் தொல்லியல் பொருள்களிலும் மிகத் துல்லியமான ஒற்றுமைகள் காணப்பட்டன. இந்த ஒற்றுமைகளை ஆராய்ந்து உலகிற்கு அறிவித்தவர் ஜான் மார்ஷல்.

திறவுச்சொற்கள்

ஜான் மார்ஷல், சிந்துவெளி, ASI, திராவிடம், சாஞ்சி, பௌத்தம்

தொல்லியல் ஆய்வாளரான சர் ஜான் மார்ஷல், இலண்டனில் உள்ள கர்சன் பார்க் பகுதியின் எவர்டன் ஹவுஸில் 1876 மார்ச் 19 அன்று பிறந்தார். டல்விச் கல்லூரியிலும் கிங்ஸ் கல்லூரியிலும் கல்வி பயின்றார். பின்பு கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆய்வாளராகச் சேர்ந்தார் (1894). செவ்வியல் இலக்கியமும் தொல்லியலும் (1898-1900) பயின்றார். பிறகு, ப்ரெண்டர்காஸ்ட் கிரேக்க ஆய்வாளராக (*Prendergast Greek fellow-1900*), க்ரேவன் தொல்லியல் மாணவராகத் (*Craven archaeology student-1901*) திகழ்ந்தார். 1898 முதல் 1901 வரை ஏதென்ஸில் உள்ள பிரிட்டிஷ் கல்வியியல் கழகத்தில் இருந்தார். அதன்மூலம் கிரீட், கிரீஸ், தெற்கு துருக்கி முதலியவற்றில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளிலும் ஆய்வுகளிலும் பங்கேற்பும் பங்களிப்பும் செய்தார். மினோவன் (*Minoan*) நாகரிகத்தை வெளிகொணர்ந்த ஆர்தர் ஈவான்சுவிடம் (*Arthur Evans*) தொல்லியல் சார்ந்த பயிற்சிபெற்றார். கவர்னர் கர்சன் முன்னெடுப்பால் 1902ஆம் ஆண்டில், அவர் இந்தியாவில் தொல்லியல் துறையின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார். இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்பாக, அறுவை சிகிச்சை-பல் மருத்துவரான சர் ஹென்றி பெல் லாங்ஹர்ஸ்டின் (*Sir Henry Bell Longhurst*) மகள் ஃப்ளோரன்ஸை (*Florence*), மணந்தார். அவர் 1902 பிப்ரவரி 22 அன்று தனது பணியில் சேர்ந்தார். இந்தியத் துணைக்கண்டம் குறித்து எதுவுமே தெரியாமல் இந்தியாவிற்கு வரும்போது அவருக்கு வயது 26. தனது வாழ்நாளில் பெரும்பகுதியை இந்தியத் துணைக்கண்டத் தொல்லியல் வளர்ச்சிக்கு அர்ப்பணித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பழங்காலக் கட்டமைப்புகள், தொல்பொருள்கள், சிற்பங்கள், ஓவியங்கள் முதலியவை கவனிப்பாரற்றுக் கிடந்த காலகட்டத்தில் மார்ஷல் இந்தியாவிற்கு வந்தார். அவர் வந்தபின்பு, முதலில்

சர் ஜான் ஹூபர்ட் மார்ஷல்

பண்டைய தொல்லியல் தளங்களைப் பாதுகாத்தல், அவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சரிசெய்தல், தேவைப்பட்டால் சீரமைத்தல் என்ற செயல்பாடுகளை மேற்கொண்டார். இத்துடன் அவர், இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்றுவரும் அகழாய்வுப் பணிகளை மேற்பார்வையிட்டார். மேலும் தொல்பொருள்களைப் பாதுகாத்தல், சீரமைத்தல் செயல்பாடுகளையும் மேற்கொண்டார். மேலும், ஒவ்வொரு மாகாணத்திலும் தேவைப்படும் சிறப்புத் தேவைகளைக் கண்டறிந்து, அவற்றிற்கு உதவியும் ஆலோசனைகளும் வழங்கினார். நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல், அருங்காட்சியத்தை உருவாக்குதல் முதலியவற்றில் சிறப்புக் கவனம் செலுத்தினார்.

மத்திய இந்தியாவில் உள்ள சாஞ்சி பௌத்த தலத்தை சீரமைத்தார். அதன்வழி புதிய ஆராய்ச்சிகளுக்கு வழியமைத்தார். 1913இல் தட்சசீலத்தில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட அவர், 1918இல் அங்கே கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பொருள்களைக் கொண்டு ஓர் அருங்காட்சியத்தை உருவாக்கினார். அதன் ஆராய்ச்சிகள் 1951இல் வெளிவந்தன. அவர் மேற்கொண்ட ஒட்டுமொத்த செயல்பாடுகளில் தட்சசீலம், சிந்துவெளி ஆகிய இரண்டு அகழாய்வுகள் சிறந்த பங்களிப்புகளாகும். முகலாய காலத்தைச் சேர்ந்த கல்லறைகள், அரண்மனைகள், அவற்றின் இன்றியமையாத அம்சமாக உருவாக்கப்பட்ட தோட்டங்கள் முதலியவற்றை மீட்டெடுத்ததில் அவர் பங்கு முக்கியமானது. அவர் மேற்கொண்ட பணிகள் ஒரு முன்மாதிரிச் செயல்பாடாக, பின்னால் வந்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவர் பல தொல்லியலாளர்களுக்குப் பயிற்சியும் அளித்தார்.

ஜான் மார்ஷல் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைவராக இருந்த காலகட்டத்தில் (1902-1928) சிந்துவெளிப் பண்பாடு குறித்து உலகிற்கு அறிவிக்கப்பட்டது. தற்போதைய பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் உள்ள ஹரப்பா பகுதியில் தயாராம் சாஹ்னி (*Dayaram Sahni*) 1921-22ஆம் ஆண்டில் அகழாய்வு மேற்கொண்டார். இக்குறிப்பிட்ட ஆண்டில் ராக்கல்தாஸ் பானர்ஜி (*RakhalDas Banerji*), மொகஞ்சதாரோ பகுதியில் அகழாய்வு மேற்கொண்டார். இந்த அகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருள்கள், முத்திரைகள் இந்தியத் தொல்லியல் கழகத்தின் தலைமையகமாக இருந்த சிம்லாவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஹரப்பா, மொகஞ்சதாரோ ஆகிய இரு இடங்களுக்கும் இடையிலான தூரம் 700 கி.மீ. ஆனால் இந்த இரண்டு இடங்களிலும் கிடைத்த முத்திரைகளிலும் தொல்லியல் பொருள்களிலும் மிகத் துல்லியமான ஒற்றுமைகள் காணப்பட்டன. இந்த ஒற்றுமைகளை ஆராய்ந்து உலகிற்கு அறிவித்தவர் ஜான் மார்ஷல்.

1924 செப்டம்பர் மாதம், தி இல்ஸ்ட்ரேடட் லண்டன் நியூஸ் (*The Illustrated London News*) என்ற இதழில், ஜான் மார்ஷல் சிந்துவெளிப் பண்பாட்டை உலகிற்கு அறிவித்தார். மார்ஷலின்

அறிவிப்பு இரண்டு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. முதலில் வரலாற்றெழுத்தியலில் ஒரு முக்கியமான திருப்பத்தைக் கொண்டுவந்தது. இரண்டாவது, இருவேறு இடங்களில் கிடைத்த தொல்பொருள்களை ஒருசேர ஒப்பிட்டுப் பார்த்தல் எனற முறையியலைக் கொண்டுவந்து, அதன்வழி ஒரு முக்கியமான கருத்தியல் வெளியிட்டது. சிந்துவெளிப் பண்பாடு முதன்முதலாக அறிவிக்கப்பட்ட போதே அதன் தோற்றத்தோடும் தொன்மையோடும் தொடர்புடையவர்கள் திராவிடர்கள் என்று கூறப்பட்டது. அதிலும் முதன்மையானவர் ஜான் மார்ஷல். அவரைத் தொடர்ந்து சுனிதி குமார் சாட்டர்ஜி, பியெரோ மெரிஜி, ஹென்றி ஹீராஸ், யூரி கொநொரொசோவ், கமில் சுவலபில், அஸ்கோ பர்போலா, ஐராவதம் மகாதேவன், ஃபிரான்க் சவுத்வொர்த், டேவிட் மெக்கால்பின், வால்ட்டர் ஃபேர்சர்விஸ் எனப் பல அறிஞர்கள் திராவிடக் கருதுகோளை முன்னெடுத்துள்ளனர். அவ்வகையில் சிந்துவெளியில் திராவிடக் கருதுகோளுக்கு வித்திட்டவர் சர். ஜான் ஹூபர்ட் மார்ஷல்.

மார்ஷல் தனது தொடக்கக் காலத்திலிருந்தே தொடர்ந்து முக்கியமான தொல்லியல் வெளியீடுகளை வெளிக்கொண்டு வருவதில் ஆர்வத்துடன் செயல்பட்டார். தொல்லியல் ஆண்டறிக்கைகளையும் (1903-04 முதல் 1920-21 வரை) எழுதியுள்ளார்.

1902-03 முதல் 1915-16 வரை, 1915-16, 1923-24, 1926-27 ஆகிய ஆண்டுகளில் இந்தியத் தொல்லியல் கழகத்தின் ஆண்டறிக்கைகளுக்கு அறிமுகம், தொகுப்புப் பணிகளையும் செய்துள்ளார்.

இத்துடன் இந்தியத் தொல்லியல் கழகத்தின் ஆண்டறிக்கைகளில் 7 ஆய்வுக்கட்டுரைகளை

சர் ஜான் மார்ஷல் சிலை திறப்பு விழா

எழுதியுள்ளார். தி இல்லஸ்ட்ரேட்டட் லண்டன் நியூஸ் (The Illustrated London News) இதழில் 5 கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். வேறுசில இதழ்களிலும் கட்டுரைகள் எழுதியுள்ளார். இத்துடன் தான் மேற்கொண்ட அகழாய்வுகளுக்கான அறிக்கைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

தொல்லியல் சின்னங்களான கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள், கட்டிடங்கள், சிலைகள் உள்ளிட்டவற்றைப் பாதுகாக்கவும் புனரமைக்கவும் 1923ஆம் ஆண்டு சர் ஜான் மார்ஷல் எழுதி வெளியிட்ட CONSERVATION MANUAL: A handbook for the use of Archeological Officers and others entrusted with the care of ancient monuments என்கிற கையேடுதான் இன்றுவரையும் நடைமுறையில் இருந்துவருகிறது. தொல்லியல் அலுவலர்கள் முதல் ஆர்வலர்கள் வரை தொல்லியல் சின்னங்களைப் பாதுகாக்க விழையும் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல் இது. ஜான் மார்ஷல் செய்த குறிப்பிடத்தக்க பணிகளில் இந்தச் சிறு

கையேட்டின் பங்கு அதிமுக்கியமானது.

ஜான் மார்ஷல் தனது காலத்தில் எடுத்த புகைப்படங்களில் பெரும்பாலானவை தர்காம் (Durham) பல்கலைக்கழகத்தில் உள்ளன. அப்புகைப்படங்களின் வழியாக, முதலில் கண்டுபிடிக்கப்பட்டபோது அவற்றின் நிலை, பாதுகாக்கப்பட்டு சீரமைக்கப்பட்ட பிறகான நிலை குறித்து நுணுக்கமான செய்திகளை வழங்குகிறது.

ஜான் மார்ஷல் 1910இல் கம்பேரிஸன் ஆஃப் தி ஆர்டர் ஆப் தி இந்தியன் எம்பயர் (Companion of the Order of the Indian Empire) ஆக நியமிக்கப்பட்டார். 1914இல் Knight பட்டம் பெற்றார். 1921இல் கொல்கத்தா பல்கலைக்கழகம் கௌரவ முனைவர் பட்டம் வழங்கியது. 1927இல் ஆண்டு மதிப்புறு விரிவுரையாளராக கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியில் நியமிக்கப்பட்டார். 1936இல் ஃபெல்லோ ஆஃப் தி பிரிட்டிஷ் அகாடமி (Fellow of the British Academy) ஆக நியமிக்கப்பட்டார். இவை தவிர இன்னும் பல விருதுகளையும் பட்டங்களையும் தனது ஆய்வுப்புலமைக்காகப் பெற்றார். 1958 ஆகஸ்ட் 17 அன்று அவோண்டேலில் உள்ள தனது இல்லத்தில் இறந்தார்.

சர் ஜான் மார்ஷல் அவர்களின் பணிகளையும் சேவைகளையும் நினைவுகூரும் விதமாக, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் அவருக்குச் சிலை அமைக்கப்படும் என 2025 ஜனவரி மாதம் நடைபெற்ற சிந்துவெளிப் பண்பாட்டு கண்டுபிடிப்பு நூற்றாண்டு நிறைவு பன்னாட்டுக் கருத்தரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார். அதன்படி அரசு முதன்மைச் செயலரும் தொல்லியல் துறை ஆணையருமான திரு. த. உதயசந்திரன் இ.ஆ.ப. உள்ளிட்டோர் மேற்பார்வையில் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட சிலையை, ஜான் மார்ஷலின் 149ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, மார்ச் 19 அன்று முதலமைச்சர் திறந்து வைத்தார்.

துணை நூற்பட்டியல்

1. Chakrabarti, Dilip K. *A History of Indian Archaeology from the Beginning to 1947*. New Delhi: Munshiram Manoharlal, 1988.

2. Guha, Sudeshna, ed. *The Marshall Albums: Photography and Archaeology*. Ahmedabad: Mapin Publishing, 2010.

3. Lahiri, Nayanjot. *"John Marshall's Appointment as Director-General of the Archaeological Survey of India: A Survey of the Papers Pertaining to His Appointment."* South Asian Studies 13 (1997): 127–139.

4. Lahiri, Nayanjot. *"Coming to Grips with the Indian Past: John Marshall's Early Years as Lord Curzon's Director-General of Archaeology in India, Part I."* South Asian Studies 14 (1998): 1–23.

5. Wheeler, Mortimer. *"Marshall, Sir John Hubert (1876–1958)."* Oxford Dictionary of National Biography, 2004.

முனைவர் சுந்தர் கணேசன் *ஓர் ஆவணக்காப்பாளர். ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநரான இவர், தமிழ்நாடு அரசு உருவாக்கிய மாநில நூலகக் குழுவின் துணைத்தலைவராகப் பணியாற்றி வருகிறார். 'The Tall Man: Biju Patnaik' என்ற நூலை எழுதியுள்ளார், புகழ்பெற்ற மெக்காலே அறிக்கையைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார், பல்வேறு கட்டுரைகளை முன்னணி இதழ்களில் வெளியிட்டுள்ளார். இவரின் முனைவர் பட்ட ஆராய்ச்சியானது காலனிய காலக் கல்வி வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது.*
sundargee@rmrl.in

கல்வெட்டாய்வாளர்
யூஜின் ஜூலியஸ் தியடோர் ஹூல்ஷ்
வாழ்வும் பணியும்

முனைவர் மார்க்சிய காந்தி

*முனைவர்
மார்க்சிய காந்தி*

ஆய்வுச்சுருக்கம்

தமிழகக் கோயில் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளை ஆவணப்படுத்தும் முயற்சி 1887ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டியல் ஆண்டறிக்கை மூலமாகத் தொடங்கியது. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் பதிப்பிக்கப்பட்ட இந்த ஆய்வறிக்கைகளில் கல்வெட்டு, செப்பேடுகளில் எழுதப்பட்டவை பிரதியெடுத்துப் பதிப்பிக்கப்பட்டன. இந்த ஆய்வறிக்கைகளில் பெரும்பாலானவற்றுக்குப் பங்களித்தவர் யூஜின் ஜூலியஸ் தியடோர் ஹூல்ஸ்.

திறவுச்சொற்கள்

ஹூல்ஸ், கல்வெட்டுப்படி, தஞ்சாவூர், பெரியகோயில், ராஜராஜன்

சென்னை மாகாணத்தின் முதன்மை கல்வெட்டாய்வாளராகப் போற்றப்பட்ட பெருமைக்குரியவர் யூஜின் ஜூலியஸ் தியடோர் ஹூல்ஷ்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் கல்வெட்டுகளுடன் கூடிய கோயில்கள் அதிகமுள்ளன. தமிழ்நாட்டில் கோயில்கள் சார்ந்த கல்வெட்டுகளில் 60 சதவீதம் சமயப்பணிகளோடு தொடர்பில்லாதவை. உரிமையியல், குற்றங்களுக்கான தீர்ப்புகள், பாசனத்துக்கான நீர்பகிர்வு உரிமைகள், வரி விதிப்புகள், நிர்வாகச் செய்திகள் அடங்கியவையாகவே பெரும்பாலான கல்வெட்டுகள் இருந்துள்ளன. பனை ஓலைகளில் எழுதிய ஆவணங்கள் சீக்கிரமே அழிந்துபடும் நிலையில் இருந்ததால் நிலையான ஆவணப்படுத்தலுக்கு கல்வெட்டுகள் பயன்பட்டுள்ளன.

தமிழகக் கோயில் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளை ஆவணப்படுத்தும் முயற்சி 1887ஆம் ஆண்டு இந்தியக் கல்வெட்டியல் ஆண்டறிக்கை மூலமாகத் தொடங்கியது. இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையால் பதிப்பிக்கப்பட்ட இந்த ஆய்வறிக்கைகளில் கல்வெட்டு, செப்பேடுகளில் எழுதப்பட்டவை பிரதியெடுத்துப் பதிப்பிக்கப்பட்டன. இந்த ஆய்வறிக்கைகளில் பெரும்பாலானவற்றுக்குப் பங்களித்தவர் யூஜின் ஜூலியஸ் தியடோர் ஹூல்ஸ்.

ஹூல்ஷ், 1857 மார்ச் 29 அன்று ஜெர்மனியின் டிரெஸ்டனில் பிறந்தவர். அங்குள்ள சேக்ரட் கிராஸ் கல்லூரியில் படித்து 1874இல் செவ்வியல் - கீழைத்தேய மொழிகள் படிப்பதற்காக லிப்சியா பல்கலைக்கழகம் சென்றார். படிப்பை முடித்து வியன்னா திரும்பிய அவருக்கு சமஸ்கிருதம் மீதான நாட்டம் துவங்கியது. சமஸ்கிருதம் தொடர்பிலான ஆர்வத்தில் இந்தியாவுக்குச் சில பயணங்களை மேற்கொண்டார். 1886இல் சென்னை மாகாண அரசின் கல்வெட்டாய்வாளராகப் பொறுப்பேற்றார். 1920 வரை ஓயாமல் பணியாற்றிய அவர், 1927 ஜனவரி 16 அன்று ஹாலேயில் காலமானார்.

சென்னை மாகாண அரசில் பொறுப்பேற்றவுடன் மெட்ராஸ் அருங்காட்சியகத்தில் உள்ள பௌத்தக் கல்வெட்டுகளை ஆய்வுசெய்யத் தொடங்கினார். ஹூல்ஷ் எழுதிய கடிதங்களிலிருந்து அவரது ஆய்வு அணுகுமுறை தெரியவருகிறது. அவர் ஆய்வுக்குச்



ஹாகன் ஜூலியஸ் தியோடோர் ஹூல்ஷ்

சென்ற கிராமங்களில் பனை ஓலைகளில் எழுதப்பட்டிருந்த பத்திரங்களை உள்ளூர் மக்கள் உதவியுடன் பார்வையிட்டார். அவர் மேற்கொண்ட கல்வெட்டியல் ஆய்வுக்கு இவை தொடர்பில்லாமல் இருந்தாலும் தமிழர்களின் வாழ்வியலைப் புரிந்துகொள்வதற்கு இவை உதவின. சமஸ்கிருதம், தமிழ் இரண்டு மொழிகளிலும் புலமைபெற்ற வி. வெங்கய்யாவை 1887 ஏப்ரல் 30 அன்று உதவியாளராகப் பெற்றார். ஹூல்ஷும் வெங்கய்யாவும் இணைந்த இருவர் அணிதான் பல்லவ மன்னர்களால் மாமல்லபுரம் உருவாக்கப்பட்டதையும், இராஜராஜ சோழனால் தஞ்சை பெருவுடையார் கோயில் கட்டப்பட்டதையும் கண்டறிந்து உலகத்திற்கு அறிவித்தது. காஞ்சி கைலாசநாதர் கோயில் பல்லவர்களுடையது என்ற அறிவிப்பு மெட்ராஸ் மெயில் பத்திரிகையில் 1887இல் முதல்முறையாக வெளியிடப்பட்டது.

கோயில்களுக்குள் நுழைவதும், கோயிலை அடையும் பயணவழிகளும், தங்குமிடங்களும் சிக்கலாக இருந்த ஒருநூற்றாண்டில் ஹூல்ஷ் குழுவினர் தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர். கைவிடப்பட்ட கோயில்களுக்கருகே கள்ளிப் புதர்களுக்குள் கிடைத்த உடைந்த கற்களைப் பார்வையிட்டதையும், இருண்டு கிடக்கும் சன்னிதிகளில் தவழ்ந்து நகர்ந்து கல்வெட்டுகளைப் படியெடுத்த அனுபவங்களையும் பதிவுசெய்துள்ளார்.

ஹூல்ஸ் இந்தியாவில் பணியாற்றிய காலத்தில்தான் பெருந்திரளான இந்தியக் கல்வெட்டியல் ஆய்வு மாணவர்களை அத்துறைக்குத் ஊக்குவித்தார். உதவி கேட்டு வரும் மாணவர்கள் எல்லாருக்கும் தனது அறிவைத் திறந்து பகிர்வதில் ஆர்வமாக இருந்தவர்.

ஹூல்ஷ், வெங்கய்யா இருவரின் பணிகளில் உதவிசெய்த இந்தியர்களும் தாராளமாக அவரது அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளனர். பண்டிதர் எஸ்.எம். நடேச சாஸ்திரி, சமஸ்கிருத கல்வெட்டுகளை மொழிபெயர்ப்பதற்கு உதவியிருக்கிறார். செங்கல்பட்டு கோயில்களுக்குள் சென்று பார்வையிடுவதற்கு மாவட்ட ஆட்சியராக இருந்த இ.சி. ஜான்சனும் உதவியுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஸ்ரீரங்கம், திருவானைக்காவல் உள்ளிட்ட கோயில்களில் உள்பிரகாரங்களில் ஹூல்ஸ் அனுமதிக்கப்படாத நிலையில் உதவியாளர் வெங்கைய்யாதான் கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ள தகவல்களும் நமக்குக் கிடைக்கின்றன. 1901ஆம் ஆண்டளவில் அவருக்குக் கூடுதலாக உதவியாளர்கள் கிடைத்தனர். இதன்மூலம் கர்நாடகம்,

கேரளம், ஆந்திரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு அவரது பயணங்கள் விரிந்தன. அவருக்குக் கிடைத்த உதவியாளர்களில் முக்கியமானவர் டி.ஏ. கோபிநாத ராவ்.

விஜயநகர கல்வெட்டுகளை முழுமையாகப் படியெடுக்க முடியாமல் போனது ஹூல்ஷ் அவர்களின் நிலைத்த துயரங்களில் ஒன்று. அந்தக் கல்வெட்டுகள் மீது வெள்ளையடித்திருந்ததால் அவற்றைப் படியெடுக்க முடியாமல் போனதைக் குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதிகள் வெளியீடு குறித்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சுப்பிரிவு மதிப்பாய்வில், "கடுமையான உழைப்பாளியாகவும், விரைவான முடிவுகளுக்கு ஆட்படாதவராகவும், தன் பணியின் முழுப்பரிமாணத்தையும் அறிந்தவராயும் இருந்ததை, அவர் அளித்த காலாண்டு அறிக்கைகள் காட்டுகின்றன. நிதானம், உழைப்பு, கவனத்தோடு அவருக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றியதன் மூலம் தென்னிந்தியாவின் வரலாற்றினை வார்த்தெடுப்பதில் அவரது முழு கவனத்தையும் உள்ளீடு செய்துள்ளார். பொறுமையாக பணிமேற்கொண்டதன் மூலம் பணியின் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்துள்ளார்," என்று எழுதியிருப்பது இவரது பதிப்புப் பணியின் செம்மையை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. அதுபோல அவர் மறைந்தபோது ஸ்டென் கோனா தீட்டிய இரங்கல் செய்தியில், "அவர் எழுதிய புத்தகங்களும் ஆய்வுக் கட்டுரைகளும் இடைவிடாத நேர்மையான பணியின் வெளிப்பாடு. அவருக்கிருந்த கூர்ந்த அறிவு, ஆழ்ந்த கல்விப் பயிற்சி, திடமான, நுட்பமான, பிசிறு இல்லாத, ஆழமான ஆய்வுத்திறன் ஆகிய பண்புகள், அவரை கல்வெட்டாய்விற்கு மிகப் பொருத்தமானவராகச் செய்தன. இந்தியக் கல்வெட்டாய்வியல் இன்றைய உச்சநிலையினை எட்டுவதற்கு அடிப்படையான பெரும் பங்களிப்பினைச் செய்தவர்," ஹூல்ஷ் என்று சிறப்பிப்பது மிகப் பொருத்தமானது.

அவரது படைப்புகள்

கல்வெட்டு நூல்கள்

1. சென்னை அருங்காட்சியக பௌத்தக் கல்வெட்டுகள். (தேதி குறிப்பிடப்படவில்லை). சென்னை: அரசு அருங்காட்சியகம்.
2. தென்னிந்திய கல்வெட்டு தொகுதி. தொகுதிகள் *1–3*. சென்னை: அரசு அச்சகம். 1890–1893
3. தொல்காப்பியக் கல்வெட்டு ஆண்டறிக்கைகள். சென்னை: அரசு அச்சகம். 1887–1903.
4. பார்ஹூத் கல்வெட்டுகள். "*இந்தியன் ஆன்டிகுரி,*" எண் 2. பம்பாய்: இந்திய தொல்பொருள் ஆய்வுச்சங்கம். 1892.
5. மூவரி கல்வெட்டுத் தொகுப்பு (Corpus Inscriptionum Indicarum). தொகுதி *1. கல்கத்தா: இந்திய அரசுத் துறை.* 1925
6. எபிகிராபியா இன்டிகா. *துணைப் பதிப்பாசிரியர்:* தொகுதி *1; பதிப்பாசிரியர்:* தொகுதிகள் *5 முதல் 8 வரை மற்றும்* தொகுதி *9ன் முதல் இரு* பகுதிகள். புது டெல்லி: இந்திய தொல்பொருள் ஆய்வுச்சங்கம். 1892–1907.

சமஸ்கிருத சுவடிகள்

தென்னிந்தியாவின் சமஸ்கிருத கையெழுத்து பிரதிகளின் அறிக்கைகள் (1895 முதல் 1905 வரை) மூன்று தொகுதிகள். இவை தற்போது ஆக்ஸ்போர்டில் போட்லைன் நூலகத்தில் உள்ளன. பிற சமஸ்கிருத நூலாய்வு பதிப்புகளும் மொழிபெயர்ப்பும்:

1. அஸ்வகோஷரின் புத்தசரிதம். *திறனாய்வுக் குறிப்புகளுடன் ஜெர்மானியத்தில் ZDMG எண் 72.* 1918.
2. அன்னம்பட்டரின் தர்க்க சங்கிரஹம். *ஜெர்மானிய மொழிபெயர்ப்பு.* 1907.
3. பாஸ்கரின் தர்க்க கௌமதி. *Journal of German Oriental Society எண் 61.* 1907.
4. பரிமளா. *பாரிஜாதமஞ்சரி நூலுக்கு இலக்ஷ்மணசூரி எழுதிய உரை.* 1907.
5. பிராக்கிருத ரூபாவதாரம். *பிராக்கிருத மொழி இலக்கணம் – வால்மீகி சூத்திரத்தின் அடிப்படையில் சிம்மராசரால் எழுதப்பட்ட நூல்.* 1909.

6. பௌதாயன தர்மசூத்திரம். இருபதிப்புகள். 1884, 1922.
7. கல்ஹணரின் இராஜதரங்கிணியின் பிழிவுகள். *இந்தியன் ஆன்டிகுரி எண் 18. 1889.*
8. காளிதாசரின் மேகதூதம். வல்லபதேவர் உரையுடனும் சமஸ்கிருத ஆங்கில அகராதியுடனும் – *ராயல் ஏசியாடிக் கழக இதழ், மீண்டும் இணைக்கப்பட்ட குறிப்புகளுடன் 1912.* 1911.
9. சௌந்தரானந்தா. *ஜெர்மானியத்தில் ZDMG எண்கள்: 72-74.* 1918-1920.
10. வசந்தராஜ சாகுனம். *ஜெர்மானிய மொழியில்.* 1879.
11. மதனரின் பாரிஜாதமஞ்சரி. *கல்வெட்டு பொறிப்பிலிருந்து எபிகிராபியா இன்டிகா எண்:8.* 1906
12. மாளிகார்ச்சுனர், மல்லிநாதசூரி உரையுடன் மாகரின் சிசுபாலவதம். *இவரது இறுதிக் கட்டுரையான 'சிசுபாலவததத்தின் சாங்கியமும் யோகமும்' அவரது மறைவிற்குப் பின் அவரது எழுபதாம் அகவை நாளில் வெளியிடப்பட்டது.* 1929.
13. விஸ்வநாத தர்க்க பஞ்சானனரின் பாஷாபரிச்சேதம். *Journal of Oriental Society எண் 74.* 1920.

முனைவர் மார்க்சிய காந்தி *துணை மேற்பார்வை தொல்லியலாளராக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவர் தமிழ் மொழியில் பல ஆய்வு நூல்களையும் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். மேலும், இந்தியத் தொல்லியல் கழகத்தால் வெளியிடப்பட்ட தென்னிந்தியக் கல்வெட்டுகளின் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.* **epimarxi@gmail.com**

Virtual Reality as a Tool

For Digital Archiving and Preservation in Archaelogical Research

Dr. S. Deepika

Dr. S. Deepika

Abstract

The integration of virtual reality (VR) in archaeological research has revolutionized the way historical sites and artifacts are documented, analysed, and preserved. VR provides an immersive and interactive method for digital archiving, allowing researchers, students, and the public to explore archaeological sites virtually without risking damage to delicate remains. This technology improves documentation accuracy through 3D modelling and spatial analysis, offering deeper insights into cultural heritage. Additionally, VR enhances remote accessibility, making archaeological data available to a wider audience while helping preserve endangered or hard-to-reach sites. This paper explores the role of VR in digital archiving and assesses its potential impact on the future of archaeological research.

Keywords

Archaeology, Virtual Reality, Documentation, 3D modelling, Spatial analysis, Digital archiving, Paleoenvironment, Museology

Introduction

In recent years, archaeology has experienced significant growth in the use of new technologies, with Virtual Reality (VR) standing out as one of the most revolutionary. While traditional methods in archaeology often involve physical excavation and the study of material objects, these approaches face challenges such as site degradation, limited access, and the irreversible nature of excavation itself. To address these issues, VR presents an innovative way to digitally archive and preserve archaeological discoveries in a virtual, interactive, and non-invasive manner. By using VR, archaeologists can create highly detailed 3D models of artifacts, buildings, and entire archaeological sites. These virtual representations not only protect delicate or endangered cultural heritage but also allow researchers to easily access, analyse, and share archaeological data. Converting physical artifacts and sites into digital forms helps overcome barriers related to space, time, and location, enabling global access to cultural information. Additionally, VR can recreate ancient environments, providing valuable insights into how past societies lived, interacted, and developed.

Applications of VR in Digital Archiving for Archaeology

Virtual Site Reconstructions

Virtual site reconstructions are an innovative tool in modern archaeology, allowing researchers to create detailed 3D digital models of ancient sites and structures. These models help in studying, interpreting, and preserving archaeological sites

Virtual Site Reconstruction, Ullastret site Spain

while providing scholars and the public with an immersive glimpse into the past. By using advanced technologies like 33D modelling, *Geographic Information Systems (GIS), and Virtual Reality (VR),* these reconstructions offer valuable insights into how ancient civilizations lived, interacted, and built their environments. The process begins with collecting data from archaeological sites using non-invasive techniques such as laser scanning, photogrammetry, and aerial surveys. These methods allow archaeologists to accurately record the dimensions, materials, and landscape of a site without disturbing fragile artifacts. The collected data is then used to build 3D digital models that recreate how these sites may have looked in their original form.

3D Modelling of Artefacts and Structures

Virtual Reality (VR) enables the creation of highly detailed, 3D digital models of artifacts, structures, and entire archaeological sites. These models preserve intricate details that may be challenging to observe or maintain physically due to environmental damage, aging, or handling risks. By using advanced imaging techniques like *photogrammetry and laser scanning,* researchers can generate accurate digital replicas that provide valuable insights into historical objects and structures.

One of the key advantages of VR in archaeology is its ability to allow researchers to



3D Modelling of Artefacts

manipulate these models without physically handling fragile artifacts. Scholars can examine objects from multiple angles, analyse wear patterns, and conduct virtual experiments to understand how an artifact was used or how a site evolved over time. This not only reduces the risk of damage but also enables more comprehensive analysis than traditional methods. Additionally, VR technology facilitates the virtual restoration of damaged or incomplete artifacts. Using digital reconstructions, archaeologists can visualize how broken or eroded objects might have originally looked, filling in missing details based on historical references, similar artifacts, or AI-assisted predictions. This helps in understanding cultural and artistic developments, offering a clearer picture of past civilizations.

Archaeological Education Tool

By transforming historical data into interactive, immersive experiences, VR allows students, researchers, and the general public to engage with archaeology in ways that were previously impossible. One of the most significant applications of VR in education is the ability to conduct virtual tours of historical and archaeological sites. Users can explore ancient cities, monuments, and ruins in a highly detailed 3D environment, experiencing the scale, architecture, and cultural significance of these sites firsthand. This is especially valuable for locations that are difficult to access due to their remote locations, preservation concerns, or high travel costs. Instead of relying solely on textbooks or images, students can walk through a virtual recreation of sites like the pyramids of Egypt, gaining a more immersive understanding of history. Also, VR-based digital archives enhance inclusivity in education. They allow individuals who may not have the financial means or physical ability to travel to renowned archaeological sites to still experience and learn from them. Museums and universities can integrate VR experiences into their curriculum, enabling students to conduct virtual excavations, examine digital reconstructions of artifacts, and interact with historical settings as if they were physically present.

Understanding Ancient Environments

Through advanced digital modelling, researchers can recreate past landscapes, climate conditions, and human activities, providing deeper insights into how ancient societies interacted with their surroundings. This application of VR allows scholars to test hypotheses, analyse environmental factors, and better understand the relationship between geography,

Archaeological Education Tool



Interactive Exhibitions and Museums



Understanding Ancient Environments

climate, and human civilization. One significant benefit of environmental simulations in VR is the ability to visualize and study how ancient communities adapted to their environments. By reconstructing landscapes, including forests, rivers, deserts, and settlements, researchers can explore how factors such as climate change, natural disasters, and resource availability influenced human behaviour. Furthermore, VR-based historical reconstructions enable scholars to analyse the long-term impact of environmental changes on cultural and societal evolution. By simulating weather patterns, seasonal variations, and natural events such as droughts, floods, or volcanic eruptions, researchers can study their effects on agriculture, migration, and urban planning. This helps in understanding how ancient civilizations thrived, adapted, or declined in response to their changing environments.

Artifact Preservation and Digital Archiving

In archaeology, preserving artifacts is a major challenge. Many ancient objects, monuments, and sites face threats from environmental damage, physical wear, theft, and natural disasters.



The graph illustrating the bar chart illustrating the key applications of VR technology in Archaeology.

While traditional conservation methods are useful, they can be expensive, time-consuming, and sometimes risky for fragile artifacts. Virtual Reality (VR) offers a modern solution by enabling digital preservation and archiving. With VR, artifacts can be stored in their current state, allowing researchers, educators, and the public to explore them without the risk of damage. This process involves 3D scanning or photogrammetry, where high-resolution images or laser scans are used to create detailed digital models. These models accurately capture the size, shape, colour, and texture of the original artifacts, ensuring that even the smallest details are preserved for future study and education.

Interactive Exhibitions and Museums

VR can transform traditional museum displays into interactive exhibitions. Instead of simply viewing artifacts behind glass, visitors can interact with 3D models of these objects, zooming in on fine details, rotating them, and even exploring their original context. This hands-on experience helps to bring artifacts to life, making them more engaging and memorable. This interactive approach aids in understanding the functional aspects of artifacts, such as how ancient tools were used or how ceramics were crafted.

Conclusion

Virtual Reality (VR) is revolutionizing digital archiving and preservation in archaeological research. By creating detailed 3D models of artifacts, structures, and historical sites, VR helps document and protect cultural heritage for the long term. This technology reduces risks associated with environmental damage, theft, and natural disasters while also making historical sites more accessible to researchers and the public through virtual exploration. Furthermore, VR enables virtual restorations, providing valuable insights into artifacts that have been lost or damaged over time. Although challenges like high costs and data accuracy remain, advancements in VR, photogrammetry, artificial intelligence, and cloud storage continue to improve its effectiveness. As digital preservation becomes more important in archaeology, VR serves as a powerful tool for protecting and sharing cultural heritage with future generations.

Bibliography

1. Barceló, Juan A., Maurizio Forte, and Donald H. Sanders, eds. *Virtual Reality in Archaeology: Computer Applications and Quantitative Methods in Archaeology.* Oxford: BAR Publishing. 2000.

2. Chandra, Keshaw. *Evolution of Museums and Museology.* Delhi: Writers World. 2023.

3. Conolly, James, and Mark Lake. *Geographical Information Systems in Archaeology.* Cambridge: Cambridge University Press, 2006.

4. Goodwin, Graham, and Nicola Lercari. "Reconstructing Past Experience Using Virtual Reality." *In Horizons of Phenomenology,* 325–336. Cham: Springer. 2023.

5. Linda, Nesi. *3D Laser Scanning Technology in Buildings Archaeology.* Saarbrucken: LAP Lambert Academic Publishing. 2014.

6. McCarthy, John K., Jonathan Benjamin, and Trevor Winton, eds. *3D Recording and Interpretation for Maritime Archaeology.* Cham: Springer Open, 2019.

7. Williamson, Ray A., and Paul R. Nickens, eds. *Science and Technology in Historic Preservation. New York: Springer. 2000.*

8. Winesmith, Keir, and Suse Anderson. *The Digital Future of Museums.* New York: Routledge. 2020.

9. Woolf, Alex. *The Impact of Technology in History and Archaeology.* Oxford: Raintree Publishers. 2016.

Dr. S. Deepika is an Assistant Professor in the History Department at Madras Christian College (Autonomous), Chennai, specializing in Archaeology and Museology. She holds a PhD from the State Department of Archaeology, Government of Tamil Nadu (University of Madras) and a master's degree in Ancient Indian History, Culture, and Archaeology from Deccan College Post Graduate and Research Institute, Pune. She also serves as a visiting professor at the International Institute of Tamil Studies and Research, Chennai,contributing to Tamil heritage studies. With a deep passion for research, Dr. Deepika has published extensively in academic journals and conferences. Her scholarly contributions include a book chapter on tourism and Sustainable Development Goals (SDGs), focusing on gender equality and zero hunger. Her expertise in archaeology has led to significant discoveries, including a Pallava Grantha inscription at Mahendravadi and a rare Chola painting at the Thiruvottiyur temple, adding valuable insights to South Indian history. She has also played a key role in organizing and coordinating workshops and heritage walks. **sdeepikaarchy@gmail.com**

Department of Archaeology
Government of Tamil Nadu
Tamil Valarchi Valaagam, Thamizh Salai,
Egmore, Chennai-600 008

Roja Muthiah Research Library

Indus Research Centre

3rd cross road, CPT Campus,
Taramani, Chennai-600 113